* * * எடுபட்டுப்போச்சுது. மற்ற இரண்டு ஆலயமும் பிற்காலம் வெகு நாள் அபிஷேகம் நடந்துவந்தது. முன் அக்ஷய ஸ்ரீ க்ஷாமத்தில், . . இருந்த ஜைநர்கள் நியாய . ,

(கு-பு.)—

இந்நூல் ஜைனர்களுடைய ஊர் இன்னின்னவை யெனவும் அவைகளின் பெயர்களையும் அவைகளிலுள்ள ஜைனக் கோவில்களையும் இன்னும் சில விசேஷங்களையும் எடுத்து உணர்த்துகின்றது. இதில் ஏடுகள் மிகவுஞ் சிதலுற்றுள. முன்னும் பின்னுமாகச் சில ஏடுகளில்லை. எழுத்துப் பிழைகளுடன் உளது. இது மெகன்ஸி துரையாற் சம்பாதிக்கப்பட்டு டைலர் துரையின் காட்லாக்கில் 81 ஆம் பக்கத்தில் 2334 ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ளது. முற்றுமில்லை.

இடையில் "இந்தச் சாபிதா சகாப்தம்—௲௬௱௯௰௮ ௵க்கு மேல் தாது ௵ மார்கழி மாஸம் ௰௨ எழுதிக்கொடுத்தது கைபீயத்து" என்ற இவ்வாக்கியம் காணப்படுகிறது.

No. 2747. தொட்டிய மதுரைக் காளியம்மன் பூர்வ வரலாறு.
TOṬṬIYA MADURAIKKĀḶIYAMMAN PŪRVA VARALĀṞU.

Substance, palm-leaf. Size, 15 × 1 inches. Pages, 18. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old. Extent, 100, granthas.

Complete.

An account of the temple of Maduraikkāḷiyamman of Toṭṭiyam, Viṭṭukkatti taluk.

In this manuscript it is said that a **paṇḍāram** who came to Toṭṭiyam from the north was living on alms and used to take rest in the shade of a tree near the site of present temple.

In his dream two Brahmin girls about seven years old appeared before him, and told him to throw away his rags, bowl, etc., to bathe and go to the bazaar where a merchant would give him the things necessary for offering cooked rice to them as part of their worship. One of them also advised the **paṇḍāram** to dig under the anthill nearby, where their images would be found, that she was the goddess Kāḷi but was called **Madurai Kāḷiyamman** as she stayed at Madura for many years and that the other was her sister *Aḻakunaycciyamman* also called Śellāṇḍiyamman and that they would bless the people who worshipped them.

The **paṇḍāram** dug under the anthill, found also a third image, viz., that of god **Aiyanār** consecrated them in a temple and continued to worship them. The manuscript gives the names of the persons who built the various parts of the temple.

Same work as that described under No. 2340 of Taylor's Catalogue of the Mackenzie's collection of Manuscripts, Vol. III, p. 157.

Beginning :

விட்டுக்கட்டி தாலூகாவிற் சேர்ந்த தொட்டிய மதுரைக்காளியம்மன் பூர்வ வரலாறு.

ஆதியிலே நடந்த ஆகமப்படிக்கு எங்கள் பெரியவர்கள் சொன்ன விபரங்கள் என்னவென்றால் சுக்க . . . . . நாளையிலே இந்தக் கோவிலுக்கு மேற்புரம் குளத்தங்கரை தெற்கு வடக்காயிருக்கிறது. அந்தக் குளத்தங்கரை . . . சரிவிலே ஒரு புத்தும் சங்கஞ் செடியும் குன்றி மரத்து நிழலும் இருந்தது. அந்த நிழலிலே , . . னனமயப் பண்டாரம் வடக்கேயிருந்து வந்து ஊரிலே யாசகம் பண்ணிக்கொண்டு தினமும் வந்து படுத்திருப்பான்.

அவன் சொப்பனத்திலே ஏழு வயசிலே இரண்டு பார்ப்பாரப் பெண்கள் பிராமண . . . . வந்து முன்னே நின்று அடே பண்டாரம்! ஏன் இவ்விடத்திலே நீ பசியோடே பட்டினிகிடக்கிறாய் நான் சொன்னபடி கேட்ப்பாயானால் உனக்குச் சீவனத்துக்கு இடம் சொல்லுகிறேன். உன் கலையத்தையும் மலையாளத்து கொட்டாச்சியும் உன் கந்தத்துணியையும் எறிந்து போட்டுத் தலையை முழுகிப்போட்டுக் கடைவீதிக்குப் போனால் செட்டியுடனே சொல்லி வட்டி கொடுக்கச் சொல்லுகிறேன் * * * * * * சட்டி கொடுப்பான். அதை வாங்கிவந்து எனக்குப் பொங்கல் வச்சு நைவேத்தியம் பண்ணி நீ சாப்பிடு என்று சொன்னவுடனே அந்தப் பண்டாரம் நீங்கள் யார்வர்? நீங்கள் எந்த ஊர்? நீங்கள் எங்கேயிருக்கிற பேர்கள்? என்று கேட்டதற்கு நாங்கள் வடக்கே மகாமேருக்கிட்டே மகாகாளிங்கன் பர்வதமிருக்கிறது. அதிலே வெகுநாளாய்ச் சிவனுடனே நடனம் பண்ணிப் பிற்பாடு மதுரைக்கு வந்து வெகுகாலமிருந்தோம். அதன் பிறகு அகண்ட காவேரி ஸ்நாநம்பண்ணவேணுமென்று வந்து இந்தத் தீரவாசங்களைப் பிரபலப்படுத்தவேண்டுமென்று வந்தோம். என் பேர் **மகாகாளி.** மதுரைக்கு வந்து வெகுகாலமிருந்தபடியினாலே என் பேர் **மதுரைக்காளியம்மன்.** என் தங்கச்சிக்கு **அழகுநாச்சியம்மன்** என்று பேர். நாங்கள் இரண்டுபேரும் இந்தக்காவேரி தீரத்திலே இருந்து வாசம்பண்ணவேணுமென்று வந்தோம்.

இவ்விடத்திலே வெகு காரணங்களெல்லாம் நடக்கப்போகின்றன. நான் இந்தச் சங்கம் புதைப்புத்துக்குள்ளே குன்றிமரத்தடியிலே இருக்கிறேன். என்னைச் சோதித்துப் பார்த்துக்கண்டு பூசை பண்ணுவாயானால் நீ கேட்ட வரமுங்கொடுத்து யாராருக்கு என்ன வரம் கொடுக்கச் சொல்லுகிறாயோ அந்தப்படிக்கு என் விபூதி கொடுத்தவுடனே அந்தப்படி கொடுத்து உன்னையும் புத்திர பவுத்திர தலைமுறையாய்க் காபாற்றிக்கொள்ளுகிறேன் என்று சுவப்பனத்திலே சொன்னாள்.

அந்தப்படிக்குச் சங்கம்புதையும் புத்தையும் சோதித்துப் பார்க்கிறபோது அதுக்குள்ளே இரண்டு அங்குலத்துக்குக் கீழே மதுரைகாளியம்மனும் கூடத்துணையாக வந்த செல்லாண்டியம்மனும் ஐயனாரும் அந்தப் புத்துக்குக் கீழேயிருந்தார்கள். அதை அந்தக் கன்னடியப்பண்டாரம் சிறிது காலம் அவர்கள் சொன்னமுறை தப்பாதபடிக்குப் பூசை பண்ணிக்கொண்டு வருகிறநாளையிலே * * * * * * * * *

End :

அதன் பிறகு திருமலைநாதப் பிள்ளையும், குப்பக்காளி பிள்ளையும், அழகப்பெருமாள் பிள்ளையும், பாகப்பிள்ளையும், சிதம்பரநாத பிள்ளையும் மகாமண்டபம் கட்டிவைத்தார்கள். அதன் பிறகு முத்தையன் பிள்ளை யில்லாததினாலே புத்திரபாக்கியம் வந்தபிறகு பெரிய மண்டபம் கட்டு வித்தான். அதன் பிறகு மாதேவி தேவராய ரெட்டியார் சுற்றுமதிலும் கோபுரத்துக்கு அடியும் கட்டிவைத்தார். அன்று முதல் இன்றைவரைக் கும் கிழ்ச் சமுத்திரம் மேல் சமுத்திரம் வரைக்கும் குடியடிமை நடந்து வருகிறது.

மதுரை காளியம்மன் துணை.

(கு.பு.)—

இது விட்டுக்கட்டி தாலூக்காவிற் சேர்ந்த தொட்டியம் என்றவூரில் மதுரைக் காளியம்மன் என்னும் தேவி கோயில்கொண்ட வரலாற்றினை யும் அத்தேவிக்கு மண்டபம், கோபுரம், சுற்றுமதில் முதலான திருப் பணிகள் இன்னாரால் செய்விக்கப்பட்டனவென்பதையும் அறிவுறுத்துவது. "அவளுடன் வந்த அழகுநாய்ச்சியம்மன் என்னும் செல்லாண்டியம்மன் தொட்டியம்வீட்டுக்கு மேல்புறம் நிருருதிமூலையில் சோலைநிழலிலே கல் லீச்சமரத்தடியிலேயிருந்து பூசை-வாங்கிக்கொண்டாள்" என்ற தொடர் மொழிகள் நடுவில் காணப்படுகின்றன. இது மெகன்ஸி துரையாலீட்டப் பட்டு டைலர் காட்லாக்கில் 157 ஆம் பக்கத்தில் 2340 ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ளது. முற்றுமுளது.

No. 2748. திருவலஞ்சுழிக் கோவில் வரலாறு.
TIRUVALAÑCUḶIKKŌVIL VARALĀṞU.

Substance, palm-leaf. Size, 7¾ × ¾ inches. Pages, 42. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old. Extent, 125 granthas.

Complete.

An account of the temple of god Śiva at Tiruvalañcuḷi, Tanjore district.

There is also a story in this manuscript about the manifestation of god Ganēśa in this sacred place, where a sage and devotee of god Śiva is daily worshipped in the temple even before god Śiva is worshipped for god Śiva himself is said to have given orders to a king, that in this temple the sage should have precedence over himself in the daily worship in the temple.

Same work as that described under No. 2343 of Taylor's Catalogue, Vol. III, p. 149.

Beginning :

திருவலஞ்சுழிக் கோயில் வரலாறு.

கபர்த்தீசுவர சுவாமி மாகாத்[தியமம்] (துமியம்) ச * * * *
சோஷ(ழ) ராசர் இராச்சியம் பரிபாலனம் பண்ணினது. பண்ணிக்கொண்
டிருக்கிற காலத்திலே இருதயுகத்திலே * * * * * * *

End :

இராசாவைப் பார்த்த(து) சுவாமி சொன்னது. இருஷிக்கு முன்னே பூசை நைவேத்தியமும் நமக்கு அதுக்குப் பிறகு பூசை நைவேத்தியமும் நடக்கட்டும் என்று சுவாமி சொன்னார். அப்படி அந்த ராசா உள்ள வரைக்கும் பூசை நைவேத்தியம் நடந்தது என்று புராண வாக்கியம். இப்போதும் பூசை நைவேத்தியம் இருஷிக்கு முன்னும் சுவாமிக்குப் பின்னுமாய் நடந்துவருகிறது.

ஸ்ரீகபர்த்தீசுவரசுவாமி துணை.

(கு.பு.)—

இது தஞ்சைக்கு அருகிலே உள்ள திருவலஞ்சுழிக் கோயில் என்ற தலத்தின் மகிமையினையுணர்த்துவது. இதன் இறுதியிலே ஷெடி ஊரின் விக்கினேசுவரர் உண்டான ஸ்தலம் என்னுமதை விளக்கும் ஒரு சிறு கதையுமுளது. இது மெகன்ஸி துரையால் சம்பாதிக்கப்பெற்று டைலர் காட்லாக்கில் 149 ஆம் பக்கத்தில் 2343 ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுளது. சிதலுற்றுப்பிழையுடனிருக்கிறது. முற்றுமுளது.

No. 2749. கலியுகவரசர்கள் பெயர் முதலியன. KALIYUGAVARAŚARGAḶ PEYAR MUDALIYANA.

Substance, palm-leaf. Size, 15¾ × 1¼ inches. Pages, 16. Lines, 5 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old. Extent, 200 granthas.

Complete.

This is the original of the manuscript described under R. No. 347.

(கு.பு.)—

இது, மூவருடக் காட்லாக்கில் 347 ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள பிரதிக்கு மூலப்பிரதியாகும். ஏடுகள் சிதலுற்றிருக்கின்றன.

No. 2750. பொம்மைய நாயகன் பாளையப்பட்டின் பூருவோத்திர வரலாறு. BOMMAIYANĀYAKAN PĀḶAIYAPPAṬṬIN PŪRUVŌTTIRA VARALĀṞU.

Substance, palm-leaf. Size, 12¼ × 1 inches. Pages, 25. Lines, 5 to 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old. Extent, 200 granthas.

Complete.

Same work as that described under D. No. 2740 and No. 2338 of Taylor's Catalogue, Vol. III, p. 59.

(கு.-பு.)—

இது, டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2740 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இது மெகன்ஸி துரையால் சம்பாதிக்கப்பட்டு டைலர் காட்லாக்கில் 59 ஆம் பக்கத்தில் 2338 ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுளது. இப்பிரதியில் "**கரிசப்பட்டு வாராப்பூர்** பொம்மைய நாயகன் பாளையப்பட்டுப் பூருவோத்திர வரலாறு" என்ற தொடர் மொழி முதலில் காணப்படுகிறது. இறுதியில் "எழுதிக்கொடுத்தது கருசப்பட்டுச்சீமை * * * * பொம்மையனூர் ஸ்தானாதிபதி சுப்பிரமணியன்" என்றுமுள்து. ஏடுகள் சில சிதைவுற்று முறிந்துள்ளன. முற்றுமுளது.

No. 2751. இடங்கை வலங்கை ஜாதி வரலாறு.

IḌAṄKAI VALAṄKAI JĀTIVARALĀṞU.

Substance, palm-leaf. Size, 14¾ × 1¾ inches. Pages, 68. Lines, 9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old. Extent, 900 granthas.

Incomplete.

An account of the Iḍaṅkai and Valaṅkai castes. In this work there is a mixture of legends of popular stories and accounts connected with a dispute between the Śaṅkarampāḍiyār and the Tiruvāyppāḍiyar about the Garuḍa flag (flag bearing the picture of the bird called Garuḍa, the mythological vehicle of God Viṣṇu) "Perumāḷ Vikramaśōḷadēvar" was the arbitrator in this dispute, and it is said that he summoned an assembly of 1,900 persons in the temple of Śri Ēkāmrēśvara at Kāñci (Conjeevaram) where he heard the dispute. Numerous castes and sub-castes, their origins, customs, rights, duties and practices are also mentioned in this manuscript.

A list of the kings of the Kali age and the periods of their reigns is also given. There is a reference to the "Copper plates" of "Manu-Cakravartti."

Same work as that described under No. 2320 of the Taylor's Catalogue, Vol. III, p. 7.

Beginning :

ஆதிபிரம்மா படைத்த பூலோகத்தில் மாகாஞ்சிமா நகரியில் ஏகாம்பரநாதனை கிருத-த்ரேதா-துவாபர-கலியுகத்தில் முன்னாள் ஆதித்த கிரணத்தில் பிறந்த மனு சக்கிரவர்த்தி கட்டின செப்பேடு பார்க்கவேணுமென்று பெரும்மாள் விக்கிரம சோழ தேவர் அருளிச் செய்கையில், இவருக்கு அஞ்சாவது நாளிலே சங்கரம்பாடியாரும், திருவாய்ப்பாடியாரும் தங்களில் கெருடக் கொடிக்குப் பிணங்கிப் பெருமாள் திருமுன்பே கேட்கையில்,

பெருமாளும் திருவாய் மலர்ந்தருளி ஏகாம்பரநாதன் கோயிலில் ஆயி ரத்துத் தொள்ளாயிரம் பேரையும் அழைத்துப் பேருக்கு எழுதின திருமுகம் வழிப்பாவாடையிட்டு நகரி வலஞ் செய்து திருமுகப்பிரசாதம் பண்ணிக் கொடுத்து ஸ்ரீமுகப்படி யெடுத்து எதிரடை யிட்டபடிக்குப் படிவிருத மெவ்வு வலங்கைக்கு வகை :—

நம்பிக் குடிக்குச் சுரிகையும் விடுகோலும் அடையாள முடையவர்கள். வைசிய செட்டிகளுக்கு நவரத்தின மாலையும் குவளைத்தாரும் அடையாள முடையவர்கள். * * *

End :

கீழாயனுக்கும் குளுவிச்சிக்கும் களவில் பிறந்தவன் தும்பன். இவ னுக்குத் தொழில் தாழையிலே கட்டிக் குடிலைக்கட்டித் தன் பெண்டுகளும் தேடி உண்ணக் கடவார்கள்.

கம்மாளனுக்கும் கன்னானுக்கும் மாலுமிச் சித்தாதி வயிற்றில் பிறந்த வன் கறைத்தறி நெய்வான். இவனுக்கும் இவனுடைய ஸ்ரீக்கும் கள வில் * * * * * *

(கு.-பு.)—

இது இடங்கை வலங்கை யென்னும் சாதிகளின் பிரிவினையும், அடை யாளங்களையும், தொழில்களையும், எடுத்துணர்த்துவது. டைலர் துரையி னது காடலாக்கில் 7-ஆம் பக்கத்தில் 2320 ஆம் நம்பரில் வருணிக்கப் பட்டுள்ளது. இப்பிரதியின் முற்பகுதியில் கலியுகவரசர்களின் பெயர்களும் அவராண்ட வருட வெண்களும் கொடுக்கப்பட்டுள்ளன. முற்றுமில்லை.

No. 2752. சித்தாமூர்க் கோவில் நித்தப்படி கைபீது.

CITTĀMŪRKKŌVIL NITTAPPAḌI KAIPĪDU.

Substance, palm-leaf. Size, 15½ × 1¼ inches. Pages, 24. Lines, 5 on a page. Character, Tamil. Condition, very much injured. Appearance, old. Extent, 125 granthas.

Incomplete.

This is the original of the manuscript R. No. 336-*C*.

An account of the different items of the daily expenses of the Jain temples of Śrī Arhat and Maths of the Jains at Cittāmūr, South Arcot district.

This manuscript throws light on the method of worship prevailing among the Jains and worship was conducted thrice a day in this temple.

Beginning :

சித்தாமூர்க் கோவில் நித்தப்படி.

கோயில் ௩-க்கு கோவில் ௧-க்கு நாள் ௧-க்கு காலம் ௩-க்கு காலம் ௧-க்குச் செல்வானம் நைவேத்தியம். * * * * * * அபிஷேகத் திரவி யம் :—தேங்காய், பழம், பயறு, வெல்லம், நெய், பால், தயிர், கற்பூரம், சாம் பிராணி, திருமஞ்சனம், இவைகள். * * * * * * * * * *

End :

பாங்காய காற சினு க, சின்னம் ஊதி சினு க, குடைக்காரன் சினு க, கண்டவாள் காரன் சினு க, * * * * * * *

(கு.-பு.)—

இது சித்தாமூர் ஜைனாலய மடங்களினது நித்தியப்படி பூசை முதலான வைக்குச் செலவாகும் பொருள் முதலியவற்றினளவினை யெடுத்துணர்த்து கின்றது. மூவருடக் காடலாக்கு 336-c ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள பிரதிக்கு இது மூலப்பிரதியாம். ஏடுகள் மிகவும் சிதலுண்டுள்ளன.

No. 2753. தொட்ட தேவராயர் சரித்திரம்.
DOḌḌADĒVARĀYAR CARITTIRAM.

Substance, palm-leaf. Size, 14 × 1 inches. Pages, 80. Lines, 4, 5 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old. Extent, 500 granthas.

Incomplete.

A history of Doḍḍadēvarāyar of Mysore and his achievements.

Beginning :

மைசூர் தொட்டதேவராயர் சரித்திரம்.

அத்திரி முனீசுவர வம்சத்திலே பிறந்த மைசூர் ராசாக்கள் பரம்பரை :—

அத்திரி ரிஷியினுடைய நேத்திரத்திலே சந்திரன் பிறந்தான், சந்திரனுக்குப் புதன், புதனிடத்திலே * * * * * *

End :

திருச்சினுப்பள்ளியை முற்றுகை செய்து அவ்விடத்திலேயும் கப்பம் வாங்கிக்கொண்டு மதுரைச் சீமைக்குச் செயத்துக்குப் போகச்சே * * * * * * * * *

(கு.-பு.)—

இது மைசூர் தொட்டதேவராயர் என்பவரது சரித்திரத்தை எடுத்துணர்த்துகின்றது. மூவருடக் காடலாக்கு 1490-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள பிரதிக்கு இப்பிரதியே மூலப்பிரதியாம். இந்தப்பிரதி மிகவும் செல்லுக்களால் அரிப்புண்டு படித்தற்கு அரிதாயுள்ளது. முற்றுப் பெறவில்லை.

No. 2754. மைசூர் ராஜ வம்சாவளி.
MAISŪR RĀJAVAMŚĀVAḶI.

Substance, palm-leaf. Size, 17½ × 2 inches. Pages, 30. Lines, 6 on a page Character, Tamil. Condition, injured. Appearance, old. Extent, 200 granthas.

Incomplete.

This is the original of the manuscript R. No. 409-*b*.

A genealogical account of the Rulers of Mysore from Appan Timmarāja Uḍaiyār to Immaḍirāja Uḍaiyār. Some events in the reigns of Cāmarāja Uḍaiyār and Rāja Uḍaiyār are also narrated.

Beginning :

அப்பன் திம்மராசா உடையார். அவர் மகன் ரெண்டுபேர். அவர்களுக்குப் பேர் ஆறுவேறன் சாமந்த உடையாரவர், தாசப்ப உடையாரவர். இவர்களுடைய குமாரர்கள் தேவராச உடையராவர். அவர் குமாரர்கள் கிருஷ்ண உடையாரவர், யெவன சாமறங்க உடையாரவர். இவர்கள் பிறந்த ஜெனனம் துருமாசுச௵ ஆகஸ்டு௴ ௨௰௭ பிரபவ௵ ஆவணி௴ ௰௭ சாமந்த சாமறந்தி உடையாரவர் பிறந்தது. * * * * * *

End :

ஆவணி௴ ௰௨ சாமராச உடையாருக்குப் பட்டம் கட்டினார்கள். ஈசுவர௵ வையாசி௴ ௩௨ சொர்க்கப் பிராப்தியானார். ஈசுவர வருஷம் வையாசி௴ ௩௰௨ இம்மடி ராச உடையாருக்குப் பட்டங்கட்டினார்கள். வெகுதாணிய வருஷம் புரட்டாசி௴ ௰௧௨ * * * * * * * * * *

(கு.-பு.)—

இது மைசூர் ராசாக்களுடைய வமிச பரம்பரையை யெடுத்துணர்த்துகின்றது. மூவருடக் காடலாக்கு 409-*b* ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டிருக்கும் பிரதிக்கு இது மூலப்பிரதியாகும்.

No. 2755. சித்திரகூட மாகாத்துமியமும் சிலாசாஸனமும்.

CITRAKŪṬAMĀHĀTMYA AND ŚILĀŚĀSANA.

Substance, palm-leaf. Size, 17 × 1¼, 10½ × 1¼ and 17¾ × 1 inches. Pages, 126. Lines, 3 to 5 on a page. Character, Tamil and Grantha. Condition, injured. Appearance, old. Extent, 700 granthas.

Begins on fol. 1-*a*. The other works herein are Iḷamaiyānār koil māhātmyam 63-*a*. Anantēśvaran koil māhātmyam 65/*a*.

Complete.

This is the original of the manuscript described under R. No. 1538.

Inscriptions on stone at Citrakūṭam and a legendary account of the religious greatness of the sacred shrine of God Śrī Gōvindarājasvāmi (Viṣṇu) at Citrakūṭam (Cidambaram) according to the Bhaviṣyōttara-purāṇa.

The repairs to the temple of Śrī Govindarājasvāmi the grants of land thereto and such other services of Mahāmaṇḍalēśvara Śrīraṅgarāyar are narrated herein.

Same work as that described under No. 2082 of Taylor's Catalogue, Vol. III, p. 77.

Beginning :

சிலா சாஸன நக்கல்.

ஸ்ரீமதே ராமாநுஜாயநம :

ஸ்வஸ்தி ஸ்ரீமந் மஹாமண்டலேச்வரர் ஸ்ரீரங்கராயர் பிருதிவீ ராஜ்யம் பண்ணி யருளா நின்ற சகாப்தம் ௲ருாசுஅ௰ரு வருஷத்தின்மேல் செல்லா நின்ற சுபானுவருஷம் பங்குனிமீ பஞ்சமி சுக்ரவாரம் பெற்ற ரேவதீ நட்சத்திர நாள் திருச்சித்ரகூடம் தில்லை கோவிந்தராஜ ஸ்வாமிக்கு ஸ்ரீரங்கராயர் * * * * * * * * * * * * *

End :

ஆக இந்தக் கைங்கரியங்கள் எல்லாம் ஜீர்ணோத்தாரணமாக ஸ்ரீரங்க ராயர் பண்ணினபடியினாலே * * * * * * * * *

Beginning :

ஸ்ரீமத் பவிஷ்யத் புராணத்தில் சித்திரகூட மாஹாத்மியம் :

பதினெட்டுப் புராணம் வேதசாஸ்திரம் முதலாகிய சாஸ்திரங்கள் பலவுஞ் சொல்லாநின்ற ஸ்ரீ வேதவியாச பகவான் தமக்கு முக்கிய சிஷ ராகிய ஜைமினி மகரிஷிக்கு அஷ்டாதச புராணத்தில் பவிஷ்யத் புராணத்தி னுடைய கதையில் ஸ்ரீ சித்திர கூடத்தில் அகிலாண்ட கோடி பிருமாண்ட நாயகராகிய ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமியினுடைய மகிமையும் ஸ்தல மகி மையும் தீர்த்தங்கள் மகிமையும் * * * * * * *

End :

அஞ்சாவது உருத்திர தீர்த்தம் உருத்திரனானவர் தாமே தபசு பண்ணு இறதற்குச் சிருஷ்டித்தார். அது கோவிந்தராஜர் சந்நிதிக்குத் தெற்கு. அந்த தீர்த்தத்தில் தானம் பண்ணிச் சிவ பக்தாளுக்குத் தக்ஷிணை தாம் பூலம் கொடுத்தால் சிவபதவியடைவார்கள்.

(கு.-பு.)—

இது சிதம்பரம் என்றும், சித்திரகூடமென்றும், தில்லை யென்றும் வழங்கும் திவ்விய ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கும் கோவிந்தராஜரது மகிமையினையும் அத்தலத்தினுடைய மகிமையினையும் எடுத்துணர்த்துவது. முதலில் ஷெ தல விஷயமான சிலாசாசனங்கள் இரண்டும் (2) ஷெ கோவிலி லுள்ளார் எழுதிக் கொடுத்த அட்டவணையின் பிரதி யொன்றும் உள. இது டைலர் துரையினது காடலாக்கில் 77 ஆம் பக்கத்தில் 2082 ஆம் நம்பரில் வருணிக்கப் பெற்றுள்ளது. முற்றுமிருக்கின்றது. சிதிலமானது. மூவருடக் காடலாக்கு 1538 ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள பிரதிக்கு இது மூலப்பிரதியாகும்.

No. 2756. இளமையானார் கோவில் சிலாசாஸனம்.
IḶAMAIYĀNĀRKŌVIL ŚILĀŚĀSANAM.

Pages, 4. Lines, 4 on a page. Extent, 15 granthas.

Begins on fol. 63-*a* of the manuscript described under D. No. 2755. Complete.

This is the original of the manuscripts described under R. No. 1539.

A legendary account of the religious greatness of Iḷamaiyānārkoil near Cidambaram, South Arcot district.

This account, it is said, has been taken from Śrī Cidambarattala-purāṇam. The grants of lands to the temple are also referred to.

Beginning :

இளமையாஞர் கோவில் தலமகத்துவம்—ரக்தாக்ஷி௵.

கோவில் மகத்துவம், தீர்த்த மகத்துவம் சிதம்பர புராணத்திலே யிருக்கின்றன.

சிதம்பரம் சீமையிலே உடையார் மாணியக்காவல் மாணியத்திலே பத்துக் காணி மாணியம் நடந்தது. * * * * *

End :

அந்தக் கிராமங்களிலே வருமானம் இல்லாததிஞலே அந்தத் தோப்புகளிலே இருக்கிற ஐவேஜியிலே நித்தியப்படி குறுணி அரிசி நைவேத்தியம் பண்ணிப் பூசை நடந்துகொண்டு வருகிறது. கோவில் பூசை பண்ணுகிற குருக்கள், சிவப்பிராமணக்குருக்கள், நாகநாதக் குருக்கள் சொற்படி யெழுதினது.

(கு.-பு.)—

இது சிதம்பரத்துக்கு அருகிலிருக்கும் இளமையாஞர் கோவிலினுடைய விசேடங்களை யெடுத்துணர்த்துகின்றது. சுருக்கமாயுள்ளது. இக்கோயிலினுடையவும் தலத்தினுடையவும் மகிமையினை சிதம்பர புராணத்தில் கண்டு கொள்க. மூவருடக் காடலாக்கு 1539 ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டிருக்கும் பிரதிக்கு இது மூலப்பிரதியாம்.

No. 2757. அனந்தேசுவரன் கோயிற் சிலாசாஸனம். ANANTĒŚUVARAN KŌYIṞCILĀŚĀSANAM.

Pages, 3. Lines, 3 on a page. Extent, 10 granthas.

Begins on fol. 65-*a* of the manuscript described under D. No. 2755.

Complete.

This is the original of the manuscripts described under R. No. 1540.

A legendary account of the religious greatness of Anantēśvaran koil at Cidambaram, South Arcot district.

The repairs to the temple made by Periyaperumāḷ Piḷḷai and Dēvarāya Piḷḷai are also mentioned herein.

Beginning :

அனந்தேசுவரன் கோயில் தலமகத்துவம்—ரக்தாக்ஷி௵.

கோவில் மகத்துவம் தீர்த்த மகத்துவம் சிதம்பர ஸ்தல புராணத்திலே சொல்வது. அந்தக் கோவில் வெகுநாளாய்த் திருப்பணியானபடியிஞலே பெரிய பெருமாள் பிள்ளை பழுது பார்த்துக் கோவில்களெல்லாம் புதுப்பித்துத் திருப்பணி செய்வித்து * * * * * *

End :

ஆக இரண்டு காலம் பூசை நடந்து வருகிறது. பூசைபண்ணுகிற குருக் கள் சிவப்பிராமணன் மணியக் குருக்கள் சொல்படி எழுதினது.

(கு.-பு.)—

இது சிதம்பரத்துள்ள அனந்தேசுவரன் கோயிலினது சாஸனத்தை எடுத்துணர்த்துகின்றது. பெருமாள் பிள்ளை, தேவராயப் பிள்ளை இவர்கள் இக்கோயிலுக்குச் செய்த திருப்பணிகள் இன்னவையெனக் கூறப்பட்டுள் ளன. மூவருடக் காடலாக்கு 1540 ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள பிரதிக்கு இது மூலப்பிரதியாம். முற்றுமுள்ளது.

No. 2758. திரிபுரவணங் கோயில்த் தல வரலாறு.
TIRIPURAVNAN KŌILTTALA VARALĀṞU.

Substance, palm-leaf. Size, 17 × 1¼ inches. Pages, 40. Lines, 3 on a page Character, Tamil and Grantha. Condition, injured. Appearance, old. Extent, 100 granthas.

Begins on fol. 1-*a*. The other work herein is Cōḷarājōtpatti, 21-*a*.

Complete.

This is the original of the manuscript described under R. No. 1608.

A legendary account of the religious greatness of Tirupuravanam, South Arcot district.

The name of the presiding Deity of this place is God (Śiva) Kampaharēśvara. This account is said to have been taken from the Bhaviṣyōttarapurāṇam and summarized briefly. Citraratha Kulōttuṅgacōḷa and numerous other kings are said to have offered worship to the Deity enshrined here. Some Sanskrit verses relating to the Cōḷa King Kulōttuṅga Cōḷa are found at the end of this Codex. He is said to have had his capital here.

Same work as that described under No. 2239 of Taylor's Catalogue, Vol. III, p. 147.

Beginning :

திருபுரவணங் கோயில்த் தல வரலாறு.

திரிபுரவனம். ஸ்ரீ கம்பஹரேசுவரசுவாமியினுடைய இந்த ஸ்தல மாகாத்து மியம் பவிஷ்யோத்தர புராணத்திலே விஸ்தரித்திருக்கிற படியினாலே அதி னுடைய ஸாரம் இங்கே சங்கோசமாய் எழுதினது. * * * * * * * * * * * *

End :

சித்திர ரதனும், குலோத்துங்க சோழனும் இன்னும் அனேக ராஜாக் களும் பூசை பண்ணியிருக்கிறார்கள். ஸ்தல புராணம் முழுக்க எழுதிக் கொடுக்கிறத்துக்கு சாவகாசம் இல்லாததினால் புராண ஸாரம் சுருக்கமாய் ஸங்கோசமாய் எழுதிக்கொடுத்தது.

(கு.-பு.)—

இது இப்போது திரிபுவனை என்று வழங்கப்பெறும் திரிபுரவணம் என்ற தலத்தின் மகிமையினையும், இதிற் கோயிற்க்கொண்டிருக்கும் ஸ்ரீ

கம்பஹரேசுவரரது மகிமையினையும், தலத்திற்கும் சுவாமிக்கும் இப்பெயர் வந்த வகையினையும், இன்னும் இன்னோரன்ன பல செய்திகளையும் எடுத்துணர்த்துகின்றது. இதனிறுதியில் சோழவரசர்களின் பிறப்பு முறையினையுணர்த்தும் சில வடமொழிச் செய்யுட்களும் எழுதப்பெற்றிருக்கின்றன. டைலர் துரையினது காடலாக்கில் 147 ஆம் பக்கத்தில் 2239 ஆம் நம்பரிலுமிது வருணிக்கப்பெற்றுள்ளது. மூவருடக் காடலாக்கு 1608 ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள பிரதிக்கு இது மூலப்பிரதியாகும். இப்பிரதியிலெழுத்துக்கள் தெளிவாகவில்லை. இது சிதிலமாகவிருக்கின்றது. முற்றுமிருக்கின்றது.

No. 2759. குலோத்துங்க சோழராஜ ப்ரசஸ்தி.
KULŌTTUṄGA ŚŌḺARĀJA PRAŚASTI.

Pages, 4. Lines, 4 on a page. Extent, 20 granthas.

Begins on fol. 21-*a* of the manuscript described under D. No. 2758.

Complete.

Contains some Sanskrit verses describing the victories in battles and famous deeds of the Cōla King named Kulōttuṅgacōḷa who lived in the holy place called Tiripuravanam. Kulōttuṅgaśōḷa is said to have caused big houses, good wide roads, etc., to be built in this capital city of his. The Sanskrit verses are written in a faulty manner.

Beginning :

ஸ்வஸ்தி ஸ்ரீ:

ஸூர்ய வம்சாந்வயாஸ் த்ரிபுவனவிபவ:
ஸம்ஹர்து ஸிம்ஹதேஜ த்ராது .
யோऽஸௌ ஜேஷ்டோத்தார தேஜஸம் விக்ரம வாரவஹிதம்
யோऽஸாவயி த்வர வர்ணாஸ்ய ||
யோவா வீராபிஷேகம் ஹ்ருதக்ருத பயோ பாரம்
வர்ணாஸ்ய மாத்யாம் ஜயித்வா
யாதேகேவை ஸ்ரஸ்வஸாத்ரு விஜயதே
ஸ்ரீ குலோத்துங்க சோள: ?

End :

* * * * *

விப்ரா யேந தக்ஷிணா நிக்ஷிப்தா
விஷ்வக்ஷேத்ர ஸம
ஸ்வர்ணாயேந விசித்ர ஸோபித க்ஷம
விஸ்தாவக ஸ்தானி ஹோ:
வேதாகாரஸ்ய ஸேவ ஸம்நந் க்ஷமா
ஸித்தாக்ஷர ஸ்தான கோரா
ராஜேந்த்ரா யஸ்ய மாநாம் ஸேவ சஸ்ரம்பிவ:
கஸ்ய தமோ மாண: ? ||

(கு.-பு.)—

இது திரிபுரவனமென்னும் தலத்திலுள்ள கோயிலுக்குக் குலோத்துங்க சோழன் செய்வித்த பல திருப்பணிகளைப் பெருமையாய் எடுத்துணர்த்து கின்றது. அவனது வீரச் செயல்களையும் எடுத்துணர்த்துகிறது. பிழைகள் உள.

No. 2760. திருவண்ணாமலை தேவஸ்தானச் சிலாசாஸனம். TIRUVAṆṆĀMALAI DĒVASTHĀNACCILĀŚĀSANAM.

Substance, palm-leaf. Size, 16½ × 1 inches. Pages, 45. Lines, 4 on a page. Character, Tamil and Grantha. Condition, injured. Appearance, old. Extent, 275 granthas.

Begins on fol. 1-*a*. The other work herein is Vaḻukūr dēvasthānaccilāśāsanam. 25-*a*.

Complete.

Inscriptions on stone in the temple of God Śiva (Aruṇācalēśvara) at Tiruvaṇṇāmalai, North Arcot district.

Same work as that described under No. 2359 of Taylor's Catalogue, Vol. III, p. 13.

Beginning :

திருவண்ணாமலை அருணாசலேசுவர சுவாமியார் சந்நிதியில், வச்சிராங்கத பாண்டியன் பிராகாரத்தில் கோபுரத்துக்குத் தென்பக்கம் சபாபதி ஸ்வாமிக்கு இடபுறம் மதிளில் எழுதியிருந்த சிலாசாஸனத்துக்கு நக்கல்.

யுவஹு ஆவணிமீ உடுகஉ பட்டணத்திலேயிருந்து ஸ்ரீனிவாஸ அய்யங்கார் என்கிறவர் வந்து பார்த்து எழுதினது :—

End :

ஸ்வஹஸ்தே * * * * * * * * * * *

மேலாத்தூர் காணியாட்சி சந்திராதித்தர் வரையும் அனுபவித்துக் கொள்ளக்கடவேணுகவும். இந்தக் காரியத்துக்கு அஹிதம் பண்ணினவன் கங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ற தோடத்திற் போகக்கடவன்.

(கு.-பு.)—

இது வடவாற் காட்டிலுள்ள திருவண்ணாமலை யென்னும் தலத்தில் எழுந்தருளாநிற்கும் அருணாசலேசுவரரது கோயிற் சந்நிதியில் வச்சிராங்கத பாண்டியப் பிராகாரத்தில் கோபுரத்துக்குத் தென்பக்கம் சபாபதி சுவாமிக்கு இடப்புறம் மதிளில் எழுதப்பட்டிருந்த சிலாசாஸனங்களை எடுத்துணர்த்து கின்றது. இதிலுள்ள சாஸனங்கள் 11. இக்கோயில் பற்றிய சாஸனங்களை யுணர்த்தும் வேறு பல பிரதிகளுமுள. டைலர் துரையினது காடலாக்கில் 13 ஆம் பக்கத்தில் 2359 ஆம் நம்பரிலிது வருணிக்கப்பட்டிருக்கிறது. மிகச் சிதிலமாயுள்ளது.

No. 2761. வழுகூர் தேவஸ்தானச் சிலாசாஸனம்.
VAḶUKŪR DĒVASTHĀNACCILĀŚĀSANAM.

Pages, 6. Lines, 4 on a page. Extent, 18 granthas.

Begins on fol. 25-*a* of the manuscript described under D. No. 2760.

Complete.

Inscriptions on stone in the temple of God Śiva at Vaḷukūr, Wandiwash taluk.

Beginning :

வெங்கோடு வந்தவாசி தாலூக்கா இரும்போடு நாட்டு வழுகூர் ஈசுவரன் கோவில் சிலாசாஸனம் :—

ஸ்வஸ்தி ஸ்ரீ வீரலோசன உடையான் குமாரர் பசுபதி உடையாருக்குச் செல்லாநின்ற சகாப்தம் ருஅ௱௫௰௨-க்குமேல் செல்லாநின்ற விகிருதிஞூ துலாஞாயிற்று * * * மிருகசீரிட நட்சத்திரத்து நாள் செயங்கொண்ட மண்டலத்து வெங்கண்ண கோஷ்டத்து இரும்போட்டு நாட்டுவழுகூர் * * * * * * * * * * * *

End :

சேத்துப்பட்டுத் துக்கடியில் சேர்ந்த செஞ்சி தாலூக்குச் சிவாலப்பிறை யூர் அகத்தீசுவரர் கோவில் மேற்குப் பக்கம் கல்வெட்டுச் சிலாசாஸனத் துக்கு நக்கல் :—

ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சடையப்பன் மாறன் திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு ஆண்டு எட்டாவது * * * * * * * * * * * * * * * சகலப் பிராப்திகளும் திருநாமத்துக் காணியாகக் கொடுத்தோம். இவ்வூர் எம்பெருமான் வீற்றிருந்த பெருமாள் திருவிடையாட்டம் பழந் திருவிடையாட்டமும் இந்நாளில் விட்ட நிலம் நாலு மா உள்பட திருநாமத்துக் காணியாக முதல் இறையிலியாகத் திருநாமத்துக் காணியாகக் கொடுத்தோம். * * * * * * * * * * * *

(கு.-பு.)—

இது வந்தவாசி தாலூக்காவைச் சார்ந்த வழுகூரென்னுமிடத்துள்ள தேவஸ்தானத்தினது சிலாசாஸனங்களை யெடுத்துணர்த்துகின்றது. இதனிறுதியில் செஞ்சி தாலூகாவைச் சேர்ந்த சிவால்பிறையூர் என்னுமிடத்திலுள்ள கோயில்கள் பற்றின ஒரு சாஸனமும் எழுதப்பட்டுள்ளது. மூவருடக்காடலாக்கு 336 m. o. ஆம் நம்பரில் வருணிக்கப்படுள்ள பிரதிக்கு இதுவே மூலப்பிரதியாகும்.

No. 2762. பகுளாரண்ய மடவளாக ஈசுவரன் கோயில் தான சாஸனம்.
BAKUḶĀRAṆYAMAḌAVAḶĀKA ĪŚUVARANKŌIL DĀNAŚĀSANAM.

Substance, palm-leaf. Size, $17\frac{1}{2} \times 1\frac{1}{4}$ inches. Pages, 8. Lines, 5 on a page. Character, Tamil and Grantha. Condition, injured. Appearance, old. Extent, 100 granthas.

Complete.

A copy of the deed executed by Śiṟaimīṭṭār donating some lands to the temple at Maḍavaḷākam (Bakuḷāraṇya) in the Toṇḍaimaṇḍalam.

Beginning :

ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகாமண்டலேச்வர * * * வீரதேவ மகாராஜ புவன பாண்டிய சோழ மகாராஜர் பிருதிவீ ராஜ்ய பரிபாலனம் செய்யும் நாளில் கலியுக௵ ௪௲௬௱௪௰ அ௰சு, சாலிவாகன சகாப்தம் ௨ாசய௰க்கு பிரபவாதி ௵ ௨௰௩க்கு மேல் செல்லாய் நின்ற விகிருதி௵ தைமீ ௨௰கஉ அமாவாசை குருவாரமும் ஆருத்திரா நட்சத்திரமும் * * * * * * * * * * * *

End :

இந்தப்படிக்குப் புத்திர பௌத்திர பாரம்பரியமாய்ச் சந்திராதித்தர் வரை அனுபவித்துக் கொள்ளுவீராகவும். இதுக்குச் சாக்ஷி ஆகாசவாணி பூமிதேவி அஷ்டதிக்பாலகர் சந்திர சூரியர் சாக்ஷியாய் எழுதிக்கொடுத்த தான பத்திரிகை. இவை சிறைமீட்டார். ஸ்வஹஸ்த லிகிதம். * * * * *

(கு.-பு.)—

இது பகுளாரண்ணிய மடவளாகம் என்கிற ஊரிலுள்ள ஈசுவரன் கோவிலுக்குரிய தான சாஸனப் பத்திரிகையின் நக்கலாகும். இவ்வூருக்கு வாதபுரி, தக்கபுரி, ஸ்ரீநகரம், என்பது போன்று வேறு பெயர்களுமுள்ளன. இவ்வூர் சம்பந்தமான பல சிவக்ஷேத்திரங்களும் அவற்றின் மகிமையும் இத்துள் கூறப்பட்டிருக்கின்றன. மூவருடக் காடலாக்கு 1573 ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள பிரதிக்கு இதுவே மூலப்பிரதியாகும். மு்ற்றுமுள்ளது.

No. 2763. ஸ்ரீரங்கப்பட்டணம் ராஜாக்கள் வரலாறு.
ŚRĪRAṄGAPPAṬṬAṆAM RĀJĀKKAḶ VARALĀṞU.

Substance, palm-leaf. Size, 15 and 14 × 1¼ inches. Pages, 50. Lines 4 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old. Extent, 150 granthas.

Incomplete.

An account of the rulers of Śrīraṅgappaṭṭaṇam (Seringapatam, Mysore State) and God Śrīranganatha's temple there.

Beginning :

வித்தியாநகரிப் பட்டணத்திலே இராஜ்யம் பண்ணின பேர்கள் :—முதல் ஹரிஹரராயன், புக்கராயன், அதன் பிறகு குறும்பராயன் இராஜ்ஜியம் ரக்ஷித்தபிறகு குண்டேந்திர நரசிங்கராயன் குமாரன் வீரநரசிங்கராயன் இராஜ்ய பரிபாலனம் பண்ணச்சே அவன் தம்பி அச்சுதராயனுடனே இன்னும் சிறிது ராயர்களுடனே வந்து உன்மத்தூர் துர்க்கத்தை மூன்று மாசம் முற்றுகை போட்டு அந்தக் கோட்டை வாங்காமல் தண்டு திரும்பி ஸ்ரீரங்கப்பட்டணத்துக்கு முற்றுகை செய்த விடத்திலே * * * * * * .

End :

விஷ்ணுவுக்கு ஸ்ரீதேவியைப் போலே, பிரமதேவனுக்கு ஸ்திரீ சரஸ்வதியைப்போலே, சூரியனுக்குச் சாயாதேவியைப்போலே ரூபத்திலே திலோத்தமையைத் திரஸ்காரம் பண்ணுமவள். அவளிடத்திலே ஹரிஹரராயன் பிறந்தான். வெகுராசவம்ச சனங்களுடனே கூட * * * * * * * *

(கு.-பு.)—

இது ஸ்ரீரங்கப்பட்டணம் என்னும், மைசூரைச் சார்ந்த நகரத்தை யாண்ட மன்னர்களின் சரித்திரத்தையும் ஸ்ரீ ரங்கனுத சுவாமியினது தேவாலயத்தின் பெருமையினையும் சுருக்கமா யெடுத்துணர்த்துகின்றது. இதனிறுதியில், இலவம், நிமிஷம், குருவக்ஷரம், பிராணன், விஞடி, நாழிகை, தினம், மாசம், இருது, வருஷம் என்றுமிம்முறையிலே நான்கு யுகங்களுக்கு முள்ள காலவரையறையினை யுணர்த்துஞ் சில தொடர் மொழிகள் நான்கு ஏடுகளில் எழுதப்பெற்றிருக்கின்றன. மிகச் சிதிலமாயுள்ளது. மூவருடக் காடலாக்கு 1535 ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள பிரதிக்கு இதுவே மூலப்பிரதியாம்.

No. 2764. அளகேச்வரராஜன் கதைச் செய்யுளுரை.
ALAKĒSVARARĀJAN KATHAICCEYYULURAI.

Substance, palm-leaf. Size, 16¾ × 1¼ inches. Pages, 42. Lines, 5 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old. Extent, 300 granthas.

Incomplete.

A commentary on the Venbā stanzas in the Aḷakēsvararājan kathai (Tamiḻaṟiyumperumāḷ kathai).

Beginning :

அளகேசராஜன் கதையின் பாட்டுக்கு உரை.

பேய்வந்து சொன்ன வெண்பா :—

வெண்பா விருநாலிற் கல்லானே வெள்ளோலைக்
கண்பார்க்கையா லெழுதானே—பெண்பாவி
பெற்றுளே பெற்றுள் பிறர் நகைக்கப்
பெற்றுளே யெற்றே மற்றெற்றே மற்றெற்று. (?)

இதன் உரை :—வெண்பாவென்னும் பாட்டை இரண்டுவிசைச் சொல்லக் கற்றுக்கொள்ள மாட்டாதவனையும், வெள்ளோலையைக் கண்ணுற் பார்த்து எழுதத் தெரியாதவனையும், பெண்பிறப்பிற் பாவியாய்ப் பிறந்தவள் பெற்றுள். அவள் பெற்றது பிறர் நிந்திக்கவே பெற்றுள். அப்படிப்பட்டவனைக் கொன்றேறியவோ * * என்றுர்.

End :

நக்கீரர் சொன்ன வெண்பா :—

அப்போது மாரணங்கை யன்பாக நற்கீரர்
கொப்பெனவே பார்த்துனை நான் கொன்றேனே—இப்போதே
ஏற்ற வுயிரோடெழுந்தி ராசர் சபையில்
வீற்றிருந்து சொல்லாய் விரைந்து || ருய ||

இதன் உரை :—அப்போது அந்தப் பெண்ணை யன்பாக நற்கீரர் என்பவர் செற்றவனைப் பார்த்து உன்னை நான் கொன்றேனே. இப்போது முன்பெற்றிருந்த உயிர் மறுபடியுமுண்டாய் எழுந்திருந்து இராசசபையிலிருந்துகொண்டு அந்தச் செய்தியைச் சுருக்கமாய்ச் சொல்லென்றார் ||ருய||

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 377 ஆம் நம்பரில் வருணிக்கப்படுள்ள நூலினது செய்யுட்களுக்கு உரையாயமைந்துள்ளது. 50 செய்யுட்களுக்கு மட்டுமே உரை காணுகிறது. உரை நடை சாதாரணமாயும் சுருக்கமாயுமிருக்கின்றது. சிதிலமானது.

No. 2765. மும்மண்டல பண்டைய மன்னர் வரலாறு.
MUMMANDALA PANDAIYA MANNAR VARALĀRU.

Substance, palm-leaf. Size, 19 × 1¼ inches. Pages, 60. Lines, 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old. Extent, 500 granthas.

Complete.

Accounts of some rulers of South India called in ancient times as Pāṇḍimaṇḍalam, Śōḻamaṇḍalam, and Toṇḍaimaṇḍalam. By Vēdanāyakam, a Christian poet of Tanjore.

Same work as that described under No. 2322 of Taylor's Catalogue, Vol. III, p. 41.

Beginning :

இந்திராக்ஷியம், தெட்சிணதிக்கம், பாண்டிமண்டலம், சோழமண்டலம், தொண்டைமண்டலம் பூர்வீக ராஜாக்கள் சரித்திர வொழுங்கு :—

முதலாவது :—முன் பூருவம் இந்திராக்ஷியம், தண்டகாரண்யம், தாருகாவனம், சடாயுவனம், வேதவனம், மிருகண்டுவனம், பாரத்துவாஜவனம், பொதிகைவனம் என்று மேலுஞ் சொல்லப்பட்ட அநேகம் பேருடைத்தான வனந்திரம். * * * * * * * * * * * * * *

End :

இந்த தேசாதிபதியான பூர்வாதீன கர்த்தர் சோழபாண்டிய வங்கிஷமும் அற்றுப்போகவில்லை. இருக்கிறார்கள். எளியவர்களாயிருக்கிறார்கள். வடுக நாயகர்மார் வங்கிஷமும் தஞ்சாவூர் நாயகர் வங்கிஷமும் இருக்கிறார்கள். திரிசிரபுரம் மதுரைத் தேசம் ஆண்ட வடுகநாயகர் கோத்திரமுமிருக்கிறார்கள். அவர்களை மேலான கும்பினியார் விசாரிக்கவில்லை.

(கு.-பு.)—

இது தென்னிந்தியப் பண்டைய மும்மண்டல மன்னர்களின் பூருவ வரலாற்றை எடுத்துணர்த்துகின்றது. தஞ்சை "வேதநாயகம்" என்பவரால் தொகுக்கப்பெற்றதெனத் தெரிகின்றது. டைலர் துரையினது காடலாக்கில் 41 ஆம் பக்கத்தில் 2322 ஆம் நம்பரிலிது வருணிக்கப்பட்டுள்ளது. சிதிலமானது. இவ்வரலாற்றையே யுணர்த்தும் வேறு சில பிரதிகளுமுள்ளன.

No. 2766. காஞ்சி வரதராஜஸ்வாமி கோயில் படித்தனக் கைபீது.

KĀÑCI VARADARĀJASVĀMI KOIL PAḌITTANAKKAIPĪDU.

Substance, palm-leaf. Size, 19¾ × 1 inches. Pages 66. Lines 4 on a page. Character, Tamil and Grantha. Condition, Injured. Appearance, old. Extent, 400 granthas.

Explains the arrangements relating to the daily worship and festivals in the temple of God Varadarājasvāmi at Conjivaram, Chingleput district.

Same work as that described under No. 2330 of Taylor's Catalogue, Vol. III, p. 147.

Beginning :

செங்கற்பட்டு ஜில்லா கசுபா -சின்னக் காஞ்சீபுரம் ஸ்ரீ தேவராஜஸ்வாமி யார் சந்நிதியில் நித்தியப்படி, பஞ்சபருவம், மகோத்ஸவம், பிரம்மோத் ஸவம் ஆழ்வாராசார்யர்கள் சாத்துமுறை இவைகள் நடக்கிற வயணம் :—

*   *   *   *   *

End :

அந்தப் பிரஸாதத்தை ஏளப்பண்ணுகிறது. திருத்திரை சமர்ப்பித்து ஸ்ரீஸ்வாமி அமுது செய்தருளுகிறது.

(கு.-பு.)—

இது செங்கற்பட்டு ஜில்லாவைச்சார்ந்த சின்னக்காஞ்சீபுரமென்னும் தலத்திலுள்ள தேவராஜஸ்வாமி யெனவும் வழங்கப்பெறும் ஸ்ரீவரதராஜ ஸ்வாமியினது கோயிலில் நடந்துவந்த நித்தியப்படி முதலியவற்றின் சில வுத்திட்டம் இன்னதென எடுத்துணர்த்துகின்றது. டைலர் துரையினது காடலாக்கில் 147-ஆம் பக்கத்தில் 2030-ஆம் நம்பரிலிது வருணிக்கப்பட் டுள்ளது. மூவருடக் காடலாக்கு 1574-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள பிரதிக்கு இது மூலப்பிரதியாகும். முற்றுமில்லை.

No. 2767. விருத்தாசலம் விழுப்புறம் தாலூக்கா சிலா சாஸனங்கள்.

VIRUDDHĀCALAM VIḺUPPURAM TĀLŪKKĀ ŚILĀŚĀSANAṄKAḶ.

Substance, palm-leaf. Size, 15½ × 1¼, 20 × , 24¾ × 1¼ inches. Pages, 100. Lines, 7 on a page. Character, Tamil and Grantha. Condition, Injured. Appearance, old. Extent, 600 granthas.

Complete.

Inscriptions on stone in the temples of God Śiva, and God Viṣṇu at Tiruvaṇṇāmalai, Araikaṇḍanallūr, Tirukkōvalūr, Cintāmaṇinallūr Kiḻaiyūr, Vīrattēśvaram, Tirunaṟunkoṇḍai, Paruvūr, and Śiṅgapuram, Vṛddhācalam and Viḻuppuram taluks, South Arcot district.

Same work as that described under No. 2346 of Taylor's Catalogue, Vol. III, p. 67.

Beginning :

திருவண்ணுமலை . . . . * * * சிலா சாஸனத்துக்கு நக்கல் :—

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீவல்லப தேவருக்கு யாண்டு ௰௨ ஆவது கார்த்திகைமீ ௰௩௨ இரேவதி நாள் உடையார் திருவண்ணுமலை உடையநாயனுர் கோயில் ஸ்தானத்தார்க்கு இவ்வூரில் தேவாடியாபேருகத முன்பிலாண்டுகளத்துறையாளனுக்கு இவர்கள் இறுக்கும் முதல் கொள்ளாதபடி கழத்துவரி இலார்க்கணக்கிலும் நிறுத்தும்படி சொல்லிவிட்டோம். * * * *

End :

மறுபடி சூரப்பசிங்குர்ரய ராமசத்திரபதி கற்பசுரோத்திரியப்பறவாணு பண்ணிக்கொடுத்தார்கள். * * *

கோவிலிலே மகாமண்டபம் இடிமாக விருக்கிறது. மராமத்து நடக்கவேண்டியிருக்கிறது. * * * *

(கு.-பு.)—

இது விருத்தாசலம், விழுப்புரம் தாலூக்காக்களைச் சார்ந்த திருவண்ணுமலை, அரைகண்டநல்லூர், திருக்கோவிலூர், வீரட்டானம், சிந்தாமணி நல்லூர், திருநறுங்கொண்டை, பருவூர், சிங்கபுரம் என்ற இவ்வூர்களிலுள்ள கோயில்களிலிருக்கும் சிலாசாஸனங்களை யெடுத்துணர்த்துகின்றது.

திருவண்ணுமலை	2
அரைகண்டநல்லூர்	8
திருக்கோவிலூர்	6
வீரட்டேசுவரம்	14
சிந்தாமணிநல்லூர்	3
திருநறுங்கோண்டை	8
பருவூர்	6
சிங்கபுரம்	1

ஆக 48 சிலாசாஸனங்கள் இத்துள் காணப்படுகின்றன. டைலர் துரையினது காடலாக்கில் 67-ஆம் பக்கத்தில் 2346-ஆம் நம்பரில் இது வருணிக்கப்பட்டுள்ளது. மூவருடக் காடலாக்கு 1543-ஆம் நம்பரில் வருணிக்கப் பட்டுள்ள பிரதிக்கு இதுவே மூலப்பிரதியாகும். முற்றுமுள்ளது.

No. 2768. கர்ணுடக ராஜாக்கள் வரலாறு.
KARṆĀṬAKA RĀJAKKAḶ VARALĀṚU.

Substance, palm-leaf. Size, 17¼ × 1½ inches. Pages, 494. Lines, 7 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old. Extent, 7,000 granthas.

Complete.

This work contains historical accounts of Karṇāṭaka and Muslim rulers from the commencement of the Kaliyuga to arrival of the 17th century A.D.

The author of this work is named Nārāyanan, born of the family of Anantakōn of Girjee. This work was composed while Lord W. Bentinck was Governor of Madras, at the special request of Colonel Mackenzie, the Commissioner of Arcot.

Same work as that described under No. 2305 of Taylor's Catalogue, Vol. III, p. 34.

Beginning :

பாயிரம்.

திருமகள் கேள்வனுரே சேவடி செலத்து மாறன்
அருமறைப் பொருள் களெல்லாமருந்தமிழுரை செய்வானே
நறுமலர்ப் பாதஞ் சென்னி நயங்கோளும்பூதூர் வள்ளல்
திருவடி போற்றும் நல்லான் சேவடி காப்புத்தானே

* * * * *

அம்மொழி கேட்டு நானும் ஆற்காட்டில்வாழ்மீர்கள்
செம்மையாயவர்கி தாப்பைச் சீருடன் படித்துக்கொண்டு
கொம்மைசேர் மூலேப்பார்மாது கொற்றவர் மற்றேர் காதை
எம்பிரானருளினுலே யெழுதவுந் தொடங்கினேனே.

* * * * *

காரண புருஷன் வீரன் கர்ணனென் கொடையால் மிக்கோன்
வாரணபுயத்தான் மக்கலோட் ? மாசுவையாரு நாளில்
தாரணியாண்ட வேந்தர் சரிதை நான் சொல்லமேலோர்
வாரணி மூலேப்பார்மாது மன்னர்கள் மனிதர் வாழி.

* * * * *

பாயிரமுற்றும்.

* * * * *

இவர்கள் முதலாகிய இராசாக்கள் இராசரீகம் பண்ணின சரித்திரத்தைச் சொல்லத் தொடங்கினேன் அவன் யாரோவென்னில் :—

செஞ்சி ஆனந்தக்கோன் கோவலன் கர்னுடக இராஜாக்களுக்கு இராஜாவாய் செஞ்சியிலேயும், படை வீட்டிலேயும் சிம்மாசனுதிபதியாய் இருந்தவர் வமிசத்துக் கொல்லாகாரம் இரங்கப்பிள்ளை குமாரன் நாராயணன். தன் பெரியவர்களின் உத்திரவுப்படிக்கும் அவர்கள் சொல்லக் கேள்வியினுலேயும் * * * *

End :

அந்தக் காலம் குடிகளுக்குக் கொஞ்சம் சிரமமாயிற்று. பசுலி சனத உரயெ-க்கு கேப்டன்-கர்னல் உல்லி மக்களோட்டுச் சாயபுக்கு ஆற்காடு சுபாவாயிற்று. அவர் நாளையில் விரையில்லாமல் போனபடியினுலே சாகு படிக்குக்குந்தகமாயிற்று. அவரும் சுபா பண்ணிக்கொண்டிருந்தார்.

(கு.-பு.)—

இது ஆற்காடு, செஞ்சி, டில்லி முதலியவிடங்களிலரசு செலுத்திய பல கர்னுடக, முகலாயவரசர்களினது வரலாற்றினை விரிதாயெடுத்துக் கூறுகின்றது. செஞ்சி ஆனந்தக்கோன் மரபிலுதித்த நாராயணன் என்னு

மொருவரால் மெக்கன்ஸி துரையினது. வேண்டுகோளுக்கிணங்க இது இயற்றப்பெற்றதெனத் தெரிகின்றது. டைலர் துரையின் காடலாக்கில் 34 ஆம் பக்கத்தில் 2305-ஆம் நம்பரிலிது வருணிக்கப்பட்டுள்ளது. முற்று மிருக்கிறது.

No. 2769 சதுர்யுகப் பிரமாணமும் தேச நிர்ணயமும்.

CATURYUGAPRAMĀṆA AND DESANIRṆAYA.

Substance, palm-leaf. Size, 18½ × 1 inches. Pages, 26. Lines, 5 on a page. Charactor, Tamil. Condition, injured. Appearance, old. Extent, 250 granthas.

Incomplete.

This work contains on account of the four Hinduyugas or cycles of years (Kṛta, Trētā, Dvāpara, Kali), the Genealogy of some Kings, a description of some countries, and other miscellaneous matters.

Same work as that described under No. 2315 of Taylor's Catalogue, Vol. III, p. 123.

Beginning :

கிருதயுகப்பிரமாணம் மீள இலட்சத்து உயிஅகூறு. நடக்கும் கிருதயுக புருஷன் இராசாவும் பிரதானியும். இவர்களிருவரும் தர்ம புருஷர்கள். இந்த ராசாவும் பிரதானியும் கூடிப்பிரவர்த்திக்கிறபடியினாலே சகல ஜனங் களும் தர்மயுக்தமாகப் பிரவர்த்திக்கிறபடியினாலே * * *

கலியுகப்பிரமாணம் :—

கலியுகம் ச இலட்சத்து நயிஉ ஆயிரம்ளுறு. நடக்கும் இந்தக் கலியுகத்துக்குக் கலி புருஷன் ருசாவும், பாபுருஷன் பிரதானியும். இவர்களிருவருங்கூடி பிரவர்த்திக்கிறபடியினாலே தர்மம் எப்போதுமாக வே நடக்கும். இந்தயுகத்துக்குப் புருஷப்பிரமாணம் ச ஆயுட் பிர மாணம் ா வருஷம். * * * *

End :

பிரபவ வருஷம் கார்த்திகைமீ முதல் இடில்லி சுறுதானிசா அபரங்க சாயி என்கிறவர் சுபா முதல் கட்டிக்கொண்டு பிரம்மதாயம் எல்லாமழித்து . . . .

(கு.-பு.)—

இது நான்கு யுகங்களின் பிரமாணத்தினையும், அவ்வப்பொழுது அர சாண்டுவந்த வரசர்களின் பெயர்களாண்டுகள் வீரச்செயல்கள் திருப்பணி கள் முதலானவற்றையும் எடுத்துணர்த்துகின்றது. டைலர் துரையினது காடலாக்கில் 123-ஆம் பக்கத்தில் 2315-ஆம் நம்பரிலுமிது வருணிக்கப் பட்டுள்ளது. மூவருடக் காடலாக்கு 335-ஆம் நம்பரில் வருணிக்கப்பட் டுள்ள பிரதிக்கு இதுவே மூலப்பிரதியாகும். இது போன்ற வேறு சில பிரதிகளுமுள்ளன.

No. 2770. சிங்கபுரிநாதசுவாமி கோயிற் சிலாசாஸனம்.

ŚINGAPURINĀTHASVĀMI KŌYIṞCILĀŚĀSANAM.

Substance, palm-leaf. Size, 15 × 1⅜, 16 × 1⅜, 17 × 1⅜ inches. Pages, 16. Lines, 4 and 5 on a page. Character, Tamil and Grantha. Condition, injured. Appearance, old. Extent, 100 granthas.

Complete.

Inscriptions on stone in the Jaina temple of God Arhatparameśvara worshipped under the name of Śingapurināthasvami at Cittāmūr.

Same work as that described under No. 2354 of Taylor's Catalogue, Vol. III, p. 73.

Beginning :

சிங்கபுரிநாத சுவாமியார் கோவில் பிரதக்ஷிணத்தில் அடிப்பிரதமப் பலகையில் எழுதியிருக்கப்பட்ட சிலாசாஸனங்களுக்கு நக்கல்:—ஸஹஸ்ரே.

ஸ்வஸ்திஸ்ரீ கோவீர ராஜகேசரி ஸ்ரீ விக்கிரம சோழதேவருக்கு யாண்டு ௰அ-ஆவது ஜெயங்கொண்ட சோழமண்டலத்துக்காலிபுரக் கோட்டத்துச் சிங்கபுரி நாட்டுச் சித்தாமூர்ச் சிங்கபுரிநாதசுவாமிக்கு நாம் த்ருமமாகக் கட்டளையிட்டோம். உ௰உ அடிக் கோலால் குழி ா கொண்டது ஒருமாவாக இந்நாட்டு வேணகத்தாரும், கொள்ளாறும், நெமிலியும், வீரணூரும்; எளமங்கலமும், விழுக்கமும், அருகாவூர், அகலூரும், நெற்குணம், தொண்டூரும். * * * * * * * * * * * * * * * * * * *

End :

கலசஸ்தாபன மேண்டையண்டையில் இருக்கிற தள்வரிசை சாஸனத்துக்கு நக்கல் :—

ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன்—வெங்கடபதி தேவமகாராயர் பிருதிவீ ராஜ்யம் பண்ணியருளாநின்ற சாலிவாகன சகாப்தம் தருாஉ௰ரு-க்கு மேல் செல்லாநின்ற சோபகிருதுஸ்ரீ கார்த்திகைமீ ௰ருஉ பாப்புநாயகரவர்கள் சீமையும் காளத்தியப்பா பிள்ளையவர்கள் வாரப்பத்து நிலத்தில் இரகுநாத நாயக்கரையனுக்குப்புண்ணியமாகச் சித்தாமூர் ஸிம்மபுரி நாத சுவாமியார் நேமிநாத சுவாமியார் மானியம் பண்டிதர், பூசகர், தேவாடியார் மேளக்காரர் பிரிவு வடக்குத் தாங்கல் இவர்கள் மானியங்களுக்கு நீர்க்கூலியில்லாமல் சருவமானியமாகக் கட்டளையிட்டபடி இரகுநாத நாயகரய்யன், தீட்சிதரய்யன் பாதத்தாணை. இந்தத் தருமம் சந்திராதித்தர் வரைக்கும் நடத்திவரக் கடவராகவும். இந்த தருமத்துக்கு அகிதம் பண்ணினவர்கள் கெங்கைக்கரையில் காராம் பசுவையும் மாதாபிதாக்களையும் கொன்ற தோடத்தில் போகக் கடவராகவும். * * * * *

(கு.-பு.)—

இது சித்தாமூரென்னு மூரிலுள்ள சிங்கபுரிநாத சுவாமியினது கோயிலிலிருக்கும் ஆறு சாஸனங்களை எடுத்துணர்த்துகின்றது. இக்கோயில் ஜைன மதத்தைச் சார்ந்ததாகும். டைலர் துரையினது காடலாக்கில் 73-ஆம் பக்கத்தில் 2354-ஆம் நம்பரில் இது வருணிக்கப்பட்டிருக்கிறது. மூவருடக்

காடலாக்கு 1544-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள பிரதிக்கு இது மூலப் பிரதியாகும். இவ்வூர் பற்றிய வேறு பல சாஸனங்களை யெடுத்துக் கூறு கின்ற பிரதிகளும் பலவுள.

No. 2771. திருக்கழுக்குன்றச் சிலா சாஸனங்கள் TIRUKKAḶUKKUṆṞACCILĀŚĀSANAṄKAḶ.

Substance, palm-leaf. Size 19¼ × 14/16 inches. Pages, 18. Lines, 3 on a page. Character Tamil and Grantha. Condition, injured. Appearance, old. Extent, 50 granthas.

Complete.

Begins on fol. 1a. The other works herein are Tirukkaḻukkuṉṟak-kurukkaḷ Mannarkaḻin varalaṟu 10a, Tirukkaḻukkuṉṟakkaipiḍu 23a.

Inscriptions on stones in God Siva's temple at Tirukkaḻukkuṉṟam, Chingleput district.

Same work as that described under No. 2352 of Taylor's Catalogue, Vol. III, p. 72.

Beginning :

அம்மன் கோவில் கருப்பகிருகத்தில் இருக்கிற சிலாசாஸனப்பிரதி.

ஸ்வஸ்திஸ்ரீ விஜய கோச்சடையப்பன் மாறன் திரிபுவன சக்கிரவர்த்திகள் எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவர்க்கு ஆண்டு கூ- ஆவது வையாசிமீ 2உ திருக்கழுக்குன்றத்து உடையார்ப் பொன்னிட்டீசு வ்ரம் உடைய நாயனுர் கோவிலுக்கு ஆதிசண்டேசுவர தேவர் இவ்வூர் உடையார் திருக்கழுக்குன்றம் உடைய நாயனுர்க் கோயிலிற் பூசிக்கும் சிவருத்திர பண்டு தரும் சிவமூர்த்திபட்டரும், தருணேந்துபட்டரும், திருக் கழுக்குன்றமுடையான் பட்டரும், சிவஞானபண்டு தருமசந்திரபூஷண பட் டரும் இவ்வனைவோரும் உபயத்திட்டுக் கொடுத்த பரிசாவது *

End :

உடையார் திருமலையாளுடைய நாயனுருக்கு ஆயிரவேலி பத்துநாட்டவ ரோம். இப்படிக்கு இவை வீசமூர்க்கிழவன் எழுத்து. இவை தையூர்க் கிழவன் எழுத்து. . . . . ப்பூதிமாலை ஆழ்வான் எழுத்து. இவை பொன்னம்பலக் கூத்தன் எழுத்து. திருச்சிற்றம்பலம் உடையான் எழுத்து. இவை நாட்டுக் கணக்குத் தொண்டைமண்டல வேளாளன் எழுத்து.

(கு.-பு.)—

இது செங்கற்பட்டை யடுத்துள்ள திருக்கழுக்குன்றம் என்னுமூரிலுள்ள சிவன் கோயில் சம்பந்தமான சாஸனங்களை யெடுத்துணர்த்துகின்றது. டைலர் துரையினது காடலாக்கில் 72-ம் பக்கத்தில் 2352-ஆம் நம்பரிலித வருணிக்கப்பட்டிருக்கிறது. மூவருடக் காடலாக்கு 1609 முதல் 1614 வரை யான நம்பர்களில் வருணிக்கப்பட்டுள்ள பிரதிகளுக்கு இதுவே மூலப்பிரதி யாகும். விபரங்களை அவற்றில்க் கண்டுகொள்ளவும்.

No. 2772. திருக்கழுக்குன்றக் குருக்கள் மன்னர்களின் வரலாறு.

TIRUKKAḶUKKUNṞAKKURUKKAḶ MANNARKAḶIN VARALAṞU

Pages, 24. Lines, 3 on a page. Extent, 90 granthas.

Begins on fol. 10*a* of the manuscript described under D. No. 2771.

Complete.

An account of the Kurukkaḷ (Temple-priests) of Tirukkaḷukkunram, Chingleput district. This work contains a note on the periods of reign of some rulers.

Beginning :

திருக்கழுக்குன்றங்

குருக்கள்மார் வரலாறு.

வடக்கே மந்திரகாளி புரத்திலே யிருக்கச்செய்தே இராஜேந்திர சோழ ராசா தனக்குப் பிரும்மஹத்தி தோஷம் போகிறதுக்கு ஆகாச கங்கா ஸ்நாநத்துக்குப் போகச்சே இராச்சியங்களிலிருக்கப்பட்ட ஸ்தலங்கள் தோறும் கோயிலுக்குள்ளே சுவாமி தரிசனம் பண்ணைப்போகச்சே இராசா தோளின் பேரிலே இருக்கப்பட்ட பிருமஹத்தி தோஷம் கோபுரவாசலிலே நின் றிருந்து தரிசனம் பண்ணிக்கொண்டு வரச்சே திரும்பவும் இராசா தோளின் பேரிலே வந்து ஏறிக்கொள்ளும். அப்படிக்கு ஸ்தலங்கள் தோறும் போகிற போது மந்திரகாளி புரத்துக்குப் போகச்சே ஊருக்கு வெளியேதானே பிரும்மஹத்தி நின்று இருந்தது. * * * * * * * * * * * * *

End :

சுவாமி பிரசாதமும் வாங்கிக்கொண்டு கிராமத்தில் பயிர் செய்துகொண்டு இந்த ஸ்தலத்தில் காத்திருக்கிறோம். இந்தப்படிக்கு நாங்கள் கேள்வி யானதும் அறிந்ததும் எழுதிவைத்த வரலாறு. சுக்கிலஷூ ஆவணிமீ சஉ. *

(கு.-பு.)—

இது திருக்கழுக்குன்றம் சிவக்குருக்கள்மார்களது பூருவ வரலாற்றினை யெடுத்துணர்த்துகின்றது. இராஜேந்திர சோழன் தனது பிருமஹத்தி தோஷத்தைத் தீர்த்துவைத்த, மந்திரகாளிபுரத்தைச் சார்ந்த குருக்கள்மார் நால்வரை இவ்வூருக்கு அழைத்துவந்து அவர்களுக்கு மானியங்கள் விட்ட தானஞ்செய்தியே இத்துள் விரிவாய்க் கூறப்பட்டிருக்கிறது. இதனிறுதியில் நான்கேடுகளில் பலிபந்தனன் முதலான சிலவரசர்களின் ஆட்சியினது காலங்கள் குறிக்கப்பட்டுள்ளன. மூவருடக் காடலாக்கு 347*h*, *i*-ஆம் நம்பர்களில் வருணிக்கப்பட்டுள்ள பிரதிகளுக்கு இது மூலப்பிரதியாம். அவற்றின் குறிப்புகளில் விரிவைக் கண்டுகொள்க. இது அறியாது திரும்பவும் பெயர்த்தெழுதப்பட்ட பிரதிகள் மூவருடக் காடலாக்கு 1615, 1616-ஆம் நம்பர்களில் வருணிக்கப்பட்டுள்ளன.

No. 2773. திருக்கழுக்குன்றக்கைபீது.
TIRUKKALUKKUNRAKKAIPĪDU.

Pages, 48. Lines, 3 on a page. Extent, 150 granthas.

Begins on fol. 23*a* of the manuscript described under D. No. 2771.

Complete.

An account of the property, daily worship, etc., of God Sivà's temple at Tirukkalukkunram, Chingleput district. Contains a list of the stone inscriptions in the temple of Talakkoil which belongs to the above Dēvasthanam.

Beginning :

திருக்கழுங்குன்றங்
கோயில் வரலாறு.

பிலவங்க௵ நாள் ஒன்றுக்கு நித்தியக் கட்டளைத் திட்டம். *

End :

கோயில்க் கணக்குப் புலிப்பாக்கம் உடையானையும், கோயிற் பரிசனங் களையும் தந்தோம் என்று அருளி * * * * * * * * * * * * * *

(கு.-பு.)—

இது திருக்கழுக்குன்றம் கோயில் நித்தியக் கட்டளை, நுந்தா விளக்கு பூருவோத்திரம் முதலானவற்றையும் பேரம்பலப் பண்டாரம் என்பவரது வரலாற்றினையும் எடுத்துணர்த்துகின்றது. மூவருடக் காடலாக்கு 341 *j* to *t* நம்பரில் வருணிக்கப்பட்டுள்ளவற்றிர்க்கு இதுவே மூலப் பிரதி யாகும். இது அறியாது திரும்பவும் பெயர்த் தெழுதப்பட்டுள்ளவை. மூவருடக் காடலாக்கு 1617 முதல் 1620 ஆன நம்பர்களில் வருணிக்கப் பட்டுள்ளன. விபரங்களுக்கு மூவருடக் காட்லாக்கு 341 *j* to *t*-யின் குறிப் பைக் கண்டு கொள்க.

No. 2774. திருப்பதி சிலாசாஸனம்.
TIRUPPATI SILĀŚĀSANAM.

Substance, palm-leaf. Size, 20 × 1 inches. Pages, 24. Lines, 5 on a page. Character, Tamil, Grantha and Telugu. Condition, injured. Appearance, old. Extent, 250 granthas.

Complete.

Stone inscriptions in the temple of God Srī Venkateśvara at Tirumalai and God Srī Gōvindarāja at Tirupati, Chittoor district.

Same work as that described under No 2348 of Taylor's Catalogue, Vol. III, p. 69.

But there the name of this manuscript is given wrongly as Viṣṇu Kāñci Śilāśāsanaṅkaḷ.

Beginning :

திருமலையில்:

சம்பங்கித் திருமதில் தென்னண்டைத் திருமதில் பேரில் இருக்கிற சிலாசாஸனம்.

ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் ௲சா௱௫-க்கு மேல் செல்லா நின்ற விகிருதி ஸம் வத்ஸரத்து மிதுன ஞாயத்து, சப்தமீ சோமவாரம் பெற்ற நாள் திருமலை ஸ்தானத் தோர்க்கு மகாமண்டலேசுவர வட்டராசர் திம்மப்ப தேவமகா ரா்சாவுக்குச் சிலா சாஸனம் பண்ணிக்கொடுத்தபடி திருவேங்கட முடையா னுக்கு உயுகாதியிலும் தீபாவளியிலும் * * * * * * * * * * * * *

End :

சதாசிவ ராயமகாராயர் பிருதிவீராஜ்யம் பண்ணியருளாநின்ற சகாப்தம் ௲சா௱௬-க்கு மேல் செல்லா நின்ற விசுவாவசுஸூ திருமலை ஸ்தானத் தோறும் குமார தாதாசார்யர் சீடரான * * * * * * * * * * *
* * * * * * * * * * * * * * * * * * * ஸ்ரீபண்டா பாரத்தில் ஒதுக்கின பணம் ௩தூ௱௫. இந்தப் பணம் மூவாயிரத்தெழு நூற்றன்பது. திருவெடையாட்டம் கிராமங்களில்.

(கு.-பு.)—

இது திருமலை திருப்பதி தேவஸ்தானங்களிலுள்ள சிலாசாஸனங்கள் பலவற்றை எடுத்துணர்த்துகின்றது. தென் மொழி, வட மொழி, தெலு ங்கு என்ற இப்பாஷைகளிலிது எழுதப்பட்டுள்ளது. டைலர் துரையினது காடலாக்கில் 69-ஆம் பக்கத்தில் 2348-ஆம் நம்பரிலிது வருணிக்கப்பட்டிருக் கிறது. இப்பிரதியிலுமவ்விடத்தும் இதன் பெயர் "விஷ்ணு காஞ்சி சிலாசாஸனம்" என்று கொடுக்கப்பட்டிருப்பது தவறாகும். எழுத்துக்கள் தெளிவாயில்லை. முற்றுமிருக்கிறது.

No. 2775. மராட்டியத்துளுவதேயக் கைபீது.
MARĀṬṬĪYATTUḶUVADĒYAKKAIPĪDU.

Substance, palm-leaf. Size, 16¼ × 1¼ inches. Pages, 24. Lines, 7 on a page. Character, Tamil and Grantha. Condition, injured. Appearance, old. Extent, 250 granthas.

Complete.

An account of the Dakkṣiṇakhaṇḍam or Marāṭṭiyattuḷuva kingdom.

Same work as that described under No. 2333 of Taylor's Catalogue, Vol. III, p. 59.

Beginning :

தக்கிணசீமையென்கிற
மராட்டியத் துளுவதேசக்
கைபீது.

தக்கிண கண்டம் என்கிற மராட்டியத் துளுவ தேசமாகப்பட்டது நர்மதை யாற்றுக்குத் தென்கரை முதற்கொண்டு துங்கபத்திரை யாற்றுக்கு வட கரை வரைக்கும்.

அப்படிக் கொத்த தேசத்தில் துவாபரயுகம் வரைக்கும் இராசாக்கள் சத்தியதைத்தயுடையவராய் இராச்சிய பாரம் பண்ணிக்கொண்டு இடில்லி மகாராசாக்கள் செனமேஜய மகாராசா வரைக்கும் *

End :

வெள்ளைக்காரர் பதினைந்து கப்பல் வாங்கிக் கொண்டு குசமுத்துப் பக்கம் துவாரகை சமீபம் பம்பாய்க்குச் சமீபம் கரைதறை வந்து இறங்கினார்கள். அந்தச் சமாசாரம் பீசாப்பூர் பாட்சா கேட்டு வெள்ளைகாரர் வந்து இறங்கினது அதிசயப்பட்டு பொவுசு வாங்கிக்கொண்டு வெள்ளைக்காரர் இறங்கின தானத்திலே போய் அவர்களை அழைப்பித்து நீங்கள் இவ்விடத்துக்குக் கப்பல் வாங்கிக்கொண்டு வரவேண்டிய தென்னென்று கேட்க அவர்கள் சொன்னது :—

எங்களுக்கு இந்த இடம் கொடுத்தால் வர்த்தகம் பண்ணிக்கொண்டு இருக்கிறோம். என்று பாட்சாவுக்கு உசித வஸ்துக்களைக் கொடுத்துச் செலவு வாங்கிக்கொண்டு சனமசுத்துரிலே கொல்லாபந்தர் கட்டிக்கொண்டு வர்த்தகம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். தக்கண காண்டம் முற்றும். டில்லி * வாங்கிக்கொண்டார்கள்.

(கு.-பு.)—

இது மராட்டியத் துலுவதேயத்தினது எல்லை, அதை யாண்டுவந்த பலதிறப்பட்டவரசர்களினது வரலாறு முதலானவற்றை எடுத்துணர்த்துகின்றது. பீசாப்பூர் பாட்சா காலத்தில் வியாபார நிமித்தம் ஆங்கிலேயர்கள் பம்பாய்க் கருக்காமையில் வந்திறங்கி அவரது உத்திரவின்பேரில் வியாபாரம் செய்யத் துடங்கினதானவிச் செய்தியுமித்துள் கூறப்பட்டிருக்கிறது. டைலர் துரையினது காடலாக்கில் 59-ஆம் பக்கத்தில் 2333-ஆம் நம்பரிலிது வருணிக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்திலிது "கர்நாடக ராசாக்கள் சரித்திரம் போன்றுளது" எனக் குறிக்கப்பட்டுள்ளது. இதனிறுதியில் நான்கு ஏடுகளில் சீவன்கள், இராசிகள் இவற்றின் உற்பத்தி தன்மை முதலியவற்றைப் பற்றின சில குறிப்புகள் எழுதப்பெற்றுள்ளன. மூவருடக் காடலாக்கு 1545-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள பிரதிக்கு இதுவே மூலப் பிரதியாகும்.

No. 2776. டில்லி ராஜாக்கள் சரித்திரம்.

DILLIRĀJĀKKAḺ CARITTIRAM.

Substance, palm-leaf. Size, 15¾ × 1½ inches. Pages, 16. Lines 7, on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old. Extent, 20[0] granthas.

Complete.

A genealogical account of the Kings of the Lunar race and Muslim rulers of Delhi, Bengal, Deccan, etc.

Same work as that described under No. 2325 of Taylor's Catalogue Vol. III, p. 55.

Beginning :

பூருவம். பங்காளர் சீமை. ஹரி : ஓம். நன்றாகவேணும்.

பூருவம் இந்துஸ்தானம் என்னப்பட்ட தில்லி சீமையில் அர்ச்சுனபுரம் இராசாதிராசர் பரீக்ஷித்து மகாராசர் பிள்ளை செனமேசெனன் (செனமே சயன்) கலியுகவு நாஉ௰-க்குக் கொஞ்சம் ஏறக்குறையச் சகல தேயத் திற்கும் மகாராசர் பட்டம் ஆண்டு விழுந்துபோனபிறகு அவரது வழியினர் அதிகாரம் பண்ணுகிற ராசாக்கள் யதேச்சையாய் இராசரீகம் பண்ணிக் கொண்டு தில்லி அதிகாரம் மகாராசர் மகாராசர்களுக்கு வணங்காமல் மகாராசாவான செனமேசயனுக்கு வமிச வழுப்பிள்ளையில்லாததினாலே * * * * * * * * * * * * * * அப்படியிருக்க மகாராசா விக் கிரமதித்தன் அவதாரமாகி இந்துஸ்தான் தேசம், பங்காள நாடு முதல் தக்கன சீமை, பச்சிம தேசம் சகலத்துக்கும் மகாராசாவாய்ச் சகல *

End :

இடில்லியிலே தங்கள் பக்கம் பாதுஷாவை வைத்துக்கொண்டு தாங்கள் சகலத்துக்கும் உத்தியோக சன்னது பாதுஷா கையில் வாங்கிக்கொண்டு இந்துஸ்தான ருஜாக்கள் வணங்கினவர்களைத் தன்னதாக்கிப் பணமும் வாங்கிக்கொண்டு எதிர்த்தவர்கள் பேரில் சண்டை பண்ணிக்கொண்டு பசலி சன் கூஉாஉ௰ வரைக்கும் இந்துஸ்தானம் பங்காளர் தேசம் இராச்சியம் பண்ணிக்கொண்டு வருகிறார்கள்.

(கு.-பு.)—

இது டில்லியில் சநமேசய ராசா முதற்கொண்டு அரசு செலுத்தி வந்தவ வரசர்களினது சரித்திரத்தை எடுத்துணர்த்துகின்றது. இந்துஸ்தானம், பெங்காளம், தக்கணம் முதலானவிடங்களிலரசாண்டு வந்த சில வரசர் களின் சரித்திரமும் இத்துள் கூறப்பட்டிருக்கின்று. டைலர் துரையினது காடலாக்கில் 55-ஆம் பக்கத்தில் 2325-ஆம் நம்பரிலிருந்து வருணிக்கப்பட் டிருக்கிறது. முற்றுமிருக்கிறது.

D. No. 2777. திருவண்ணுமலைக் கோயிற் கைபீது.
TIRUVAṆṆĀMALAIKKŌYIṞKAIPĪḌU.

Substance, palm-leaf. Size, 18¾ × 1 inches. Pages, 42. Lines, 4 on a page. Character, Tamil and Grantha. Condition, injured. Appearance, old. Extent, 300 granthas.

Complete.

On the religious greatness of the temple of God Śrī Aruṇācalēśa at Tiruvaṇṇāmalai. Contains also a copy of a stone inscription in the Śiva's temple at Tiruvaṇṇāmalai.

Same work as that described under No. 2342 of Taylor's Catalogue, Vol. III, p. 90.

Beginning :

திருவண்ணுமலே ஸ்ரீ அருணுசலேசுவரர் அபீதகுச நாயகியம்மன் சரித்திரம். ஸ்தலத்திலிருக்கும் பாண்டவேசுவரக் குருக்கள் குமாரசுவாமிக் குருக்கள் இவர்கள் வாக்கும் மனதும் எட்டாத மகிமை உடைத்தாகிய அகண்டாகார சச்சிதாநந்த பரப்பிரம்ம சுரூபமாயிருக்கும் பரமசிவன் தானே எழுந்தருளி அண்ணுமலேயார் என்னும் திருப்பேர் புனைந்த திரேதாயுகம் பதினேழு இலக்ஷத்து இருபத்து எண்ணுயிரம் வருஷம் *

End :

என்றும் எண்ணிச் சுவாமிக்குக் கிராமம் முதலாகியதும் விட்டு நடப்பித்துக்கொண்டுவந்தார்கள். அப்படியே இராசமானிய இராச . . . . . . அவர்களும் நடப்பிவித்துக்கொண்டு வருகிருர்கள். முற்றும்.

அருணுசலம்.

Inscription.

Beginning :

திருவண்ணுமலே அருணுசலேசுவரர் சந்நிதியில் உள் வச்சிராங்கத பாண்டியன் மதிளில் கோபுரவாசல் தென்பக்கம் கீழ்ப்புறத்து மதிலில் எழுதியிருக்கப்பட்ட சிலாசாஸனத்துக்கு நக்கல் :—

மகாமண்டலேசுவரன் அரியராய விபாடன் * * * * * * * * * *

End:

திருச்செங்கழுநீர் அறு நூறும் நாடோறும் நடந்து கொள்ளக் கடவர்கள் ஆகவும். இப்படிக்கு இவ்வூர் அடங்கலும் சருவமானியம் இறையிலியாக அனுபவித்துக்கொள்ளக் கடவீர்களாகவும். இந்த ஊரில் *

(கு.-பு.)—

இது திருவண்ணுமலே அருணுசலேசுவரரது ஸ்தல மாகாத்மியத்தினையும் அவ்வூர்க் கோயிலினுள்ளதோர் சிலாசாஸனத்தையும் எடுத்துணர்த்துகின்றது. டைலர் துரையினது காடலாக்கில் 90-ம் பக்கத்தில் 2342-ஆம் நம்பரிலிது வருணிக்கப்பட்டுள்ளது. முற்றுமிருக்கிறது. ஏடுகள் சிதிலமாயிருக்கின்றன. இவ்வூர் பற்றிய சாஸனங்கள் வேறு பலவற்றை யுணர்த்தும் வேறு பல பிரதிகளுமிருக்கின்றன.

No. 2778. திருவாவடுதுறைக் கோயில் கைபீது.
TIRUVĀVAḌUTUṞAIKKŌYIL KAIPĪDU.

Substance, palm-leaf. Size 15½ × 1¼ inches. Pages, 38. Lines, 6 on a page. Character, Tamil. Condition injured. Appearance, old. Extent, 300 granthas. Complete.

A Kyfiet and the sacred Legend relating to the temple of God Siva at Tiruvāvaḍuturai, Tanjore district.

Same work as that described under No. 2335 of Taylor's Catalogue, Vol. III, p. 148.

Beginning :

திருக்கைலாயச் சிலம்பில் நவசித்தர்கள் ஒரு காலத்திற் சிவனைத் தரிசிப்பதற்காகச் சென்றார்கள். அப்பொழுது நந்திகேசுவரர் வாயிலிற் றடை செய்தார். அவர்கள் சில பொழுது காத்திருந்து சமயம் பார்த்து நந்திகேசுவரருத்திரவுப்படிக்கு உள்ளே போய்த் தரிசனம் செய்தார்கள். அப்பொழுது சிவபூசை செய்யச்சொல்லி * * * * * * * * * *

End :

இந்துக்களுடைய தம்பிரான்கள், பண்டாரங்கள், பண்டார சந்நிதிகள் இவர்களுடைய பூருவோத்திரம் இவ்வாறு.

முற்கூறிய பாஷியத்தின் உண்மையை விளக்குகிறதுக்குச் சாட்சிகள். ஆலாசிய மகத்துவம், வாயு ஸம்ஹிதை, சூத சம்ஹிதை, பிருமாண்ட புராணம், சிவஞானபோதம், சித்தாந்த ஸாராவளி * * * * * * * * * * * * * இந்தப் பாஷியம் முன்னம் ஆகமங்களினின்றும் திருவேற்காடு, ரா. முத்தையயா முதலியார் இங்கிலீஷ் பாஷையால் செய்தார். அதைச் சைவ கந்தப்ப முதலியார் மருமகன் அனக்கட்டாப்புத்தூர் நயினப்ப முதலியார் தமிழாற் செய்தார். கோபாலு.

(கு.-பு.)—

இது கோமுத்திதலம் என்னும் திருவாவடுதுறைக்கோயில், தலம், பண்டார வகை, சைவ சித்தாந்தக் கொள்கை முதலான பல விஷயங்களை யெடுத்துணர்த்துகின்றது. டைலர் துரையினது காடலாக்கில் 148-ஆம் பக்கத்தில் 2335-ஆம் நம்பரிலிது வருணிக்கப்பட்டிருக்கிறது. மூவருடக் காடலாக்கு 339 *a–c* ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டிருக்கிற பிரதிகளுக்கு இதுவே மூலப்பிரதியாகும். முற்றுமிருக்கிறது.

No. 2779. தேவராய மகாராயர் சாஸனம்.

DĒVARĀYAMAHĀRĀYAR ŚĀSANAM.

Substance, palm-leaf. Size, 21¾ × 1¼ inches. Pages, 16. Lines, 5 on a page. Character, Tamil and Grantha. Condition, injured. Appearance, old. Extent, 100 granthas.

Begins on fol. 1 *a*. The other works herein are Penukoṇḍa Śilāśāsanam, 9-*a*, Kaḍalūr śāsanam 10 *a*, Cennarāyasvāmikoil śilāśāsanam 15 *a*, Virūpākṣasvāmikoil śilāśāsanam 20 *a*, Harihararāyan daḷakartan dānaśāsanam 23 *a*, Viṣṇuvardhanarāyan Vaṁśāvaḷi 24 *a*, Peḷḷūrkkoil śilāśāsanam 27*a*, Vīranaraśinkarāyan Kālattiya śāsanaṅkaḷ 29*a*.

Complete.

Inscriptions of Dēvārāyamahārāya of Vijayanagar relating to the Agrahāra, Dēvarāyapuram.

Same work as that described under No. 2347 of Taylor's Catalogue, Vol. III, p. 67.

Beginning :

தேவராயமகாராயர் சாஸனம்.

அக்கிரஹாரங்களின் சாஸனம் எழுதுகிறதுக்கு விக்கினமன்றியிருக்க வேணும்.

ஸ்ரீகணேசாதிபதயே நம :

* *

பூமியை உத்தரிச்சவரே ! உம்மை நமஸ்க்கரிக்கிறேன். வெகு ராச நீதியுடனே இருக்கிற யதுவமிசமாகிற சமுத்திரத்துக்குச் சந்திரனுயிருக்கிற * அப்படிப்பட்ட தேவராயனுடைய பட்டாபிஷேக சமயத்தில் தன்னை யாச்ரிதமாயிருக்கிற பிராமணர்களுக்கு தேவராயபுரம் என்று பேர்வைத்து ஓர் அக்கிரஹாரம் பண்ணிக்கொடுத்தான். சகை௵ ௲உ௱௭௰ * * * * * * * *

End :

தேவாலய சகிதமாய் சகல பல போகங்களுடனே கொடுத்தது. சாலிவாகன சகம் ௲உ௱௭௰ விஜய ஸம்வத்ஸரம், கார்த்திகைமீ௴ கிருஷ்ண பக்ஷம் தசமி சுக்கிரவாரத்திலே உத்திரபாத்ரபதா நட்சத்திரத்திலே பட்டாபிஷேக சமயத்திலே பண்ணின தரும சாஸனம். ஸ்ரீராமஜயம்.

(கு.-பு.)—

இது விஜயநகரத்தரசருள் ஒருவரான தேவராயமகாராயர் என்பவர், தமது பட்டாபிஷேக காலத்தில் தேவராயபுரமென்னு மோர் அக்கிரஹாரத்தை பிராமணர் சிலருக்குத் தானமாகவளித்த செய்தியை யுணர்த்துமொரு சாஸனத்தின் பிரதியாகும். டைலர் துரையினது காடலாக்கில் **67**-ஆம் பக்கத்தில் **2437**-ஆம் நம்பரிலிது வருணிக்கப்பட்டுள்ளது. மூவருடக் காடலாக்கு **1575**-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டிருக்கும் பிரதிக்கு இதுவே மூலப்பிரதியாகும்.

No. 2780. பெனுகொண்டா சிலாசாஸனம்.

PENUKONḌĀ ŚILĀŚĀSANAM.

Pages, 2. Lines, 7. Extent, 10 granthas.

Begins on fol. 9 *a* of the manuscript described under D. No. 2779.

Complete.

A stone inscription of Penukoṇḍa.

Beginning :

சகவருஷம் ௲௩௱.

சிகதேவராய துர்க்கத்து உத்தரபாகத்திலே பெனுகொண்டாவாசல் சமீபத்திலே இருக்கிற சிலாசாஸனத்துக்குப் பிரதி.

ஸ்வஸ்திஸ்ரீ விஜயாப்யுதய சாலிவாகன சக வருடம் ௲௩௱ விக்ரம௵ சித்திரைமீ௴ சுக்கிலபட்சம் பாட்டியமியிலே இராசாதிராசராய் இராச பரமேசுவரன் என்று பெயர் உண்டாயிருக்கிற ஸ்ரீ வீர ஹரிஹரராயனுடைய குமாரன்

ஸ்ரீமன் மகாமண்டலேசுவர ஸ்ரீ வீரபுக்கண்ணருக்குப் புஜபலனுயிருக்கிற சினேகிதன் அலுப நாயகருடைய மகன் பால நாயகன் ஆனைவிழுந்த பள்ளத்துக்குச் சமீபத்திலேயிருக்கிற கோட்டைக்குள்ளே மேற்புரத்திலே கட்டின சுனையை நன்றாய் கட்டின தருமம். * * * * * * * * * * * *

(கு.-பு.)—

இது அலுப நாயகன் மகனுன பால நாயகன் என்பவர் செய்துள்ள இரண்டு தருமங்களை எடுத்துணர்த்தும் சிலாசாஸனத்தினது பிரதியாகும். மூவருடக் காடலாக்கு 1580-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள பிரதிக்கு இது மூலப்பிரதியாகும்.

No. 2781. கடலூர் ஹரிஹர ராசபுரம் சாஸனம்.

KAḌALŪR HARIHARARĀŚAPURAM ŚĀSANAM.

Pages, 10. Lines, 5 on a page. Extent, 65 granthas.

Begins on fol. 10 *a* of the manuscript described under D. No. 2779.

Complete.

An inscription relating to Harihararāyapuram on the bank of the Tuṅgabhadra River, which was given away as a gift to Thirteen gotras of Brahmins by Harihara Rāya.

Beginning :

கடலூர் சாஸனப்பிரதி சக௵ ௲௱௬.

* * * * * * * * * * * * * * * * * அவன் வம்சத்திலே அதிவீரன் சம்புராயன், புக்கராயன், மாறுபராயன், முத்தப்பன் என்றிப்படி அஞ்சுபேர்கள் பிறந்தார்கள். * * * * * * * * அப்படிப்பட்ட சாதியினிடத்திலே ஹரிஹரராயன் என்றவன் உண்டானுன். * * * * * * * கடலூர் என்கிற கிராமம் மானயம். ஹள்ளியுடனே கூடியிருக்கிற சின்னக் கடலூர் என்கிற கிராமத்துடனேகூட அக்கிரஹாரம் பண்ணிக்கொடுத்தார்.

End :

என்று ஹரிஹரராயன் தருமதானம் பண்ணிக்கொடுத்தான். இந்தக் கிராமத்தின் எல்லை நாலு திக்குகள் விவரம் தேசபாஷையினுலே எழுதியிருந்தது.

(கு.-பு.)—

இது ஹரிஹரராயனென்னு மோர் அரசன் துங்கபத்திரா நதிக்கரையில் கடலூர், சின்னக் கடலூர், ஹரிஹர ராயபுரம் என்னும் கிராமங்களை யேற்படுத்தி பிராமணர் பதின் மூவருக்குத் தானம் செய்த வரலாற்றை யெடுத்துணர்த்துகின்றது. முற்றுமுள்ளது. மூவருடக் காடலாக்கு 1581-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டிருக்கும் பிரதிக்கு இது மூலப் பிரதியாகும்.

No. 2782. சென்னராய சுவாமி கோயில் சிலாசாஸனம்.

CENNARĀYA ŚUVĀMIKŌYIL ŚILĀŚĀSANAM.

Pages, 10. Lines, 5 on a page. Extent, 65 granthas.

Begins on fol. 15*a* of the manuscript described under D. No. 2779.

Complete.

Stone inscriptions in Cennarāyasvami's temple at Unnāvāram village relating to grants by Viṣṇuvardhanarāya, Vallāḷarāya and others.

Beginning :

ஹாசன ஒபளி குதுரேகுண்டி ஸ்தலத்து உன்னுவாரம் என்கிற கிராமத்திலே சென்னராயஸ்வாமி சந்நிதிமுன்னே நட்டு இருக்கிற கல்லிலேயிருக்கிற சாஸனப் பிரதி :—

* * * * * * * * * * * * * * * * * * அக்கிராமத்திலே சகை௵ ௲எயிக விபவ் வருடம் மகா சுத்தத் திரயோதசி மங்களவாரம் உரோஹிணி நட்சத்திரம் கடகலக்கினத்திலே ஸ்ரீ கேசவப் பிரதிஷ்டையும் பண்ணி *

End :

பூந்தோட்டம் முதலானதும் சுங்கம் முதலானதும் ஸ்ரீ கேசவ ஸ்வாமிக்குத் தாரா பூருவகமாய்க் கொடுத்தான். இது தவிர சங்கறட நாயகன் மகன் பொக்கண்ணனுக்கு ஒரு கண்டம் விரைப்பாடு வயல் பரிசாரகம் ஆளய்யனுக்குப் புத்துக்குளகம் வயல். இந்தப்படி தர்மதானம் பண்ணிக் கொடுத்தான்.

(கு.-பு.)—

இது விஷ்ணுவர்த்தனராயன், சென்னராயசுவாமி கோயிலுக்குச் செய்த தானதருமங்களை யெடுத்துணர்த்துகின்றது. பின்னர் வல்லாளராயனது காலம் ௲டு எனக் குறிக்கப்பட்டிருக்கிறது. முற்றுமிருக்கிறது. மூவருடக் காடலாக்கு 1582-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டிருக்கும் பிரதிக்கு இதுவே மூலப்பிரதியாகும்.

No. 2783. விரூபாக்ஷஸ்வாமி கோயில் சிலா சாஸனம்.
VIRŪPĀKṢASVĀMIKŌYIL ŚILĀŚĀSANAM.

Pages 3. Lines, 14. Extent, 15 granthas.

Begins on fol. 20*a* of the manuscript described under D. No. 2779.

Complete.

Inscriptions on stone in the temple of God Śri Virūpākṣasvāmi at Vijayanagaram. Contains details of a donation to God Śri Virūpākṣasvami made by Ellappanāyakar and the fragnients of a deed of donation by Timmarāya.

Beginning :

சக௵ ௲சாருயிச.

ஆசனம் விரூபாக்ஷஸ்வாமி கோவிலிலேயிருந்த சாஸனப் பிரதி :—

ஸ்வஸ்திஸ்ரீ விஜயாப்யுதய சாலிவாகன சகம் ௲சருயிச கர௵ வைசாக சுத்த பஞ்சமி சோமவாரத்திலே ஸ்ரீமந் மகாராசாதிராச ராசபரமேசுவர அச்சுத மகாராயர் விஜயநகரிப் பட்டணத்திலே * * * * * * * * *

End :

ஊற்றூர் கிராமத்திலே சகல போகமும் தர்மம் பண்ணிவிட்ட தரும சாஸனம். * * * * * இந்தச் சாஸனம் நரசிங்கராயன் மகன் கிருஷ்ணராயர் தம்பி அச்சுதராயர் காலத்திலே. சென்னப்பண்ண சருதாருக்கு மருமகன் திப்ப நாயகன் மருமகன் எல்லப்ப நாயகன் விட்டது.

ஆத்தூரு கிருமத்துச் சாஸனம்.

(கு.-பு.)—

இது அச்சுதராயர் காலத்திருந்த எல்லப்ப நாயகன் என்பாரொருவன் விருபாக்ஷதேவருக்கு அளித்த நன்கொடையினை எடுத்துணர்த்தும் ஓர் சாஸனத்தின் பிரதியாகும். இதனிறுதியில் சகஷஸ்ரூப தூசாாரு௰ள யுவ வருஷம் கிருஷ்ணராயரின் தம்பியான திம்மராயன் என்பவரது தான சாஸனத்தின் ஓர் பகுதி அரை குறையாக வெழுதப்பெற்று விடுக்கப்பட்டுள்ளது. முற்றுமுள்ளது. மூவருடக் காடலாக்கு 1583-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள பிரதிக்கு இதுவே மூலப்பிரதியாகும்.

No. 2784. ஹரிஹரராயன் தளகருத்தன் குண்ட தண்டன் தான சாஸனம்.

HARIHARARĀYAN DAḶAKARUTTAN KUNḌADANḌAN DĀNAŚĀSANAM.

Pages, 2. Lines, 8. Extent, 10 granthas.

Begins on fol. 23*a* of the manuscript described under D. No. 2779.

Complete.

An inscription relating to the gifts and donations to God Śri Kēsavasvāmi of Vēlūr by Kunḍadanḍa, Commander under King Harihararāya.

Beginning :

சகஷஸ்ரூப தூாரு௰உ.

ஹரிஹரராயன் காலத்திலே நடந்தது. யது வம்சத்திலே ஹரிஹரராயன் தோன்றினன். * * * * * அந்த ஹரிஹரராயனுடைய தளவாய் குண்டதண்டன் என்பவன் அனேக தேசங்களைச் செயம் பண்ணிக்கப்பம் வாங்கிக் கொண்டு உத்தர தேசம் செயித்துச் செயஸ்த்தம்பம் நாட்டினவன்.

அந்தப் பிரதானி வேலூர் கேசவஸ்வாமிக்கு அங்கரங்க நித்தியக் கட்டளை முதலானவையும் இரதோத்ஸவங்களும் முன்னாலேற்பட்ட விஷ்ணு வர்த்தனராயன் பண்ணின பல தருமங்களையும் பரிபாலனம் பண்ணி * * * * * * * *

End :

கோபுரம் எழுநிலையாய்க் கட்டிச் சேதம் போயிருக்கிற கதவுகளுக்குப் பதிற் கதவுகளை யுண்டாக்கிப் பிராகாரமுங் கட்டிப் பாண்டிய ராசர் வமிசத்

திலே கட்டின சபாமண்டபமும் உத்தாரணம் பண்ணினன். சக வருஷம் தூறுடைய சௌமிய வருஷம் ஹரிஹரராயன்றன் தளபதி குண்டதெண்டன் சென்னகேசவருக்குத் தருமம் பண்ணிக்கொடுத்தான்.

(கு.-பு.)—

இது ஹரிஹரராயன் தளபதியான குண்டதெண்டன் என்பானொருவன் வேலூர் கேசவஸ்வாமி கோயிலுக்குச் செய்த திருப்பணிகள் முதலான வற்றை எடுத்துணர்த்துகின்றது. மூவருடக் காடலாக்கு 1584-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள பிரதிக்கு இதுவே மூலப்பிரதியாகும்.

No. 2785. விஷ்ணு வர்த்தனராயன் வம்சாவளி.
VIṢṆUVARDHANARĀYAN VAṀSĀVAḶI.

Pages, 5. Lines, 5 on a page. Extent, 35 granthas.

Begins on fol. 24*a* of the manuscript described under D. No. 2779.

Complete.

Contains a geneological account of the kings of the Hoysala dynasty to which Viṣṇuvardhanarāya belonged. This manuscript also describes donations to God Śri Keśavasvāmi and the Brahmins by Viṣṇuvardhanarāya.

Beginning :

மொரலேய சாஸனம்.

ஸ்ரீ கேசவஸ்வாமியினுடைய சாஸனம்.

* * * * * * * * * * * * * * அந்த வம்சத்திலே வல்லாள ராயன் விஷ்ணுவர்த்தன விநயாதித்தன் இவர்கள் உண்டானார். இவர் களிலே விஷ்ணுவர்தனராயன் * * * * * * * * * செவளிநாடு மொரலேய கிராமம் அக்கிரஹாரம் பண்ணிப் பிராமணர்களுக்குச் சருவமா னியமாகக் கொடுத்து ஸ்ரீ கேசவப் பிரீதியாய் தேவாலயத்துக்கு வந்து *

End :

இத்தைப் பரிபாலனம் பண்ணின பேருக்குக் கங்கைக் கரையிலே ஆயிரம் கோதானம் பண்ணின பலமும் உத்தராயண காலத்திலே துலாதானம் பண்ணின பலனும் உண்டாகக்கடவது. * * * * * * * * *

(கு.-பு.)—

இது ஹொய்ஸள வம்சத்து விஷ்ணுவர்தனராயனது வம்சாவளியையும் அவன் செய்த தானதருமங்களையும் எடுத்துணர்த்துகின்றது. மூவருடக் காடலாகு 1596-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள பிரதிக்கு இதுவே மூலப்பிரதியாகும்.— முற்றுமிருக்கிறது.

No. 2786. பெள்ளூர்க் கோயில் சிலாசாஸனம்.
PEḺḺŪRKKŌYIL ŚILĀŚĀSANAM.

Pages, 4. Lnes, 5 on a page. Extent, 25 granthas.

Begins on fol. 27*a* of the manuscript described under D. No. 2779.

Complete.

Inscriptions on stone and copper plates in the temple of God Śrī Mādhava at Peḻḻūr, relating to the donations of villages to the Mādhavapperumāḷ temple and 96 Brahmins of the same village made by the king named Vīranaraśiṅkarāya.

Beginning :

சாலிவாகன சகம் தூஉாகூ.

வீரநரசிங்கராயன் காலத்திலே பெள்ளூர்க்கோவிலிலே யிருந்த சிலா சாஸனப் பிரதி. * * * * * * * * * * * * * * * * *
அவன்றன் மந்திரிபெருமான் தண்ட நாயகன் வீரநரசிங்க ராசாவின் கையிலே தாராபூர்வகமாய்த் தாம்ர சாஸனம் வாங்கிக்கொண்டு பெள்ளூர் ஸ்ரீ மாதவப் பெருமாள் தேவருக்கும், ஸ்ரீராமகிருஷ்ணஸ்வாமிக்கும் * * * * * * * * பெள்ளூர் தொண்ணூற்றுறு பிராமணர்களுக்கும் கொடுத்து தர்ம தானம் பண்ணின வயணம். * * *

End :

தாரா பூருவகம் பண்ணிக் கொடுத்தது. சகைஞூ தூஉாகூ பார்த்திவஞூ கார்த்திகைமீ சுத்தபாட்டிமை ஆதித்திய வாரம் இக்காலத்திலே இந்தப்படி தருமதானம் பண்ணிக்கொடுத்தான். * * * * * * * * * * * * * * * * * *

(கு.-பு.)—

இது வீரநரசிங்கராயனென்பானோர் அரசன், தனது மந்திரி தண்ட நாயகன் மூலம் பெள்ளூர் கோயில்களுக்குச் செய்வித்த தான தருமங்களையும், அவ்வூர் பிராமணர் தொண்ணூற் றறுவர்களுக்குச் செய்வித்த தான முதலியவைகளையும் எடுத்துணர்த்தும் பெள்ளூர் கோயிலிலேயே யுள்ள தோர் தாம்பிர சாஸனத்தின் நக்கலாகும். மூவருடக் காடலாக்கு 1597-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள பிரதிக்கு இதுவே மூலப் பிரதியாகும். முற்றுமிருக்கிறது.

No. 2787. வீர நரசிங்கராயன் காலத்துச் சாஸனங்கள்.
VĪRANARAŚIṄKARĀYAN KĀLATTUCCĀSANAṄKAḶ.

Pages, 24. Lines, 5 on a page. Extent, 150 granthas.

Begins on fol. 29*a* of the manuscript described under D. No. 2779.
Complete.

Stone inscriptions of the time of the king named Vīranaraśiṅkarāya who was the son of Vīrasōmēśvaracakravarti, relating to the large donations of villages, etç, to various temples made by the same kings through the officers.

Beginning :

சக வருஷம் ௲௨௱ஏ.

வீர நரசிங்கராயர் காலத்தன.

மாதேவ தேவர் கோவிலினுடைய தெட்சிண திக்கிலே கிழக்கு முகமாக விருந்த சிலாசாஸனப் பிரதி :—

* * * * * * * * * * * * * * * * * வீரநரசிங்கராயன் பிறந்தான். அவன் ருச்சியம் வெகு நீதியுடனே ரெட்சித்தான். அவன் மிக்கனசந்தா என்னும் கிராமத்திலே கேசவஸ்வாமி, நரஸிம்ம தேவர், கோபாலசுவாமி இவர்களைப் பிரதிஷ்டை பண்ணி அக்கோயில்களுக்கு நித்திய நைமித்திக அங்கபோக தீபாராதனை முதலானதுக்கும் திருப்பணிகளுக்கும் கொடுத்த தருமம். * * * * * * * * * * * * * *

End :

ஹொய்சள நரசிங்க தேவர் தோரைசமுத்திரத்திலே இருந்துகொண்டு துஷ்ட்ட நிக்ரஹ சிஷ்ட்ட பரிபாலனத்தினலே இராச்சியம் இரட்சித்துக் கொண்டு இருக்கையில் அவன் மந்திரி மாதண்ண தண்டயன் மகன் ஸ்ரீ விஷ்ணு தண்ட நாயகன் தங்களது யசமானன் நரசிங்கராயர் அண்டையில் உத்தரம் வாங்கிக்கொண்டு விட்ட பூமி பௌகுளம் புஞ்சை கெத்தியாணம் சாஉ௰. இந்தக்கைலாசதேவருக்கு அங்கரங்கவைபோகப்படித்தனத்துக்கு விட்ட தருமம். * * * * * * * * * * *

(கு.-பு.)—

இது ஹொய்சள வீரநரசிங்கராயர் காலத்தியப் பிரதானிகளிற் சிலர் சாசுவதமாய்ச் செய்த சில தானதருமங்களையும், சாஸனங்களையும், ஹொய்சள வமிச பரம்பரையினையும் எடுத்து உணர்த்துகின்றது. இறுதியில் வல்லாளராயனது சாஸனம் ஒன்றும் காணப்படுகிறது. இவ்வீர நரசிங்கராயன் வீரசோமேசுவரருடைய புதல்வர் ஆவர். இப்பகுதியில் உள்ள சிலாசாஸனங்களின் எண், வல்லாளராயனது ஒன்றும், மற்றவை யாறும் ஆக ஏழாம். அவையாவன

(1) மாதேவ தேவர் கோயில் சிலாசாஸனம்.
(2) சென்னராய நரசிங்கர் கோயில் சிலாசாஸனம்.
(3) சென்னராயசுவாமி கோயில் சிலாசாஸனம்.
(4) பெட்டேச்வரர் கோயில் சாஸனம்.
(5) சம்பிகை விச்வேச்வரர் கோயில் சாஸனம்.
(6) தொண்டனூர் கோபாலஸ்வாமி கோயில் சாஸனம்.
(7) கைலாஸேச்வரஸ்வாமி கோயில் சாஸனம்.

மூலவருடக் காடலாக்கு 1598 முதல் 1604 வரையான நம்பர்களில் வருணிக்கப்பட்டுள்ள பிரதிகளுக்கு இதுவே மூலப் பிரதியாகும். முற்றுமிருக்கிறது.

No. 2788. நந்தர்கள் சரித்திரம்.

NANDARKAḶ CARITTIRAM.

Substance, palm-leaf. Size, 19¼ × 1, 20¼ × 1 inches. Pages, 42. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old. Extent, 400 granthas.

Complete.

An account of one of the 'Navanandas.'

Same work as that described under No. 2332 of Taylor's Catalogue, Vol. III, p. 167.

Beginning :

நந்தர்கள் சரித்திரம்.

பூருவம் அறுநூறு வருடங்களுக்குமுன்னாலே நவநந்த சக்ரவர்த்திகள் இராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டு இருக்கிறநாளையிலே ஆறுவது பட்டம் நந்தன் என்னப்பட்ட இராசா மேற்கேயிருந்து சிறிது தளங்களைக் கூட்டிக்கொண்டு சவாது மலையில் வந்து இறங்கினபோது தான் யோசனை பண்ணினது என்னவென்றால் :—

இந்த மலையிலிருக்கிற வனமும் பண்டு பலாதிகளும் க்ஷேத்திரங்களும் இருக்கிறத்தைப் பார்த்து இங்கே அரமணையைக் கட்டவேணும் என்று யோசனை பண்ணினான்.

End :

கொள்ளப் போகாதென்று சும்மாவிருந்தார்கள். இவர்கள் ஒருவருக்கு ஒருவர் உயுத்தம் பண்ணி மடிந்து போனார்கள். இந்தப்படி அவ்விடத்துச் சனங்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இன்னும் நந்தன் படைவீடு நாயழித்தபட்டணம் என்றும் சொல்லுகிறார்கள். பின்னும் மதங்க ஸ்திரீயினுடைய பிள்ளை இராச்சியம் பண்ணச்சே தன்னுடைய பேர் இருக்க வேண்டும் என்று தான் சக்கிலியானபடியினாலே தோலினாலே காசு பண்ணிச் செல்லப் பண்ணினானும்.

(கு.-பு.)—

இது நவநந்தர்களில் ஆறுவதான நந்தப் பட்டம் விகித்து வந்த இராசாவினது சரித்திரத்தையும், நந்திகலம்பகம் ஏற்பட்ட வரலாற்றையும், மதங்க சாதிப் பெண்ணொருத்தியை நந்தனொருவன் மணந்துகொண்டதனால் அவளிடம் பிறந்த பிள்ளையாம் நந்தனும் தனது சாதித் தன்மைபற்றி தோலினால் காசு செய்வித்து செல்லுவித்தான் என்ற இச்செய்தியையும், இரேணுகாதேவியினது கோயிலுண்டான வறலாற்றையும் இதே போன்று வேறு சிலவற்றையும் எடுத்துணர்த்துகின்றது. டைலர் துரையினது காடலாக்கில் 167-ஆம் பக்கத்தில் 2332-ஆம் நம்பரிலிது வருணிக்கப்பட்டிருக்கிறது. முற்றுமிருக்கிறது.

No. 2789. குமாரவேலழகிய நாயகன் கைபீது.

KUMĀRAVĒLAḶAKIYA NĀYAKAN KAIPĪDU.

Substance, palm-leaf. Size, 15¼ × 1 inches. Pages, 25. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old. Extent, 125 granthas.

Complete.

Same work as that described under No. 2339 of Taylor's Catalogue, Vol. III, p. 60.

(கு.-பு.)—

இது மூவருடக் காடலாக்கு 335-a நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள பிர திக்கு மூலப் பிரதியாகும். இதுபற்றிய விபரங்களுக்கு அப்பிரதியின் குறிப்பைக் கண்டுகொள்க. டைலர் துரையினது காடலாக்கில் 60-ஆம் பக்கத்தில் 2339-ஆம் நம்பரிலிது வருணிக்கப்பட்டிருக்கிறது. முற்றுமிருக் கிறது.

No. 2790. பரசுராமக்ஷேத்திரக் கைபீது.
PARAŚURĀMAKṢĒTTIRAKKAIPĪDU.

Substance, palm-leaf. Size, 18¼ × 1½ inches. Pages, 22. Lines, 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old. Extent, 300 granthas.

Complete.

An account of the Keraḷa kingdom, which is also called **Paraśurā-makṣētra.**

Same work as that described under No. 2329 of Taylor's Catalogue, Vol. III, p. 166.

Beginning :

சகரர் கதை.

அயோத்தியில் பூருவகாலத்துச் சூரிய வமிசத்திலே சகரன் என்கிற வொரு இராசா ஏகமண்டலாதீசுவரனுகப் பூலோகத்தை ஒரு குடையின் கீழ் *

End :

ஊரைவிட்டுப் போகிறதே யுக்தம் என்று சொன்னுர்கள். அந்தப்படிப் பொருளாதரி என்றவன் தனக்குள்ள சேனைகளைக் கூட்டி நீங்கள் போய் உயுத்தம் பண்ணுங்கள். என்று சொல்லியனுப்பிவிட்டுத் தானுருமாறி வெளியே ஓடிப்போய்விட்டான்.

அப்போது தாமுதிரிப்பாடு என்றும் தம்பிரான் என்றும் பேர் கொண்ட மானவிக்கிரமமார் சண்டை பண்ணிக் கோட்டையும் பிடித்துச் செயவிருது கள் கொண்டாடி அந்த நாட்டையும் ஆண்டு அனுபவித்துக் கொண்டார். இந்தச் சாதனத்தை வித்துவாமிசர்களாயிருக்கப்பட்டவர்கள் இதிலுள்ள பொருள்களை யாவரொருவருக்கும் வெளியாகப்படுத்தாமல் இருக்கிறதே கடன்.

(கு.-பு.)—

இது கேரள தேசம் என்னும் மலையாள தேசம் ஆதியிலுண்டான வரலாற்றையும் அதிலுள்ள பல விசேடங்களையும் எடுத்துணர்த்துகின்றது டைலர் துரையினது காடலாக்கில் 166-ஆம் பக்கத்தில் 2329-ஆம் நம்பரி லிது வருணிக்கப்பட்டிருக்கிறது. மூவருடக் காடலாக்கு 1546-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள பிரதிக்கு இதுவே மூலப் பிரதியாகும்.

No. 2791. டில்லி ராஜாக்கள் சரித்திரம்.
DILLI RĀJĀKKAḶ CARITTIRAM.

Substance, palm-leaf. Size, 13¼ × 1¼, 16 × 1¼, 16 × 1 inches. Pages, 38. Lines, 4 to 6 on a page. Character, Tamil. Condition, injured. Apearance, old. Extent, 300 granthas.

Complete.

An account of the rulers of Delhi.

Same work as that described under No. 2324 of Taylor's Catalogue, Vol. III, p. 53.

Beginning :

இராசாக்கள் திருமுடிவர்க்கம்.

* * * * * * * * * * * * * * * துவாபரயுகக் கடைசியில் அபிமன்யு புத்திரன் பரீக்ஷித்தை பட்டங்கட்டுவித்துப் பஞ்ச பாண்டவர்களும் துரோபதையும் மகாவிந்தம் போனபடியினாலே * * * * * * * * * இவர் புத்திரன் சாரங்கதரன் நவசித்தர்களோடே சேர்ந்துபோனபடியினாலே சந்திர வமிச பரம்பரையினரது ஆக வருஷம் ௩௱௨௰௯. * * * *

End :

மதுரையில் திருமலை நாயக்கர் அவர்கள் அரண்மனையில் புதையல் எடுத்துக் கவுர்ன்மெண்டுக்கு வந்து போன பணம் தங்களிடத்துக்கு வந்ததை அதற்குத் தாங்கள் கேட்ட விபரத்துக்கு அந்தப் பணங்களில் போட்டிருக்கிற முத்திரைக்கும் பணங்கள் போட்டத்துக்கு விபரமும் கண்டு எழுதிக்கொடுத்த சரித்திரம் ௧. ஆகச் சரித்திரம் ௬. ஆக வகை ௩-க்குச் சரித்திரம் ௩௰௧.

(கு.-பு.)—

இது பாண்டவருக்குப் பின்னர் ஆண்டு வந்த பல ராசாக்களின் வரலாற்றையும் பாண்டிய மண்டலம் சோழமண்டலம் தொண்டைமண்டலம் என்னும் இம்மூம் மண்டலவரசர்களுள் சிலரது வரலாற்றையும் எடுத்துணர்த்துகின்றது. கிருஷ்ணதேவராயரது வரலாறும் அரை குறையாய் இத்துள் எழுதப்பட்டுள்ளது. டைலர் துரையினது காடலாக்கில் 53-ஆம் பக்கத்தில் 2324-ஆம் நம்பரிலிது வருணிக்கப்பட்டிருக்கிறது. மூவருடக் காடலாக்கு 1517-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள பிரதிக்கு இதுவே மூலப்பிரதியாகும். முற்றுமிருக்கிறது. பிழைகளிருக்கின்றன. ஏடுகள் சிதலுற்றுள்ளன.

No. 2792. ஜைனமுனீச்வர சந்ததியும் அவரது கிரந்த ஜாபிதாவும்.
JAINAMUNĪŚVARA SANTĀTIYUM AVARADU GIRANTHA JĀPITĀVUM.

Substance, palm-leaf. Size, 16 × 1 inches. Pages, 36. Lines, 5 on a page. Character, Tamil and Grantha. Condition, much injured. Appearance, old. Extent, 250 granthas.

Complete.

A list of Jaina works and the teachers of Jainism.

Same work as that described under No. 2367 of Taylor's Catalogue, Vol. III, p. 82.

Beginning :

ஜைன முனீசுவரர் சந்ததியும் அவர்களுடைய கிரந்த ஜாபிதாவும்.

* * * * * * * * * * * * * * * மெக்கன்ஸி துரையவர்களுடைய கேள்விக்கு எழுதியிருந்த வயணம் :—

ஜைனமுனீச்வரர்களுடைய ஸந்ததி வயணம் :—௩-ஆவது :—

ஸ்ரீ வர்த்தமானஸ்வாமி முக்தியடைந்த பின் கலியுகம் பிறந்தது. அந்தக் கலியுகத் தாதியில் அவர் சிஷ்யர் கௌதமர் வருஷம் ௰௨. ௺தன் பின் அவர் சிஷ்யர் ஜம்புநாதர் வருஷம் ௩௰அ-ஆக *

ஜைன புத்தகங்கள் :—

(1) மகாபுராணம் ௧.
காவியங்களில்.
(2) சத்ர சூடாமணி.
(3) முநிஸுவ்ரதகாவியம்.
(4) நாக குமார காவியம்.
(5) சந்திரப்ரப காவியம்.
(6) பார்சுவாப்யுதய காவியம். ஆக காவ்யம் ரு.

வ்யாகரணத்தில் :—

(7) சாகடாயனம்.
(8) கௌமாரம்.
(9) அமரம்.
(10) தனஞ்சயம். ஆக ச.

தர்க்கத்தில் :—

(11) அஷ்டஸஹஸ்ரீ.
(12) கமலமார்த்தாண்டம்.
(13) நியாயமணி தீபிகை.
(14) நியாய குமுத சந்திரிகை.
(15) நியாய மார்த்தாண்டம்.
(16) தர்க்க பரிபாஷை.
(17) லகுவிருத்தி.
(18) பிரமேயரத்தின மாலா.
(19) நீலகேசி. ஆக ௯.

End :

இவை சகாப்தம் ௲௭௱௩௰அ-க்கு மேல் செல்லாநின்ற தாதுஸூ மார்கழிமீ ௰௩ எழுதிக் கொடுத்த கைபீது.

(கு.-பு.)—

இது ஜைநமதவாசிரியர்களது ஸந்ததியின் முறையினையும், அவர்களது மதத்தைத் தழுவியுள்ள கிரந்தங்களினது அட்டவணையினையும் எடுத்துக் கூறுகின்றது. தவிர ஜைன மதம் உண்டான வகையினையும், சிலபுட்டா

சார்யரது பெயர்கள், கிராமங்கள் இவற்றினையும் வேறு சில விஷயங்களை யும் உணர்த்துகின்றது. இது முனிபத்ரதேவபட்டாசார்யரென்பவரால் மெக்கன்஁ஸி துரையவர்களுக்கு எழுதிக்கொடுக்கப்பட்டதெனத் தெரி கின்றது. டைலர் துரையினது காடலாக்கில் 82-ம் பக்கத்தில் 2367-ஆம் நம்பரிலிது வருணிக்கப்பட்டிருக்கிறது. முற்றுமுள்ளது.

No. 2793. இடங்கை வலங்கை புராணம்.

IḌAṄKAI VALAṄKAI PURĀṆAM.

Substance, palm-leaf. Size, 11 × 1½ inches. Pages, 60. Lines, 7 on a page. Character, Telugu. Condition, good. Appearance, old. Extent, 600 granthas. Complete.

A legendary account of the right hand and left hand castes.

Beginning :

காசிப்பிள்ளை அய்யன் . . . . எழுதிக்கொடுத்த பட்டயம்.

. . . . .வந்திய குல மகாமண்டலேசுவரன் . . . . இடங்கை சமயத்துக்கு அதிபதியானவர் . . . விபரம்.

ஆதிகாலத்திலே ஆதிசேஷனுக்கும் வாதராஜனுக்கும் வாக்குவாதம் வந்து மகா மேருகிரியில் பிரித்த கொடுமுடிகள் மூன்று. அதிலொரு கொடுமுடி . . . .

End :

வன்னியர் சேரிபெரியர் கம்மாளர் இடையர் வேடர் கள்ளர் மறவர் சக்கிலியர் ஆகச்சாதி எட்டு.

(கு.-பு.)—

இது இடங்கை வலங்கை யெனப்படும் சாதியாரின் வரலாற்றினை விபரமாக எடுத்துக் கூறுகின்றது. இதற்கு வன்னியர் புராணம் எனவும் ஒரு பெயருண்டெனத் தெரிகின்றது. தெலுங்குலிபியால் தமிழ் மொழி யினெழுதப்பட்டுள்ளது. முற்று மிருக்கின்றது. இதற்குப்பின்னரொரு ஏட்டில் அறுபத்து நான்கு கலைகளினது பெயரட்டவணையொன்றும் எழுதப் பட்டுள்ளது.

No. 2794. திருவண்ணாமலைத் தலமாகாத்மியம்.

TIRUVAṆṆĀMALAITTALAMĀHĀTMIYAM.

Substance, paper. Size, 8-3/16 × 6½ inches. Pages, 80. Lines, 16 on a page. Character, Tamil and Grantha. Condition, good. Appearance, new. Extent, 500 granthas.

Begins on fol. 1*a*. The other works herein are Ahōbilapperumāḷ Koil śilāśāsanam 41*a*, Vallāḷarāyan carittiram 83*a*, Kīḻaiyūr talamāhātmyam 150*a*, Araikaṇḍanallūr talamāhātmyam 154*a*, Tiruvikramapperumāḷ koil talamāhātmyam 162*a*, Śiṅkapuram dēvasthāna māhātmyam 170*a*.

Complete.

On the sacred greatness of Tiruvaṇṇāmalai, South Arcot district.

Beginning :

திருவண்ணுமலைத்

தலமாகாத்மியம்.

அருணசலத்தினுடைய மாகாத்மியத்தைக் கேட்டுக்களிப்படைந்த மார்க்கண்டேயரிஷியானவர் சொல்லுகிருர் :— எந்தையாகிய கருத்தனே ! இருபையுடைய நந்திகேசுவரனே ! தேவரீருடைய உபதேசத்தினலே சிந்தையானது மகிழ்ச்சியையடைந்தது. அவ்வருணசலத்தினுடைய மகிமையினுலே இனி அந்தஸ்தலத்திலே சிவன் அக்கினிமலை வடிவாய் வந்தவாற்றையும், பிறகு அது மலையாகிய விவரத்தையும் அருளிச்செய்யவேண்டும். மார்க்கண்டேய ரிஷி கேட்பது.

End :

அப்படி அதிசயத்தையுடையது அருணசல ஸ்தலமென்று நந்திகேசுவரர் மார்க்கண்டேயருக்குச் சொல்லுவார்.

* *

ஈசுவரியானவள் மலையரசனிடமாய்ப் பிறந்ததும் உரிமையாகிற பரமசிவனிடத்திலே அர்த்தனரீசுவர வரம் பெற்றதையும் அனுக்கிரகம் பண்ணிரெட்சியும் என்ன நந்திகேசுவரர் சொல்லத் தொடங்கினர் என்றவாறு.

(கு.-பு.)—

இது திருவண்ணுமலையென்னும் தலத்தினது பெருமை முதலானவற்றை எடுத்துக் கூறுகின்றது. மார்க்கண்டேய மகரிஷிக்கு நந்திகேசுவரர் உபதேசம் செய்த முறையிலே அமைந்துள்ளது. முற்றுமிருக்கின்றது.

No. 2795. அகோபிலப் பெருமாள் கோயில் சிலாசாஸனங்கள், AHŌBILAPPERUMĀḶ KOIL ŚILĀŚĀSANAṄKAḶ.

Pages, 84. Lines, 16 on a page. Extent, 425 granthas.

Begins on fol. 41*a* of the manuscript described under D. No. 2794.

Complete.

Inscriptions on stones, copper plates and palm-leaves in the templ of God Viṣṇu, called Ahōbilapperumal at Āyakkuḍipāḷayappaṭṭi Dinḍukkal taluk, Coimbatore district.

Beginning :

கோயமுத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த திண்டுக்கல் வகைத் தாலூகாக் களில் அகப்பட்ட சிலாசாஸனங்களும், தாம்மிரதாளசாஸனங்களும் :—

பழனி விரூபாட்சிவகையாராவில்—

சிலாசாஸனங்கள்	.. ..	56
தாம்மிர சாஸனம்	.. ..	1
ஓலைச்சாஸனம்	.. ..	1
ஆக	..	58

ஜில்லா வகையரா கலெக்டருக்குச் சேர்ந்த கோயமுத்தூர் சீமை ஜில்லாவுக்குச் சேரப்பட்ட அயன் திண்டுக்கல் சீமையில் வேலூர்க்கண்ணி மந்தை மிட்டா சத்திரப்பட்டியிலிருக்கும் விரூபாட்சிஸ்தலத்துக்குருக்களுக் குள் பூசை பண்ணப்பட்ட சுப்பிரமணியக் குருக்களிடத்திலிருக்கிற சிலா சாஸனத்துக்கு நக்கல் :—

விரூபாட்சி சீமைக்குச் சேர்ந்த அப்பனிகைக் கிராம உள்ளுக்குத் தென்புறம் அரசமரத்தடியிலுள்ள சிலாசாஸனம் :—

* *

End :

ஒன்றுக்குப் பத்துப்பணங் கொடுத்துத் திருப்பணி செய்வார்களாகவும். இந்தத் தருமத்துக்கு விலங்கு செய்கிறவர்கள் காராம்பசுவைக் கொன்ற பாபத்தில் போவார்கள். இந்தத் தன்யம் மகேசுவர ரட்சை.

* *

(கு.-பு.)—

இது கோயமுத்தூர், திண்டுக்கல், ஆயக்குடி, பழனி, பாளையப்பட்டு, விரூபாட்சி முதலான பலவிடத்துள்ள கோயில்களினது சிலாசாஸனம் (56) தாம்மிர சாஸனம் (1) தாள சாஸனம் (1) இவற்றையெடுத்துணர்த்து கின்றது. இத்துள் உள்ள சாஸனங்களின் மொத்தவெண் 58 என நூல் முகத்துக்குறிக்கப்பட்டுள்ளது. முற்றுமிருக்கிறது.

No. 2796. வல்லாளராயன் யக்ஷகானம்.
VALLĀḶARĀYAN YAKṢAGĀNAM.

Pages, 136. Lines, 16 on a page. Extent, 650 granthas.

Begins on fol. 83*a* of the manuscript described under D. No. 2794. Complete.

Beginning :

வள்ளாளராயனுடைய சரித்திரமாகிய புண்ணிய கதையைப்பிரபந்த மாகச் சொல்லத்துடங்கிய அடிவாரம்.

திபிதை :—

உளமகிழுந்தேவர்களும்.

* *

End :

மயிலேறும் வேல்வற்கும் மாது தெய்வானையற்கும்
கனகதிருவள்ளியற்கும் கனத்தவேங்கை மாமானவற்கும்
செயமங்களம் நித்திய சுபமங்களம்.

Colophon :

வல்லாளராயன் யக்ஷகானம் முடிந்தது.

(கு.-பு.)—

இது வல்லாளராயனது சரித்திரத்தை யெடுத்துணர்த்துகின்றது. இது போன்ற வேறு சில பிரதிகளுமுள்ளன. இது அச்சிலிடப்பெற்றதாகத் தெரியவில்லை. முற்றுமிருக்கிறது.

No. 2797. கிளையூர்த் தலமாகாத்மியம். KILAIYŪRTTALAMĀHĀTMYAM.

Pages, 5. Lines, 16 on a page. Extent, 20 granthas.

Begins on fol. 150*a* of the manuscript described under D. No. 2794.

Complete.

On the sacred greatness of Kiḻaiyūr, Tirukkōvalur taluk, South Arcot district.

Beginning :

திருக்கோவலூர்த் துக்கடியிற் சேர்ந்த கிளையூர்த் தலமாகாத்மியம் :—

* *

End :

இக்கிளையூரிலே வீரட்டேசுவரர் மகாவீரத்தோடு கூடி அந்தகாசுரனை சம்ஹாரம் பண்ணினார். வீரத்தோடு சம்ஹாரம் பண்ணினபடியினாலே வீரட்டேசுவரர் என்று பேருண்டாயிற்று. ஸப்தவீரட்டேச்வரஸ்தலங்களோடு இதுவும் கூடி அட்டவீரட்டேசுவரம் என்றாயிற்று. இது அநாதியாய் வெகு பூர்வீக ராஜாக்களுடைய ஸ்தலம்.

* *

(கு.-பு.)—

இது திருக்கோவலூர் தாலூகாவைச்சார்ந்த கிளையூர் என்னும் ஸ்தலத்தினது பெருமையை யெடுத்துணர்த்துகின்றது. வடமொழியினும் தென்மொழியினும் இத்தலம் அட்டவீரட்டாணத்துள் ஒன்றெனபதைக்குறிக்கின்ற ஒவ்வொரு பாடல் ஆக மொத்தம் இரண்டுபாடல்களையும் எடுத்துக்காட்டாகக் கூறியிருக்கின்றது.

No. 2798. அரைகண்டநல்லூர் தலமாகாத்மியம். ARAIKANDANALLŪRTTALAMĀHĀTMIYAM.

Pages, 15. Lines, 16 on page. Extent, 40 granthas.

Begins on fol. 154*a* of the manuscript described under D. No. 2794.

Complete.

On the sacred greatness of the shrine of God Śiva named Atulya-nāthēśvara at Araikaṇḍanallūr, Tirukkōvalūr taluk, South Arcot district.

Beginning :

திருக்கோவலூர்த் துக்கடியிற் சார்ந்த அரைகண்டநல்லூர் சிவஸ்தலத்தில் அதுல்யநாயகேசுவரர் மாகாத்துமியம் :—

* *

End :

குடிகளாகிய கைக்கோளர் சொல்லுகிறதாவது :—பூருவம் இந்தக்கோவில்கள் தாசிகளுடைய ஆதிபத்தியமாயிருந்ததாகையால் இந்தக்கிராமாதிபத்தியமும் தங்களுடையது என்று சொல்லுகிறார்கள். அதுவும் அப்படியேயிருக்குமென்று தோணப்படுகிறது.

(கு.-பு.)—

இது திருக்கோவலூர் தாலூக்காவைச் சார்ந்த அரைகண்டநல்லூர் என்னும் தலத்தினுடையவும் அவ்விடத்துள்ள சிவபிரானுடையவும் பெருமையினை எடுத்துணரத்துகின்றது. பூருவம் இக்கோயில் தாஸிகளுடைய ஆதிக்கத்துட்பட்டிருந்ததெனத் தெரிகின்றது. முற்றுமிருக்கிறது.

No. 2799. திரிவிக்கிரமப் பெருமாள் தலமாகாத்மியம்.
TIRIVIKKIRAMAPPERUMĀḶ TALAMĀHĀTMIYAM.

Pages, 16. Lines, 16 on a page. Extent, 100 granthas.

Begins on fol. 162*a* of the manuscript described under D. No. 2794.

Complete.

On the sacred greatness of the temple of God Viṣṇu named Tirivikkiramapperumāḷ at Tirukkōvalūr, South Arcot district.

Beginning :

திருக்கோவலூர்த் துக்கடியில் திருக்கோவலூர்த் திரிவிக்கிரமப் பெருமாள் தேவஸ்தான ஸ்தலமாகாத்மியம் :

* *

End :

ஆனால் நீர் எனக்கு இப்படித் தரிசனம் கொடுத்தபடியினாலே இந்தப்படியே வியத்தியஸ்த சங்கு சக்கிரமிருக்கும்படி இந்த ஸ்தலத்திலே வாசஞ்செய்யவேண்டுமென்று மிருகண்டு முனிவர் கேட்டுக்கொண்டார். சுவாமியும் அப்படியே ஒரு பிரும்மப்பிரளயம் வரைக்கும் இவ்விடத்திலிருக்கிறோமென்றார். ஆகையால் அப்படியே தரிசனங்கொடுக்கிறார். இந்தத் தலம் தொண்ணூற்றாறாவது பிரம்மா பூசித்தருளிய ஸ்தலம். இந்தப் பிரகாரம் திருக்கோவலூருக்காக ஸ்தலபுராணம்.

(கு.-பு.)—

இது திருக்கோவலூரிலே கோயிற் கொண்டிருக்கும் திரிவிக்கிரமப் பெருமானது அவதார காரணத்தினை விளக்கமாகவெடுத்துக்கூறுகின்றது. முற்றுமிருக்கிறது.

No. 2800. சிங்கபுர தேவஸ்தானத் தலமகிமை.

ŚINKAPURA DĒVASTHĀNATTALAMAHIMAI.

Pages, 4. Lines, 16 on a page. Extent, 25 granthas.

Begins on fol. 170*a* of the manuscript described under D. No. 2794.

Complete.

On the sacred greatness of Śrīraṅganāyakasvāmi devasthanam at Śiṅkapuram, Cēttuppaṭṭu taluk. South Arcot district.

Beginning :

சேத்துப்பட்டு தாலூக்காவில் சிங்கபுரம் தேவஸ்தான ஸ்தலமகத்துவம். சிங்கபுரம் அரங்க நாயகர் தேவஸ்தான ஸ்தல வரலாறு :—

சிங்கபுரம் கோலாசல பருவதத்தில் ஸ்ரீ ரங்கநாயகர் அவதாரமான வயணம். இந்தப் பருவதத்தில் மார்க்கண்டேய ரிஷி உக்கிரமாய்த் தபசு பண்ணிஞர். * * * * * * * * * * * * * *

End :

சேவகர் அரசனண்டையிலே போய்ப் பூந்தோட்டம் அழிந்து போகிறது. எங்களாலே கட்டுக் கொள்ளுகிறதா யிருக்கவில்லை. மாயமாக விருக்கிறது. என்று சொன்ஞர்கள். அரசன் அதைக் கேட்டவுடனே தானே மகா வேகமாய்க் கட்டான குதிரையின் மேலே ஏறிக்கொண்டு வராகத்தைத் துரத்திக்கொண்டு வருகிறபோது வராக ரூபமாய் வந்த ஸ்வாமியானவர் சிங்கபுரம் கோலாசல பருவதத்திலே பள்ளிக்கொண்டார். அப்போது உடனே ஸ்தலம் கட்டுவித்தான்.

(கு.-பு.)—

இது தென்ஞற்காடு சேத்துப்பட்டுக்கருகே யுள்ள சிங்கபுரமென்னும் தலத்தினது பெருமையினை எடுத்துணர்த்துகின்றது. காஞ்சியிலாண்டுவந்த வோர் அரசனுல் அத்தலத்தில் கோயிற் கட்டப்பட்டதெனக் குறிக்கப்பட்டுள்ளது. முற்றுமிருக்கின்றது.

No. 2801. கருவூர் பசுபதீசுவரன் கோவில் சிலாசாஸனம்.

KARUVŪR PAŚUPATĪŚUVARAN KŌVIL ŚILĀŚĀSANAM.

Substance, paper. Size, 8¼ × 6¼ inches. Pages, 22. Lines, 16 on a page. Character, Tamil. Condition, good. Apperance, new. Extent, 132 granthas.

Begins on fol. 1*a*. The other works herein are—

Pāḷayamkōṭṭai Uttamakkāmamanrādiyiḍamuḷḷa tāmra śāsanam 12*a*, Nāgēśvarasvāmi kōil śilāśāsanam 24*b*, Koḍuvayal periya perumāḷ koil śilāśāsanam 31*b*, Pallāvaram pūrvika rājākkaḷ Kaipīdu 43*a*, Kaḍambar kōil śilāśāsanam 49*a*, Paḍuvūrpperiyamadakiṟcilāśāsanam 50*a*, Āidra kapālīśvaran kōil śilāśāsanam 51*b*, Madyapurīśvaran koil śilāśāsanam 55a, Jeyamkoṇḍēśvarasvāmi kōil śilāśāsanam 57*a*, Piḍāriyūr śilāśāsanṅkal

60*a*, Uttamakkāmamanṟādiyār Tāmraśāsanam 64*a*, Ādinārāyaṇasvāmi kōil śilāśāsanam 76*a*, Ādilakṣminārāyaṇasvāmi koil śilāśāsanam 76*a*, Ādīśvarasvāmi koil śilāśāsanam 81*a*, Kāramaḍai Kāramaṅgaisvāmikoil kaipīdu 83*b*, Mahādēvajōsiyaridattuḷḷa śilāśāsanam 88*b*, Śāmaḷāpuram mahājanaṅkaḷ kaipīdu 91*b*, Malayāḷadēśakkaipīdu 97*a*.

Complete.

Stone. Inscription in the temple of God Śiva named Paśupatiśvara at Karuvūr, Dhārāpuram.

Beginning :

கருவூர் பசுபதீசுவரன் கோவி.ல் சிலாசாஸனம்.

(தாராபுரம் தாலூக்கா.)

கருவூர் தாலூக்கா, கசுபா கருவூர்ப் பசுபதீசுவரஸ்வாமி கோவிலிலே தமிழ் இலிபியிலே எழுதியிருக்கப்பட்ட சிலாசாஸனம் :—

கோயில் மகா மண்டபம் மேற்புரம் தென்பாரிசம் தட்சிணமூர்த்திக்குக் கிழ்ப்புறம் வரியில் எழுதியிருக்கப்பட்ட சிலாசாஸனத்துக்கு நகல் ;— * * * * * * *

End :

நாம் இப்படிக்குச் சந்திராதித்தர் செல்லப்பட்ட வரைக்கும் செப்பிலும் சிலையிலும் வெட்டிக்கொடுக்கத்தக்கதாக நம்மோலை கொடுத்தோம். இவை குருகுலராயன் எழுத்து. இவையெல்லாம் வல்ல சோழமுக வேந்த வேளாழன் எழுத்து. இவை நாம திங்க வேளாளனெழுத்து. குரு கடாக்ஷம்.

(கு.-பு.)—இது தாராபுரத்தை யடுத்துள்ள கருவூரென்னும் ஊரிலுள்ள பசுபதீசுவரஸ்வாமி கோயிலினது சிலாசாஸனத்தினது நக்கலாகும். முற்று மிருக்கிறது.

No. 2802. பாளையங் கோட்டைத் தாம்ர சாஸனம்.
PĀḶAIYAṄ KŌṬṬAI TĀMRAŚĀSANAM.

Pages, 25. Lines, 16 on a page. Extent, 150 granthas.

Begins on fol. 12*a* of the manuscript described under D. No. 2801.

Complete.

A copy of the inscriptions on copper plates in the hand of Uttamakkāmamanṟādiyār. Pāḷaiyamkōṭṭai Gāṅgēyam, taluk, Dhārāpuram,

Beginning :

பாளையங்கோட்டை உத்தமக்காம மன்றாடியாரிடத்தி லிருக்கும் தாம்ர சாஸனத்துக்கு நக்கல் :—

தாராபுரம் துக்கடி காங்கையம் தாலூக்காவுக்குச் சார்ந்த மவுசே பாளையங்கோட்டையிலே யிருக்கும் நல்ல சேனாதிபதி சக்கரை உத்தமக் காமின்ற மன்றாடியார் இட்ட இருக்கப்பட்ட தாம்ர சாஸனத்துக்கு நக்கல் ;— * * * * * * * * * *

End :

பல்லக்கு வரிசையுடனே நாட்டா ரனைவரையுங் கூட்டிக்கொண்டு காரையூர் ஏற வந்து நாட்டா ரனைவருக்கும் விருந்திட்டு அனைவருக்கும் வெகுமானம் பண்ணி அனைவரையும் ஊருக்கு அனுப்புவித்து அரண்மனையாரும் நாட்டா ரனைவரும் கட்டளையிட்டபடியே நடந்துகொள்ளுவோமாகவும்.

இந்தப்படிச் சரிபார்த்து எழுதினது. காரையூர் ஸ்தலத்துக்கணக்கு அசுராச பிள்ளை கையெழுத்து.

(கு.-பு.)—

இது தாராபுரத்தை யடுத்துள்ள காங்கையம் தாலூக்காவிலிருக் கும் பாளையங்கோட்டையைச் சார்ந்த நல்ல சேனாதிபதி சக்கரை உத்தமக்காம மன்றாடியார் என்பவரிடத்திலே இருந்துவந்ததோர் தாம்ர சாஸனத் தினது பிரதியாகும். நஞ்சை யுடையார் என்னும் ஒருவர் அவருக்குச் செய்த சில சிறப்புக்களை-இது எடுத்துணர்த்துகின்றது. முற்றுமிருக்கிறது.

No. 2803. கொடுவயல் நாகேசுவரஸ்வாமி கோவில் சிலாசாஸனம்.

KOḌUVAYAL NĀGĒŚVARASVĀMI KOIL ŚILĀŚĀSANAM.

Pages, 14. Lines, 16 on a page. Extent, 60 granthas.

Begins on fol. 24*b* of the manuscript described under D. No. 2801.

Complete.

Inscriptions on stones in the temple of God Śiva named Nāgēśvara svāmi at Koḍuvayal, Aravakkuricci taluk near Dhārāpuram.

Beginning :

நாகேசுவரஸ்வாமி கோவில் சிலாசாஸனம்.

தாராபுரம் துக்கடி அரவக்குறிச்சி தாலூக்கா தேவஸ்தானங்களில் இருக்கப்பட்ட சாஸனங்களுக்கு நகல் :—

இராஜகேசரி ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்ரவர்த்தி கோனேரி மேக் கொண்டான் திருவெஞ்சாக்கூல நாயகனூர் கோவில் தேவர்களுக்கும் நாம் ஓலை கொடுத்த பரிசாவது என்னவென்றால் :— * * * * * * * *

End :

சிவப்பிராமணர்கள் கௌசிக கோத்திரத்தில் ஆவுடையார் ஆண்டவ * * * * * * * * * * * * * * * *

(கு.-பு.)—

இது தாராபுரம் கொடுவயல் நாகேசுவரஸ்வாமி கோயிலி லிருக்கும் சிலாசாஸனங்களை யெடுத்துணர்த்துகின்றது. முற்றிமிருக்கிறது.

No. 2804. கொடுவயல் பெரிய பெருமாள் கோவில் சிலாசாஸனம்.

KOḌUVAYAL PERIYA PERUMĀḶ KŌVIL ŚILĀŚĀSANAM.

Pages, 23. Lines, 16 on a page. Extent, 50 granthas.

Begins on fol. 31*b* of the manuscript described under D. No. 2801.

Complete.

Stone inscriptions in the temple of God Visnu named Periyaperumal at Koduvayal.

Beginning :

பெரிய பெருமாள் கோவில் சிலாசாஸனம்.

பெரிய பெருமாள் கோவில் மகா மண்டபத்துத் தென்புறச் சாஸனம் :—

ஸ்வஸ்தி ஸ்ரீமந் மகா மண்டலேசுவரன் ஸ்ரீ வீரநந்த உடையார் பிருதிவீ ராஜ்யம் பரிபாலனம்பண்ணி யருளாநின்ற காலத்திலே கலி சகாப்தம் ௲௪௱௰௯க க்கு மேற் செல்லா நின்ற சாதாரண வருஷம் கார்த்திகைமீ ௰௨௨ பொங்கலூர் கரைநாட்டுக்கொடுவாயில் ஊரவரும் எங்கள் தர்மத்தில் தேசாந்தரப் பிராமணர்களுக்குப் பசித்துப் போகாதபடிக்கு * * * * * * * * * * * *

End :

ஜகதூ அணய்யன் கதஉடுக்குமி முன்னம் மலஸு ம்மது கொம்மல் பூக்கிக்கும் மருநூல் வந்து* * * * * * * * * * *

(கு.-பு.)—

இது கொடுவாயிலென்னு மூரிலுள்ள பெரிய பெருமாள் கோவிலினது சிலாசாஸனங்களை யெடுத்துணர்த்துகின்றது. சிலவிடத்துச் சொற்களுக்குப் பொருள்விளக்கம் காணப்படவில்லை. முற்றுமிருக்கிறது.

No. 2805. பல்லாவரம் பூர்வீக ராசாக்கள் கைபீது.
PALLĀVARAM PŪRVĪKARĀJĀKKAḶ KAIPĪDU.

Pages, 12. Lines, 16 on a page. Extent, 70 granthas.

Begins on fol. 43*a* of the manuscript described under D. No. 2801.

Incomplete.

Kaifieths of the Rulers of Pallāvaram (Pallapuram or Pallapaṭṭaṇam) near Madras.

Beginning :

பல்லாவரத்திலிருந்த பூர்வீக இராஜாக்களுடைய கைபீது :—

பூர்வத்திலே பல்லன் என்று ஒரு இராசா இருந்தான். அவன் ஆதி யாய் இந்த ஸ்தலத்தில் பிரபுத்துவம் பண்ணினபடியினால் இந்த ஸ்தலத்துக்கு முன் மறு பேரில்லாமல் அந்த இராசாவினால் ஆளப்பட்ட படியினாலே பல்லபுரம் அல்லது பல்லபட்டணம் என்றழைக்கப்பட்டது.

End :

அப்போ இந்த ராசகுமாரத்தி விசனப்படுகிற முகத்தைக் காண்பித்து உடனே தன் கையினாலே நஞ்சு போட்டுப் பலகாரஞ் செய்து அவனுக்குக் கொடுத்தனுப்பினாள். * * * * * * * * * *

(கு.-பு.)—

இது சென்னையை யடுத்துள்ள பல்லாவரம் எனப்படும் பல்லபுரம் அல்லது பல்லபட்டணம் என்னுமூரிலிருந்து ஆட்சி செய்துவந்த பல்லனென்னும் ஓர் அரசனது வரலாற்றினை யெடுத்துணர்த்துகின்றது. அவன் மகன் காலிங்கராயன் என்பானொருவன் தனது மகளான பத்மாவதி யென்பாளை அருங்கலைகளனைத்தும் பயிற்றுவித்து அன்புடன் வளர்த்துவர, அவளொரு நாள் புனலாடுவதற்கென மீனம்பாக்கத்திலுள்ளதோர் பொய்கைக்குச் செல்ல, வேட்டை காரணமாக அப்பொழுது அங்கு வந்திருந்த சோழவரச குமாரனொருவனைக் கண்டு மயலுற்றுப் பின்னரவனுடன் களித்திருந்த விச் செய்தியு மித்துள் கூறப்பட்டுள்ளது. முற்றுப்பெறவில்லை.

No. 2806. கடம்பர் கோவில் சிலாசாஸனம்.
KAḌAMBAR KŌVIL ŚILĀŚĀSANAM.

Pages, 2. Lines, 16 on a page. Extent, 15 granthas.

Begins on fol. 49*a* of the manuscript described under D. No. 2801.

Complete.

Copy of an inscription on stone in the temple of God Śiva named Kaḍambar.

Beginning :

கடம்பர் கோயில் சிலாசாஸனங்களுக்கு நக்கல்.

ஸ்வஸ்திஸ்ரீ ஸகல ஸத்குண ஸம்பன்ன ஸ்ரீ கிருஷ்ணதேவ மகாராயர் பிருதிவீ ராஜ்யம் பண்ணிய வருஷத்துக்கு நிர்ணயம் :—

சகாப்தம் தூஉாசயிஉக்கு மேற் செல்லாநின்ற விக்ரம வருஷம் தைமீ பூர்வபக்ஷத்துத் திருதியை திதியிலே சனிவாரம் பெற்ற உத்திரட்டாதி நாள் செயங்கொண்ட சோழமண்டலத்துக் காளியூர்க் கோட்டத்து உத்தரமேரூர்ப் பத்துச் செய்யாத்துத் தென்கரை காங்கநெல்வாயி * * * * * * * * * * * * * * *

உத்தரமேரூர் மணிமுத்துப் பட்டன் அறிவேன். இந்தப்படிச் சிலா சாஸனத்துக்கு நகல் :—* * * * * * * * * * *

(கு.-பு.)—

இது கிருஷ்ணதேவ மகா ராயரது ஆட்சி காலத்தை நிர்ணயஞ் செய்யும் கடம்பர் கோவிலிலுள்ளதோர் சிலாசாஸனத்தினது பிரதியெனத் தெரிகின்றது. முற்றுமிருக்கிறது.

No. 2807. படூர்ப் பெரிய மதகிற் சிலாசாஸனம்.
PAḌŪRPPERIYAMAḌAKIṞCILĀŚĀSANAM.

Pages, 2. Lines, 16 on a page. Extent, 15 granthas.

Begins on fol. 50*a* of the manuscript described under D. No. 2801.

Complete.

Copy of an inscription on stone on the culvert at Padūr village.

Beginning :

பாடூர்ப் பெரிய மதகில் நட்டிருக்கும் சிலாசாஸனத்துக்கு நக்கல்.

ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம பாண்டிய தேவர்க்கு ஆண்டு ஸ்ரீ சகுலியாணபுறம் சிவற சம்பங்கியோத காணியாகக் கொண்டு அவர்க்கு * * * *

End :

மேற்படி சம்மதிச்சுக் கல்லிலே வெட்டிவைத்திருக்கிற ஸ்தாபனம் பண்ணினோம். * * * * * * * * *

(கு.-பு.)—

இது படூரெனப்பட்ட வூரிலிருக்கும் பெரிய மதகிலே, நட்டு வைத்திருக்கிற வொரு சிலையிற் காணப்பட்டதோர் சாஸனத்தினது பிரதியாகும். அவ்விடத்துள்ள மணீசுவரம் உடையாருக்குத் திருநாமத்துக் காணிக்கையாகக் கொடுத்த தானத்தை யிது விளக்குகின்றது. முற்றுமிருக்கிறது.

No. 2808. ஆருத்ர கபாலீசுவரஸ்வாமி கோவில் சிலாசாஸனம்.

ĀRDRAKAPĀLĪŚVARASVĀMI KŌVIL ŚILĀŚĀSANAM.

Pages, 8. Lines, 16 on a page. Extent, 45 granthas.

Begins on fol. 51*b* of the manuscript described under D. No. 2801.

Complete.

A copy of an inscription on stone in the temple of God Siva named Ārdrakapālīśvarasvāmi at Pārvatipuram, Gāṅgēyam taluk.

Beginning :

பார்வதீபுரம் அக்ரஹாரம் ஆருத்ர கபாலீசுவரஸ்வாமி கோவில் சிலாசாஸனம்.

தாராபுரம் துக்கடி காங்கையம் தாலூக்கா பார்வதீசுவரசுவாமி மிட்டா தேவஸ்தானம் மடவளாகம் ஆருத்ர கபாலேசுவரசுவாமி பிருஹன்னுயகி யம்மன் சன்னதியிலே வடபாதியில் கருப்ப கிருஹத்தில் வெளிப்பாதியில் தமிழிலெழுதியிருக்கிற சாஸனத்துக்கு நகல் :— * * * * * * * * * * * * *

End :

ஆருத்ர கபாலீசுவரஸ்வாமி தேவஸ்தான சிலாசாஸனத்துக்கு நகல்.

(கு.-பு.)—

இது தாராபுரம் காங்கையம் பார்வதிக் கிராம மடவளாகத்திலுள்ள ஆருத்திர கபாலீசுவரஸ்வாமி கோவிலிலெழுதியிருந்த விரு சிலாசாஸனங்களின் பிரதியாகும். முற்றுமிருக்கிறது.

No. 2809. மத்திய புரீச்வரஸ்வாமி கோவில் சிலாசாஸனம்.

MADYAPURĪŚVARASVĀMI KŌVIL ŚILĀŚĀSANAM.

Pages, 4. Lines, 16 on a page. Extent, 25 granthas.

Begins on fol. 55*b* of the manuscript described under D. No. 2801.

Complete.

A copy of an inscription on stone in the temple of God Madyapuriśvarasvāmi at Parañcērppaḷḷi near Gāṅgaiyam.

Beginning :

மத்தியபுரீசுவரஸ்வாமி கோவில் சிலாசாஸனம்.

தாராபுரம் துக்கடிக்குச் சேர்ந்த காங்கையம் தாலூக்காவுக்குச் சேர்ந்த வாக்கிலே மவுசே பரஞ்சேர்ப்பள்ளிக் கிராமம் கஸ்பா ஊரிலே இருக்கும் மத்தியபுரீசுவரஸ்வாமியார் தேவஸ்தானங் கோவிலுக்குத் தென்புறத்திலே யிருக்கப்பட்ட கல்லுச் சாஸனத்துக்கு நகல் :— * * * * * * * *

End :

படித்தனம் தீபாராதனங்கள் நடந்துவருகிறதுக்காக இந்தத் தருமம் சந்திராதித்தர் வரையில் செல்லத்தக்கதாக லிகித்தோம். * * * * * * * * * * *

(கு.-பு.)—

இது தாராபுரத்துக்கு அருகிலே இருக்கும் காங்கையம் தாலூக்காவைச் சார்ந்த பரஞ்சேர் பள்ளியென்னும் கிராமத்துளுள்ள நாயனுர் கோவில் சிலாசாஸனத்துக்கு நகல் ஆகும். முற்றுமிருக்கிறது.

No. 2810. ஜயங்கொண்டேசுவரஸ்வாமி கோயில் சிலாசாஸனம்.

JAYAṄKOṆḌĒŚUVARASVĀMI KOIL ŚILĀŚĀSANAM.

Pages, 6. Lines, 16 on a page. Extent, 45 granthas.

Begins on fol. 57b of the manuscript described under D. No. 2801. Complete.

A copy of an inscription on stone in the temple of God Jayaṅkoṇḍēśvarasvāmi at Nattakkāḍaiyūr, Gāṅgēyam taluk, near Dhārāpuram.

Beginning :

காடையூர் ஜயங்கொண்டேசுவர ஸ்வாமிகோவில் சிலாசாஸனம்.

தாராபுரம் துக்கடி காங்கையம் தாலூக்கா மிட்டா நத்தக்காடையூர் ஜயங்கொண்டேசுவரஸ்வாமி கோவில் உட்பிராகாரம் மூலையிலே தமிழ் லிபியிலே எழுதியிருக்கப்பட்ட சிலாசாஸனத்துக்கு நகல் :—

* * * * * * * * * * * * * * *

End :

திருப்பணி வேலைக்கு வருஷாத் வருஷம் குடிக்கு ஒரு பணமும் இந்தப் படிக்கு எழுதிச் சுத்தமாய்ச் சுவாமி ஜயங்கொண்ட சோழநாதருக்குக் கட்டளையிட்டோம். * * * * * * * * * * * * * *

இந்தப் பட்டையம் காரையூர் ஸ்தலத்துக் கணக்குப் பொன்ருழிப் பிள்ளையின் கையெழுத்து.

(கு.-பு.)—

இது தாராபுரத்துக்கு அருகிலுள்ள காங்கையம் தாலூக்காவைச் சார்ந்த நத்தக்காடையூரென்னுமிடத்திலிருக்கின்ற ஜயங்கொண்டேசுவர ஸ்வாமி கோயிற்குரிய பூதான சிலாசாஸனத்தை எடுத்துணர்த்துகின்றது முற்றுமிருக்கிறது.

No. 2811. பிடாரியூர்ச்சிலாசாஸனங்கள்.
PIḌĀRIYŪRCCILĀŚĀSANAṄKAḶ.

Pages 7. Lines, 16 on a page. Extent, 42 granthas.

Begins on fol. 60*b* of the manuscript described under D. No. 2801.

Complete.

Stone inscriptions in the temples of God Śiva named Nāgēśvara-svāmi and God Viṣṇu named Naraśiṅkapperumāḷ at Piḍāriyūr, Perun-tuṛai taluk, Coimbatore district.

Beginning :

கோயம்புத்தூர் ஜில்லா பெருந்துறை தாலூகா விஜயமங்கலம் மிட்டா மவுசே பிடாரியூர் நாகேசுவரஸ்வாமி கோயில் கருப்ப கிருஹத்தில் வடபுறம் கிழக்கு மூலெயில் இருக்கப்பட்ட சிலாசாஸனத்துக்கு நகல் :—* * * *

ஷெியூரில் பெருமாள் கோவில் சாஸனம். * * * * * * * * * * * * * * *

End :

விளக்கு ரெண்டு. கோவில் பூருவம் ஆசாரம் செலுத்துவதாக ஸ்ரீ வைஷ்ணவர்கள் ரக்ஷிக்க.

(கு.-பு.)—

இது கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள பெருந்துறை யென்னும் தாலூக்காவைச் சார்ந்த விஜயமங்கலம் மிட்டாவிலிருக்கின்ற மவுசே பிடாரியூர் என்னுமிடத்து நாகேசுவரர் நரசிங்கப்பெருமாள் இவர்களது கோயில்களிலிருந்த சாஸனங்களின் பிரதியாகும். முற்றுமிருக்கிறது.

No. 2812. உத்தமக்காம மன்றாடியார் தாம்ர சாஸனம்.
UTTAMAKKĀMA MANṚĀḌIYĀR TĀMRAŚĀSANAM.

Pages, 24. Lines, 16 on a page. Extent, 140 granthas.

Begins on fol. 64*a* of the manuscript described under D. No. 2801.

Complete.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2802 ஆம் நம்பரில் வருணிக்கப் பட்ட பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாகும்.

No. 2813. ஆதிநாராயணப் பெருமாள் கோவில் சிலாசாஸனம்.
ĀDINĀRĀYAṆAPPERUMĀḶ KŌVIL ŚILĀŚĀSANAM.

Pages, 6. Lines, 16 on a page. Extent, 32 granthas.

Begins on fol. 76*a* of the manuscript described under D. No. 2801.

Complete.

A stone inscription in the temple of God Viṣṇu named Ādinārāyaṇap-perumāḷ at Viṇṇappaḷḷi near Gāṅkaiyam, written in the Kannada and Tamil languages.

Beginning :

விண்ணப்பள்ளி ஆதி நாராயணப் பெருமாள் கோவில் சிலாசாஸனம்.

காங்கேயம் தாலூக்காவுக்குச் சார்ந்த விண்ணப்பள்ளி அக்கிரஹாரத்தி லே ஊருக்குக் கிழக்கு, குடிக் கிணற்றுக்கு மேற்கு, ஆதிநாராயணஸ்வாமி கோவிலுக்குத் தெற்கு, விக்கினேசுவரன் கல்லுக் கட்டுக்கு அடுத்த மேற் புரம் குத்துக்கல்லிலே எழுதியிருக்கப்பட்ட கன்னட சிலாசாஸனத்துக்கு நகல் :—

Beginning :

ಸ್ವಸ್ತಿ ಶ್ರೀ ವಿಜಯಾಭ್ಯುದಯ ಶಾಲಿವಾಹನ ಶಕವರ್ಷಂಗಳು ೧೫೯೩ ನೇ ಸಂದ ವರ್ತ ಮಾನವಾದ ವಿರೋಧಿಕೃತು ನಾಮ ಸಂವತ್ಸರದ ಭಾದ್ರಪದ ಶುದ್ಧ ೧೫ ಸೋಮೋಪರಾಗ ಪುಣ್ಯ ಕಾಲದಲ್ಲು ಕಾವೇರೀ ಮಧ್ಯವರ್ತಿಯವಾದ ಶ್ರೀರಂಗ ಪಟ್ಟಣ ಗೌತಮಕ್ಷೇತ್ರವಾದ ಶ್ರೀರಂಗ ನಾಥ ಸ್ವಾಮಿ ಸನ್ನಿಧಿಯಲ್ಲಿ ಶ್ರೀಮದ್ರಾಜಾಧಿ ರಾಜದೇವ ರಾಜ ಒಡೆಯರ ಕುಮಾರರು ದೇವ ರಾಜ ಭೂಪಾಲಕರು ಮಾಡಿದಂಥ ವಿಣ್ಣಪ್ಪಳ್ಳಿಗೆ ಪ್ರತಿ ನಾಮಧೇಯವಾದ ನಂಜನಗೂಡಿನ ದೇವ ರಾಜಪುರದ ಅಗ್ರಹಾರದ ದಾನ ಶಾಸನಕ್ರಮವೆಂತೆಂದರೆ :—

End :

ಈ ಗ್ರಾಮ ನೀವು ಮಾಡುವ ದಾನಾದಿ ವ್ಯವಹಾರ ಚತುಷ್ಟಯಂಗಳಿಗೆ ಸಲುವದು ಎಂದು ವಿಣ್ಣಪ್ಪಳ್ಳಿಗೆ ಪ್ರತಿ ನಾಮಧೇಯವಾದ ನಂಜನ ಗೂಡಲ್ಲು —

ದೇವರಾಜಪುರವ ಶಿಲಾಶಾಸನ.

(கு.-பு.)—

இது காங்கையம் தாலூக்கா நஞ்சனகூடு தேவராசபுரமென்னும் விண்ணப்பள்ளி கிராமத்திலிருக்கும் ஆதிநாராயணப்பெருமாள் கோவிலி லுள்ள சிலாசாஸனத்தை யெடுத்துணர்த்துகின்றது. அது சாலிவாகன சகம் 1593 (1671 எ.டி.) இல் தேவராச உடையார் குமாரர் தேவராச பூபாலர் அவர்களால் பிராமணர் சிலருக்குக் கொடுக்கப்பட்ட கிராமங்களினது தான வகையினைக் கூறுகின்றது. கன்னட பாஷையிலெழுதப்பட்டுள்ளது. முற்றுமிருக்கிறது.

No. 2814. ஆதிலக்ஷ்மீநாராயணப் பெருமாள் கோவில் சிலா சாஸனம்.

ĀDILAKṢMINĀRĀYAṆAPPERUMĀḶ KŌVIL SĪLĀSĀSANAM.

Pages, 4. Lines, 16 on a page. Extent, 12 granthas.

Begins on fol. 79*a* of the manuscript described under D. No. 2801.

Complete.

Stone inscriptions in the temple of God Viṣṇu named Ādilakṣmi-nārāyaṇapperumāḷ at Kunṟattūr near Gāngēyam.

Beginning :

ஆதிலக்ஷ்மீ நாராயணப் பெருமாள் கோயில் சிலாசாஸனம்.

ஷை தாலூக்காவைச் சார்ந்த குன்றத்தூர் இலக்ஷ்மீநாராயணப்பெருமாள் தேவஸ்தானத்தில் எழுதியிருக்கப்பட்ட சிலாசாஸனத்துக்கு நகல் :—

பெருமாள்கோவில் தென்புறத்திலே திருமதிலுக்கு உள்ளே யிருக்கப் பட்ட சிலாசாஸனத்துக்கு நகல் :—

௰உ, ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கிரவர்த்தி கோனேரி மேற்கொண்டான் குருப்புநாட்டுக் குன்றத்தூர் * * *

End :

உதகம்பண்ணித் திரிசூலஸ்தாபனம்பண்ணிக் கொடுத்தோம். இது சந்திராதித்யர் வரையில் நடக்கவும் இதை விலக்கினவன் * * * * * * * * * * * *

(கு.-பு.)—

இது காங்கையம் தாலூக்காவைச் சார்ந்த குன்றத்தூரென்னு மிடத்துள்ள ஆதி இலக்ஷ்மீநரராயணப்பெருமாள் கோயிலிலிருந்த பல சிலா சாஸனங்களையும், குறிச்சிக்குளம் பெரியமேட்டு ஆலமரத்தினடியிலிருந்த வொரு குத்துக்கற் சாஸனத்தையு மெடுத்துரைக்கின்றது. முற்றுமிருக் கின்றது.

No. 2815. ஆதீசுவரஸ்வாமி கோவில் சிலாசாஸனம்.
ĀDĪŚVARASVĀMI KŌVIL ŚĪLĀŚASANAM.

Pages, 6. Lines, 16 on a page. Extent, 25 granthas.

Begins on fol. 81*a* of the manuscript described under D. No. 2801. Complete.

Stone inscriptions in the temple of God Śiva named Ādīśvarasvāmi, at Ādiyūr near Gāṅgēyam.

Beginning :

ஆதியூர் ஆதீசுவரஸ்வாமி கோவில் சிலாசாஸனம்.

ஷை தாலூக்காவுக்குச் சேர்ந்த ஆதியூர் ஆதீசுவரஸ்வாமி தேவஸ்தானம் சிலாசாஸனம். தக்ஷிணாமூர்த்திக்கு மேற்புரம் எழுதப்பட்டது. ஆனது.

௰ச. ஸ்வஸ்திஸ்ரீமந் மங்கலம் சிறக்க கோராச கேசரி பரமரான திரிபுவன சக்கரவர்த்தி வீரபாண்டிய தேவருக்கு * * * * * * * * * * * * * * *

End:

சோழபாண்டியபுரத்தில் வியாபாரி சிக்க உடையார் வேந்தன் துரை ஆண்டேயன் ஆதீசுவரம் உடையாருக்குத் தான் வைத்த நல் நிதியாகத் தீபத்துக்குக் காணியுடைய சிவப்பிராமணரில்லாகிய இடசத்திய

(கு.-பு.)—

இது காங்கையம் தாலூக்கா ஆதியூர் ஆதீசுவரஸ்வாமி கோயிலிற் சாஸனங்களையும் தான்றோன்றிஸ்வாமி கோயிலிற் சாஸனங்களையும் மற்றும் சிலவற்றையும் எடுத்துக் கூறுகின்றது.

No. 2816. காரை மங்கைஸ்வாமி கோயிற் கைபீது.

KĀRAIMAṄKAISVĀMI KŌYIṞ KAIPĪDU.

Pages, 10. Lines, 16 on a page. Extent, 60 granthas.

Begins on fol. 83*b* of the manuscript described under D. No. 2801.

Complete.

A Kaifieth giving the religious story of the temple of God Viṣṇu worshipped under the name of Kāraimaṅkaināthasvāmi at Kāramaḍai near Gāṅgēyam.

Beginning:

காரைமடை தேவஸ்தானக் கைபீது.

என்னவென்றால் :— ௰அ

பூருவத்தில் கலியுகவாதியில் அரணியத்திலே கொல்லத் தோட்டியன் பசுமாடு மேய்த்துக்கொண்டு வாசம்பண்ணிக்கொண்டு இருந்தான். அந்தப் பசுமாடுகளிலே ஒரு காராம்பசு பூரணமான கருப்பமாயிருந்தது. கன்று போட்டுக் கன்றுக்குப் பால் கொடாமல் வனத்திலே காடும் செடியும் செடியின்கீழே யிருக்கப்பட்ட புத்துக்கும் பால் சொறிந்து கொண்டிருந்தது. இப்படியே வெகுநாள் நடந்துகொண்டிருந்தது.

End:

அந்தக் காரைச் செடியும், மேற்புரம் மடையாகிய கருட தீர்த்தமும் இருக்கின்றன. அதனாலே காரைமடை யென்றும், காரைமங்கைநாத ஸ்வாமி யென்றும் பேர் வழங்கலாயிற்று.

இப்படிக் காரைமடை ஸ்தலத்து அநந்தையன் இராமையன் எழுதி வைத்த கைபீய்த்து. அநந்தையன் இராமைய்யன்.

ஷை பிச்சை மன்றாடிபாளையக்காரன் நாளையிலே பெள்ளதியிலே உறுவமான சங்கமேசுவரஸ்வாமி சந்நிதியும் சீரணோத்தாரணம்பண்ணி அழகப்பெருமாள் தூயவரங்கரையும் பிரதிட்டைபண்ணி ஆலயங்கள் முதலானவைகளும் கட்டுவித்தார். சாமைய்யன், பொன்னன் திம்மப்ப தாஸன்,

(கு.-பு.)—

இது காங்கேயம் தாலூக்காவைச் சார்ந்த காரைமடை யென்னும் ஊரினது பெருமையினை எடுத்துணர்த்துகின்றது. இங்கு வேங்கடரமணஸ்வாமி ஸாந்நித்யமான வரலாறும், அவருக்கு மங்கைநாதரெனப் பெயர் வந்த தன் காரணமும், இவ்வூருக்குக் காரைமடை யெனப் பெயர் வந்த வகையும் இன்னும் சிலவும் இத்துள் கூறப்பட்டுள்ளன. முற்றுமிருக்கின்றது.

No. 2817. ஆதியூர் மகாதேவ ஜோஷியர் தாம்ர சாஸனம்.
ĀDIYŪR MAHĀDĒVAJŌSIYAR TĀMRAŚĀSANAM.

Pages, 6. Lines, 16 on a page. Extent, 36 granthas.

Begins on fol. 88*b* of the manuscript described under D. No. 2801.

Complete.

A copy of a Kannada inscription on copper plate with Mahādēvajōsiyar, son of Śri Ṣivarāma Ṣastriyar, of Ādiyūr.

Beginning :

ஆதியூர் இராமசுவாமி சாஸ்திரி (என்னும்) மகாதேவ ஜோஷியரிடமிருக்கும் சாஸனத்துக்கு நகல் :—

ஷை ஊரிலே யிருக்கும் சிவராம சாஸ்திரி குமாரன் இராமசாமி சாஸ்திரி மகாதேவ சோஷியரிடத்திலே யிருக்கப்பட்ட சாஸனத்துக்கு நக்கல் :—

[illegible] ஸ்வஸ்திஶ்ரீ விஜயாப்யுதய சாலிவாகன சக [illegible]

[illegible] : [illegible] * * * * * * *

End :

[illegible] |

[illegible] ||

[illegible] |

(கு.-பு.)—

இது ஆதியூரிலிருக்கும் சிவராம சாஸ்திரிகள் குமாரர் இராமஸ்வாமி சாஸ்திரி எனப்படும் மகாதேவ ஜோஷியரிடத்துள்ள கன்னட தாம்ர சாஸனத்தை யெடுத்துணர்த்துகின்றது. தெலுங்கு லிபியிலெழுதப்பட்டுள்ளது. தேவராஜ ஸமுத்ரம், பூஸூரபள்ளி என்ற மறு பெயர்களும் அமைந்த கிராமத்தின் விஷயமான தாம்ரசாஸனம் இது. முற்றுமிருக்கின்றது.

No. 2818. சாமளாபுரம் மகா ஜனங்களிடமுள்ள சாஸனம்.
ŚĀMAḶĀPURAM MAHĀJANAṄKAḶIḌAMUḶḶA ŚĀSANAM.

Pages, 7. Lines, 16 on a page. Extent, 42 granthas.

Begins on fol. 91*b* of the manuscript described under D. No. 2801. 95 and 96 are left blank.

Complete.

A copy of an inscription in the possession of the Mahājanas of the village of Śāmaḻāpuram near Śeṭṭippāḻaiyam, relating to the grant of that village to Brahmins by Karikarcōḻan.

Beginning :

சியாமளாபுரம் அக்ரஹாரம் மகாஜனங்களிடமுள்ள
சாஸனத்துக்கு நக்கல் :—

உம். தாராபுரம் துக்கடி செட்டிப்பாளையம் தா்லூக்கா சியாமளாபுர அக்கிரஹாரம் மகாஜனங்களிடத்திலிருக்கப்பட்ட சிலாசாஸனத்துக்கு நகல் :—

ஸ்ரீ இராசராச தேவர்க்கு ஆண்டு இரண்டாவதுக்கு * * * * * * *

End :

சியாமளாதேவி சதுர்வேதிமங்கலம் என்றும் தாரைவார்த்துக்கொடுத்தோம். சோழவளநாட்டுமணியோடு நல்லூரான சியாமளாதேவி சதுர்வேதி மங்கலம் கல்லும் காவேரியும் புல்லும் பூமியும் சந்திர சூரியர்கள் உள்ள வரைக்கும் சுத்த சருவமானியமாய் அனுபவித்துக்கொண்டு வருவார்கள் என்று சம்மதித்திட்டு இட்டுக்கொடுத்தோம். சந்திராதித்தர் வரையிற் செல்லுவதாகச் செம்பிலும் கல்லிலும் வெட்டிக்கொள்ளுவீராகவும். இந்தத் தருமம் விரோதம் பண்ணின பேர்கள் * * * * * * * * * * * * *

(கு.-பு.)—

இது கரிகாற் சோழன் என்பவர் சியாமளாபுரம் என்னும் கிராமத்தைப் பிராம்மணர்களுக்குத் தாரைவார்த்துக் கொடுத்துப் போந்த செய்தியினை விளக்கு மொரு சாஸனத்தின் பிரதியாகும். இவ்வூருக்குச் சியாமளாதேவி சதுர்வேதமங்கலம் எனவும் பெயர் வழங்கப்படும் போிலும். முற்றுமுள்ளது.

No. 2819. மலையாள தேசக் கைபீயத்து, MALAIYĀḶADĒŚAKKAIPĪDU.

Pages, 171. Lines, 15 on a page. Extent, 1,000 granthas.

Begins on fol. 97*a* of the manuscript described under D. No. 2801. Complete.

An account of the castes of Malabar.

Restored from a manuscript described under D. No. 3120 which is described under No. 842 of Taylor's Catalogue, Vol. III p. 662.

Beginning :

மலையாள தேசக் கைபியத்து. திருவல்லா கவியூர் செங்கனூர் வெண்மணி வெட்டிக்காவல் இப்படியுள்ள கிராமக்காரர்களுக்கு அத்தியயனம் பாடம் இல்லாதே வந்த சங்கத்திலே மோற்றிமார் என்னும் பேர் வரப்பட்டது என்றும் ஆயதில்ட் ஆட்டியதன்மமும் உள்ளவர்களுக்குப் பண்டாரத்திலே-யென்றும் சொல்லப்படுகிறது.

End :

அமுதசஞ்சீவியென்ற வித்தையைக்கொண்டு கசனை ஜீவிப்பிச்சார். சாமுண்டிமார்க்கு அதப்பதனம் கட்டளையிட்டார்கள். இப்படிக்குச் சோவன்மார் ஈழவர் ஜாதி உண்டான பரமார்த்த கதை.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 3120 ஆம் நம்பரிலும், டைலர் காடலாக்கு 662 ஆம் பக்கம் 842 ஆம் நம்பரிலும் வருணிக்கப்பட்டுள்ளதொரு பிரதியை பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். முற்றுமிருக்கிறது.

No. 2820. பேதக மறுத்தல். BHĒDAKAMARUTTAL.

Substance, paper. Size, 9¼ × 7¼ inches. Pages, 109. Lines, 27, 29 on a page. Character, Tamil. Condition, good. Appearance, new. Extent, 2,000 granthas.

Complete.

A Roman Catholic treatise.

Beginning :

தைரியநாத ஸ்வாமிகள் உண்டுபண்ணின பேதக மறுத்தல் :

பாயிரம் :—

அர்ச்சிய சீஷ்ட அடுஸ்தினென்பவர்
திருச்சபை விட்டுப்பிறிந் தவர்களுக்குள்ள
குணத்தைக் காட்டிச் சகலஞ்சாதித்தாலும்
பொய்யைச் சொல்லுதலும் மெல்லாபதிதனி
யல்பாகு மென்று ருகையால்,
* * * * * * * * * * * * * *

End :

துரத்தி மிகவும் வருந்தாநின்றதாம்.
தின்புன்ற பொகையின் தகுதி.
ஆக அதிகாரம் உ௰கூ.

பேதகமறுத்தல் முற்றும்.

வேதவிளக்கப்பேதக மறுத்தல் முற்றும்.

(கு.-பு.)—

இது கிறிஸ்தவர் மதத்தைச் சார்ந்ததாய்த் தைரியநாதசுவாமியால் இயற்றப்பெற்றதென முதலிற் காணப்பெறும் வாக்கியத்தால்த் தெரிகின்றது. இத்துள் 26 அதிகாரங்கள் உள்ளன.

No. 2821. தாம்பிரபர்ணி மாகாத்துமியம். TĀMMIRAPARṆI MĀHĀTMIYAM.

Substance, paper. Size, 8¼ × 6½, 9¼ × 6½ inches. Pages, 60. Lines, 28 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old. Extent, 700 granthas.

Begins on *fol.* 1. The other works herein are Māṇikkavācaker carittiram 31*a*, Jambukēśvarasthalamāhātmyam 65*a*.

Complete.

A legendary account of the holy impartance of the Tāmraparṇi River in the Tinnevelly district.

Similar work as that described under R. No. 461.

Same work as that described under No. 784 of Taylor's Catalogue, Vol. III.

Beginning :

தாம்பிரபர்ணி மகத்துவம்.

நைமிசாரண்ணியமென ஒரு வனமுண்டு. அது வாலாறு யாதென்றல் :—பூர்வத்திலே முனிவர்களெல்லோரும் பிரம்மாவினிடத்திலே சென்று எங்களுக்கு எக்காலமும் விருப்பமுண்டாக தவசு வீத்திருப்பதற்கு அழிவில்லாத * * * * * * * * * *

End :

இந்தத் தாம்மிரபர்ணி மாகாத்துமியமெல்லாம் வேதவியாஸருக்கு யார் சொன்னதென்றல் முன்னொரு காலத்திலே பரமசிவனை வேதவியாஸர் சேவிக்கக்கைலாஸத்துக்குப் போனார். * * * * * * * *

Colophon :

யிந்த தாம்மிரபர்ணி மாகாத்துமியம் முடிந்தது.

வேலுண்டு, வினையில்லை, மயிலுண்டு, பகையில்லை, குமாருண்டு, குறைவில்லை.

முற்றும்.

(கு.-பு.)—

இது மூவருடக் காட்லாக்கு 461 ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள பிரதி போன்றதாகும். டைலர் துரையினது காட்லாக்கில் 784 ஆம் நம்பரிலுமிது வருணிக்கப்பட்டிருக்கிறது. முற்றுமிருக்கின்றது.

No. 2822. மாணிக்கவாசகர் சரித்திரம்.
MĀṆIKKAVĀCAKAR CARITTIRAM.

Pages, 67. Lines, 36 on a page. Extent, 900 granthas.

Begins on fol. 31*a* of the manuscript described under D. No. 2821.

Complete.

A biographical account of the Śaiva Saint Srī Māṇikkavācaka by Vēdanāyakam Piḷḷai.

Same work as that described under No. 784 of Taylor's Catalogue.

Beginning :

மாணிக்க வாசகர் சரித்திரம்.

முகவுரை :—

கனம் பொருந்திய மேசர் காலன் மெக்கென்ஸி துரையவர்கள் வேத நாயக வேதாகம சிரோமணியாருக்குக் கொடுத்த திட்டம் அல்லது மெமோ ராண்டத்தின்படி மாணிக்கவாசகர் சரித்திரம் ஏதென்பதைத் திட்டமாய் விசாரித்தெழுதவேண்டியதாமே. இதைத் தொட்டு அறியவேண்டியது க ஆவது :—* * * * * * * * * * * * * * * * * *

End :

ஆனபடியினாலே வாதவூரிலே பிறந்த அந்தணராகிய மணிக்கவாசக ருடைய ஞானச்செயல் விளங்கிய இந்தத் திருக்கதையான திருவாதவூர ருடைய புராணத்தைப் படித்த பேரும், * * * * * * * *

Colophon :

முற்றும்.

(கு.-பு.)—

இது திருவாதவூரர் என்னும் மாணிக்கவாசகஸ்வாமிகளது வரலாற்றினை எடுத்துணர்த்துகின்றது. வேதநாயகம் பிள்ளை யென்னுமொருவரால் தொகுக்கப்பட்டு மெக்கென்ஸி துரையவர்களுக்குக் கொடுக்கப்பட்டதாகத் தெரிகின்றது. இவ்வரலாற்றை யுணர்த்தும் வேறு பல நூல்களுமுள்ளன. முற்றுமிருக்கின்றது.

No. 2823. ஜம்புகேசுவர ஸ்தல மாகாத்துமியம்.

JAMBUKĒŚUVARASTHALAMĀHĀTMIYAM.

Pages, 36. Lines, 18 on a page. Extent, 200 granthas.

Begins on fol. 65*a* of the manuscript described under D. No. 2821.

Complete.

A legendary account of the religious importance of Jambukēśvaram (Tiruvānaikkāval) near Trichinopoly.

Beginning :

காவேரி தீரமுன ருஷிலு தபஸு சேஸிந மஹத்துவமு.

முதலாவது :—

கல்பாதியிலே காவேரிக்குத் தக்ஷிண பாகத்தில் பிரம்மாதி தேவதையி னால் சநகாதி இருஷிகளும் தபசு பண்ணினார்கள். அந்தத் தபோ மகிமை யினால் ஸ்ரீ கைலாசபதி அவர்கட்கு பிரசன்னராகி உங்கட்கு வேண்டிய வரங்களைக் கேளுங்கள் என்று சுவாமி சொன்னபோது * * * *

End :

அதுக்குத் தக்க பணங்களாய் விடும். ஆகையால் அந்தப் பிராகாரத் திற்கு விபூதி பிராகாரம் என்று நாமதேயம். அந்தப் பிராகாரம் பிரதக்ஷி ணம் பண்ணினால் சருவாபீஷ்டமும் சித்திக்கும்.

(கு.-பு.)—

இது திருச்சிறுப்பள்ளியையடுத்துள்ள ஐம்பெரும் சிவ க்ஷேத்திரங்களுள் ஒன்றான திருவானைக்காவலென்று தற்காலம் வழங்கப்பட்டுவரும் ஜம்புகேசுவரத் தலத்தினது மகிமையினை எடுத்துணர்த்துகின்றது.

No. 2824. பத்மாசல மாகாத்துமியம்.
PADMĀCALAMĀHĀTMIYAM.

Substance, paper. Size, 9½ × 6¼ inches. Pages, 36. Lines, 28 to 42 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old. Extent, 750 granthas.

Begins on fol. 1*a*. The other works herein are :—

Naraśinkapperumāḷ Koil talamāhātmyam 20*a*.

Śucīndradēvasthāna Māhātmyam 44*a*.

Periyappakkauṇḍan Vaṁśāvaḷi 63*a*.

Rāmabhadranāyakan Vaṁśāvali 72*a*

Incomplete.

Same work as that described under D. No. 2114 and 825 of Taylor's Catalogue, Vol. III, contains 1 to 7 Adhyāyās.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2114-ஆம் நம்பரிலும் டைலர் காடலாக்கு 825-ஆம் நம்பரிலும் வருணிக்கப்பட்டுள்ளதேயாம். முற்றுப் பெறவில்லை.

No. 2825. நரசிங்கப் பெருமாள் தல மாகாத்துமியம்.
NARAŚIṄKAPPERUMĀḶ TALAMĀHĀTMYAM.

Pages 46. Lines, 36 on a page. Extent, 1,000 granthas.

Begins on fol. 20*a* of the manuscript described under D. No. 2824.

Complete.

A legendary account of the temple of God Viṣṇu named Naraśinkapperumāḷ and other such temples in various places.

Beginning :

நரசிங்கப்பெருமாள்கோவில் ஸ்தலபுராணம் வழக்கம்.

முன்னொரு காலத்தில், சந்தையூர் மகாரண்யமான இலந்தை வனமாயிருந்தது. அந்த வனத்திலே இடையர் மாடு மேய்த்துக் குளிப்பாட்டியிருந்தார்கள்.

அப்படியிருக்கையிலே ஒரு தொழுவாசலிலே ஒரு இலந்தை மரம் பெரிய மரமாக விருந்தது. இந்த இடையன் தொழுவிற் பசுவின்பாற் கறந்து கொண்டுவருகிறபோது இலந்தை மரத்தூரு தடிக்கிப் பால் எல்லாம் கொட்டிக் கவிழ்ந்துபோக அதுநிமித்தமாக

End :

அப்புறம் க ஆவது பட்டம் அப்பாட்சி கவுண்டன் நாளையில் கோவி லுக்குச் சிகரமும் மகா மண்டபமும் * * * * * * * மேளவாத்தி யங் கட்டியத்துடனே வீட்டுக்கு அனுப்புவித்து அதுமுதலாய் நெடுகலும் நடந்துவருகிறது.

(கு.-பு.)—

இது திருநெல்வேலி, கோயமுத்தூர், நாமக்கல், கன்னிவாடி, தாடிக் கொம்பு, குதிரைச்சுனை முதலான விடங்களிலுள்ள சிவ விஷ்ணு ஸ்தலங் களினது பெருமையினை எடுத்துணர்த்துகின்றது. மிகச் சிதலுற்றும் எழுத்துக்கள் தெளிவில்லாமலு மிருக்கின்றது. முற்றுமிருக்கின்றது.

No. 2826. சுசீந்திர ஸ்தல மாகாத்மியம்.
ŚUCĪNDRASTHALAMĀHĀTMIYAM.

Pages, 34. Lines, 20 on page. Extent, 275 granthas.

Begins on fol. 44*a* of the manuscript described under D. No. 2824.

Complete.

A legendary account of a holy place named Sucīndram, Travancore.

Beginning :

மலையாளம் திருவிதாங்கோட்டு சமஸ்தானத்தைச் சார்ந்த கன்னியா குமாரியிற் சுசீந்திரம் என்ற தேவஸ்தானத்தின் வரலாறு :—கடுதாசி கூ பக்கம் ௰அ. தரியாபத்து நிட்டல நாயகன் அய்யன்.

End :

மேல் எழுதின வரலாறு அல்லாதே * வாங்கினால் வேண்டிய கதையை யெல்லாம் அறியலாம். சாவகாசமில்லை.

(கு.-பு.)—

இது திருவனந்தபுரத்துக்கு அருகிலுள்ள கன்னியாகுமாரி சீமையி லுள்ள சுசீநதிரம் என்ற ஸ்தலத்தினது பெருமையினையும் வரலாற் றையும் எடுத்துணர்த்துகின்றது. முற்றுமிருக்கிறது.

No. 2287. பெரியப்பக் கவுண்டன் வம்சாவளி.
PERIYAPPAKKAVUṆḌAN VAMŚĀVAḶI.

Pages, 78. Lines, 34 to 40 on a page. Extent, 350 granthas.

Begins on fol. 63 *a* of the manuscript described under D. No. 2824.

Complete.

A genealogical account of Periyappakkavuṇḍan at Āyakkuḍipāḷayappaṭṭu.

Beginning :

ஆய்க்குடிபாளையப்பட்டு பெரியப்பக் கவுண்டன் வம்சாவளி.—
பூவுலிங்கம் எழுதியது.

சாலிவாகன சகாப்தம் ௲௬௱௰௪ கலியுக சகாப்தம் ௪௲௮௱ இதற்கு மேல் செல்லாநின்ற ஸ்ரீமுக வருஷத்தில் என் முன்னோர்களாகிய முதலாவது பட்டக்காரர் பெரியப்ப கவுண்ட நாயகர் வடக்கே இராச ஸ்ரீ இடில்லி பாட்சா சமஸ்தானத்தில் * * * * * * * * * * * *

End :

தம்பியினுடைய பிள்ளையை யெடுத்துத் தன் பிள்ளையென்று பாவித்துப் பட்டங்கட்டி வைத்துக்கொண்டு இருந்தார். அந்தப்பட்டக்காரனாகிய திருமலைமுத்துவீர வேங்கடசாமி ௲அ௱௰ வரைக்கும் இருந்து அப்பால் மரணமாய்ப் போனபடியினாலே இப்போது அவருடைய தம்பி திருமலைமுத்துவீர பெத்தப்ப நாயகர் பட்டத்துக்கு உரியவராய் இருக்கிறார்.

* * * * *

(கு.-பு.)—

இது ஆயக்குடி பாளையப்பட்டு பெரியப்ப கவுண்டர் என்பவரது வமிச பரம்பரையின் எடுத்துணர்த்துகின்றது.

No. 2828. இராமபத்ர நாயகர் வம்சாவளி.
IRĀMABHADRANĀYAKAR VAMŚĀVAḶI.

Pages, 6. Lines, 28 on a page. Extent, 55 granthas.

Begins on fol. 72*a* of the manuscript described under D. No. 2824.

Complete.

A genealogical account of Irāmabhadranāyakar of Vaḍakarai pāḷayappaṭṭu.

Beginning :

வடகரை பாளையப்பட்டு இராமபத்திர நாயக்கர் வமிசாவளி.

ஸ்ரீமஹாகணபதயே நம:

ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் ௲௬௱௯௰ கலியுக சகாப்தம் ௪௲௮௱௪௰௯ இதன் மேற் செல்லாநின்ற கீலக வருஷத்தில் எங்கள் முன்னோர்களாகிய இராமபத்திர நாயகர் மகா-௱-௱-ஸ்ரீ இராயர் அவர்கள் சமஸ்தானத்தில் கொட்டியம் நாகம நாயகர் அவர்களிடத்தில் சேவகம் சேவித்துக்கொண்டு இருந்தார். அப்படிக்குச் சிறிது நாளிருக்கையில் நாகம நாயகர் அவர்களுக்குக் குழந்தையில்லாமல் காசி யாத்திரை போனார். அப்போது இராமபத்ர நாயகரையும் விசணபாக்கம் கேசவப்ப நாயகரையும் இவர்களிருவரையும் * * * * *

End :

சகலமான பாளையக்காரரையும் வரவழைத்தார். அப்போது இந்த இராமபத்திர நாயகரும் போனதில் இவருக்குத் திருமஞ்சன வாசலுக்குப்

பிரதட்சிணமாக கூடிச கொத்தளங் காவலுங் கொடுத்து சிறிது பூஷண திகளும் கொடுத்து அனுப்பினார். அப்பால் ஊர் ஏற வந்து சேர்ந்து உடு ஸூடி துறைத்தனஞ் செய்து தெய்வீகமானார்.

(கு.-பு.)—

இது வடகரைப்பாளையப்பட்டு இராமபத்ர நாயகர் என்பவரது வரலாற் றினை யெடுத்துணர்த்துகின்றது. முற்றுமிருக்கிறது.

No. 2829. இறை திம்ம நாயகன் வமிசாவளி.

IRAITIMMANĀYAKAN VAMŚĀVAḶI.

Substance, paper. Size, 9½ × 8, 9¾ × 8 inches. Pages, 29. Lines, 18 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old. Extent, 250 granthas.

Begins on fol. 1*a*. The other works herein are :—

Koṇḍamanāyakan Vaṁśāvaḷi 16*a*, Lingamanāyakan Vaṁśāvaḷi 25*a*, Kūḷappanāyakan Vaṁśāvaḷi 39*a*, Śāmaiyanāyakan Vaṁśāvaḷi 49, Irāmanāyakan Vaṁśāvaḷi 57*a*, Yaratimmanāyakan Vaṁśāvaḷi 65*a*, Muttu Raṅgappanāyakan Vaṁśāvaḷi 78*a*, Cinnamanāyakan Vaṁśāvaḷi 82*a*, Timmanāyakan Vaṁśāvaḷi 88*a*, Śōttam Nāyakan Vaṁśāvaḷi 89*a*, Śīlamanāyakan Vaṁśāvaḷi 91*a*, Cidambaravanniyan Vaṁśāvaḷi 100*a*, Kuḷaiyūrkaipīdu 106*a*, Veñcamarikkūḍalūr dēvasthānaccilāsāsanam 107*a*, Veñcamarikkūḍalūr dēvasthānam varalāṟu 108*a*, Tumbilāḍigrāmak kaṇakku 111*a*, Tirumalaimuttu maduraināyakan Vaṁśāvaḷi 112*a*, Marudappadēvan Vaṁśāvaḷi 124*a*, Bālamuttaiyanāyakan Vaṁśāvaḷi 139*a*, Iraṭṭaikkuḍaivanniyan Vaṁśāvaḷi 147*a*.

Complete.

A genealogical account of Iraitimmanāyakan a pāḷayagār of Iḍaiyakkōṭṭai.

Beginning :

இடையக்கோட்டை பாளையக்காரன் இறை திம்மநாயகன் வம்சாவளி.

முன் எங்கள் பெரியோர்கள் இருந்த தலம் பஞ்சநகரம். ஆதியில் வல்லாள மகாராசாயிருக்கிறபோது மகாருச மானியர் ராசஸ்ரீ ராயர் ஸமஸ் தானத்தில் கோட்டையும் நகரமும் ஆண்டு இராயரிடத்தில் சேவித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது வடக்கேயிருந்து இராயர் ஸமஸ்தா னத்தை யேடுபடுத்திப் ? போடுகிறதாக உத்திராதியிலிருந்து *

* * * * *

End :

முறைக்குச் செலுத்திவிடச் சொல்லி கம்பெனியாரது உத்திரவு செய்த முறைக்குச் செலுத்தி கம்பெனிக்கும் நாவிறக்கமாய் மேலும் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளுகிறேன். சுவாமி சித்தம் அறியவேண்டியது.

இப்படி,

ஏற திம்ம நாயகன்.

(கு.-பு.)—

இது இடைக்கோட்டையிற் பாளையக்காரனாகிய எற திம்ம நாயகன் என்பவரது முன்னோர்களுடைய வம்ச பரம்பரையினையும் அதிசயச் செயல்களையும் எடுத்துணர்த்துகின்றது. அவராலேயே இது எழுதிக்கொடுக்கப்பட்டதெனவும் தெரிகின்றது. முற்றுமுள்ளது.

No. 2830. கொண்டம நாயகன் வம்சாவளி.
KONḌAMANĀYAKAN VAMŚĀVAḶI.

Pages, 18. Lines, 20 on a page. Extent, 180 granthas.

Begins on fol. 16*a* of the manuscript described under D. No. 2829.

Complete.

A genealogical account of Konḍamanāyakan, a pāḷayagār of Bellaṅkonḍa.

Beginning :

கும்பினியாரவர்கள் சமட்சத்துக்குப் பெல்லங்கொண்ட பாளையக்காரன் கொண்டம நாயகன் எழுதிக்கொடுத்த வம்சாவளி:—பூருவம் எங்கள் முன்னோர்கள் குழந்தைவேல் வல்லக்கொண்டம நாயகன் இராயர் அவர்கள் சமஸ்தானத்தில் போய் வெகுநாளை காத்திருந்தபோது ஒரு நாள் தென்வயல் இராயர் அவர்கள் சமட்சத்தில் அடுத்துப் போய் நின்று ஷெ இராயர் அவர்களைப் பூர்த்து மகா ராஜா நான் வெகுநாளாய் நிஜ மங்கள பரிபூரண கடாட்சம் வேணுமென்று கோரிச் சமஸ்தானத்திற் காத்திருக்கிறேன். * * * * * *

End :

அந்தப்பட்டத்துக்கு நான் உடையவன் ஆணபடியினாலே என்பேரில் கம்பெனியார்கள் பிள்ளையாகப் பாவித்து என் பாளையப்பட்டும் எனக்கு வந்து சேரும்படிக்குக் கடாட்சம் வைத்து விட்டுக்கொடுத்துக் காப்பாற்றி இரட்சிக்கவேண்டியது.

இந்தப்படிக்கு,
ஷெ ஜமீன்தார் கையெழுத்து,
பெல்லம் கொண்டம நாயகன்.

(கு.-பு.)—

இது பெல்லங்கொண்ட கொண்டம நாயகன் என்னும் பாளையக்காரரது முன்னோர்களின் வமிச பரம்பரையினையும், அதிசயச் செயல்களையும், அவராண்ட சீமைகளையும், அவரவர் காலத்துப் புதிதாயேற்பட்ட பல கிராமங்களையும், பிறவற்றையும் எடுத்துணர்த்துகின்றது. அவராலேயே இது எழுதிக் கொடுக்கப்பட்டதெனவும் தெரிகின்றது.

No. 2831. இலிங்கம நாயகன் வம்சாவளி.
ILINGAMANĀYAKAN VAMŚĀVAḶI.

Pages, 26. Lines, 22 on a page. Extent, 260 granthas.

Begins on fol. 25 *a* of the manuscript described under D. No. 2829.

Complete.

A genealogical account of Ilingamanāyakan, a pāḷayagār of Nattam. Composed by Śokkaliṅganāyakar.

Beginning :

நத்தம் இலிங்கம நாயகன் வம்சாவளி.

குரோதன ௵ புரட்டாசி ௴ ௫ ௨ சொக்கலிங்க நாய்க்கன் எழுதிக் கொண்டது.—ஆனைகொந்தி நகரத்துமேலே மொகலாயப்படை வந்து இறங்கி வெகுகாலபர்யந்தம் * * * * * * விடாமல் வெகு நிபந்தனங்கள் பண்ணி ஸம்ஸ்தானம் எடுபட்டுப் போகிறதாக இருக்குந் தருணத்தில் இராயதேவர் மகாஸ்வாமியவர்கள் கொலுவின் கூடத்துக்கு வந்து அமற்காரற் சகிதமாகிச் சகலமான பாளையக்காரரையும், சகலமான சர்தார்களையும் வரவழைத்துக்கொண்டு மந்திராலோசனை பண்ணி நிச்சயம் செய்து கொண்டு சபையிலிருக்கிறவர்களை ஆக்கினை செய்விச்சது * * * * * *

End :

எங்கட்க்குக் கம்பெனியாரைத் தவிர வேறே கதியில்லை. ஆகையினாலே என்னுடைய பித்ரார்ஜிதமான பாளையப்பட்டை எனக்குச் சாரும்படிக்குத் தயை செய்து காப்பாற்றவேண்டும்.

(கு.-பு.)—

இது நத்தம் இலிங்கம நாயகன் என்பவனது வரலாற்றினையும், அவனது பூருவீகர்களது வம்ச பரம்பரை, வீரச்செயல் போன்றனவற்றையும் எடுத்துணர்த்துகின்றது. இலிங்கம நாயகன் என்பவன் இராய மகாதேவரது தளகருத்தனாயிருந்து மொகலாயப் படையோடு போர் புரிந்து தாக்கிப் பின்னர் பாண்டி நாட்டையடைந்து துவாராவதி யெனப்படும் நத்தம் பெற்று காடுவெட்டி நாடாக்கினது முதல் இலுப்பையூரில் இம்மனுதாரரின் தன்மையன் முத்தைய நாயகன் இறுதியாகப்பட்டம் பெற்றவரையான இச் செய்தியித்துள் கூறப்பட்டிருக்கிறது. பின்னர் இம்மனுதாரிக்கு அப்பாளையப் பட்டம் கிடைக்காமற் பண்ண பல இடையூறுகளைச் செய்து வந்த மீனம்மாள் மருமக்களிற் சிலரது குற்றங்களைக் காட்டி, யவரை யடக்குவித்து ஷை பட்டத்தைத் தனக்கே கொடுக்குமாறு ஈஸ்டு இண்டியா கம்பெனிக்கு எழுதிக்கொடுத்ததாகவும் குறிக்கப்பெற்றுளது.

No. 2832. கூளப்ப நாயகன் வம்சாவளி.
KŪḶAPPANĀYAKAN VAMŚĀVAḶI.

Pages, 19. Lines, 17 on a page. Extent, 162 granthas.

Begins on fol. 39 *a* of the manuscript described under D. No. 2829.

Complete.

A genealogical account of Kūḷappanāyakan, a pāḷayagār of Onpadūr, near Nilakkōṭṭai.

Beginning :

கம்பெனியார் அவர்கள் சமூகத்துக்கு ஒன்பதூர் கூளப்ப நாயகர் வம்சாவளிக் கணக்கு :—

இராயர் சமஸ்தானத்தின் மீதில் பாதுஷா தண்டெடுத்து வந்தபோது ஸமஸ்தானம் எடுபட்டுப் போகிற முன்னுக்கு அப்போது சிகப்பு வஸ்திரங் காவி கொண்டு வந்து வைத்து இதில் சமுசாரத்தின் மீதில் ஆசையில்லா மல் பொன்னுசையில்லாமல் முன்னுக்கு நடக்கிறவர் ஆரோ அவர்கள் எல்லாம் இந்தச் சிகப்பு வஸ்திரங்களெல்லாமெடுத்துக்கொண்டு தாம் பூலம் வாங்கிக்கொண்டு ரணரங்கத்துக்குப் போக(வெண)ச் சொல்லி உத்திரவு கொடுத்தார்கள். அப்போது எங்கள் முன்னோர்கள் ஆதியில் * * * * * * * * * *

End :

நாமும் நிலக்கோட்டைக்கு வந்து கம்பெனி காரியத்தில் அதி ஜாக்கிர தையாயிருந்து கிஸ்திப் பிரகாரம் செலுத்திவைத்துக்கொண்டு வருகிறோம்.
* * * * * *

இந்தப்படிக்குக் கூளப்ப நாயகன்.

(கு.-பு.)—

இது கூளப்ப நாயகன் என்னுமொரு பாளையக்காரனது முன்னோர்களின் வரலாற்றினை யெடுத்துக் கூறுகின்றது. இத்துள் ஆதி கூளப்ப நாய கன் சரிதம்முதற் பதினேழாவது பட்டத்துக் கூளப்ப நாயகன் சரிதம் வரையுள்ளது. மற்றும் சந்திரசேகர பாண்டியன் மீது படையெடுத்த வீரசேகர சோழனை, விசுவநாத நாயகர் இவர்களது வரலாறும் இங்கு கூறப்பட்டிருக்கிறது.

No. 2833. சாமைய நாயகர் வம்சாவளி.
SĀMAIYANĀYAKAR VAMŚĀVAḶI.

Pages, 14. Lines, 26 on a page. Extent, 175 granthas.

Begins on fol. 49 *a* of the manuscript described under D. No. 2829.

Complete.

A genealogical account of Śāmaiyanāyakan, a pāḷayagār of Irāmagiri.

Beginning :

மகாறுஜமான்ய ராஜ ஸ்ரீ கம்பெனியார் அவர்கள் சமூகத்துக்கு இராம கிரிபாளையக்காரன் சாமைய நாயகர் வம்சாவளி.
* * * * * *

எங்கள் பெரியவர்கள் குத்தி தேயத்திலிருந்தவர்கள். அவர்கள் இராயர் ஸமஸ்தானத்திலே வத்தியபாலம் உத்தம நாயகர் என்கிறவர் சேவகம் சேவித்துக் கொண்டிருந்ததில் அவ்விடத்திற் சரிப்படாமல் குஞ்சு குழந்தைகள் பந்து சனங்கள் ஸஹிதராய் தெற்கே தேவாமரியென்று காவிரிக்குத் தெற்கே முக்காத வழிக்கப்புறமிருக்கும் ஆலமரத்தூருக்குக் கீழே வந்திறங்கினோம். அப்போது இடையிலிருந்து பால்கொண்டு வருகிற போது கல்லுத் தடுக்கிப் பால் பானை யுடைந்தது. அதென்னவென்று பார்க்குமிடத்து அவ்விடத்தில் சுவாமி நரசிங்கர் உண்டானார். எங்கள் பெரியவர்கள் சுவாமியைப் பூசை பண்ணினார்கள். அவருக்கு நாலு பிள்ளைகள். மூத்தவர் சக்கம் சாமைய நாயகர். இளையவர் திருமலை முத்தைய நாயகர். முள்ளிப்பாடிக்குப் போனார்கள். இன்னும் இரண்டு பேர் கொண்டப்ப நாயகர், தொட்டப்ப நாயகர், இவரிருவரும் பொது மாட்டை * * * * * * *

End :

அதன் பிறகு வச்சிர நாயகர் துரைத்தனம் ௵ உ காணிக்கை மெதாஅமெரு பொன். அதன் பிறகு நரஸிம்ம நாயகர் துரைத்தனம் ௴ ௩. அதுவரையில் கம்பெனியிலும் வகையிறுப்புண்ட மெதாஅமெரு பொன்கொடுத்து வந்தோம். இப்போது முத்தழகு சாமைய நாயகர் அவர்கள் துரைத்தனம்.

(கு.-பு.)—

இது இராமகிரி பாளையக்காரர் சாமைய நாயகரவரது முன்னோர்களின் வரலாறு முதலானவற்றை ஈஸ்டு இண்டியா கம்பெனிக்கு அறிவிக்கும் வகையிலமைந்துள்ளது. முற்றுமிருக்கிறது.

No. 2834. இராம நாயகன் வம்சாவளி.

IRĀMANĀYAKAN VAMŚĀVAḶI.

Pages, 16. Lines, 14 to 27 on a page. Extent, 150 granthas.

Begins on Fol. 57a of the manuscript described under D. No. 2829.

Complete.

A genealogical account of Irāmanāyakan, a pāḷayagār of Āyakkuḍi.

Beginning :

ஆயக்குடி இராம நாயக்கன் வம்சாவளி விபரம்.

எங்கள் வேடர்குலம் உண்டானது எப்படியென்றால்—பூருவ காலத்தில் கைலாஸபதியாகிய பரமேசுவரக்கடவுளார் மலைவாசம் வனவாசம் ஆக இருந்து யோகநித்திரை சாதிக்கவேண்டுமென்று * * * * * * * * * * * *

நினைத்தவுடனே நாங்கள் பிறந்து பிறக்கிறபோதே வெற்றிச் சேலையும், வில்லும் அம்பும், பாணாஸ்திரங்களும் கையிற்பற்றி எங்கள் வமிசத்தார்

பிறந்து எதிரே வந்து நின்றவுடனே மகாதேவர் கருணை கூர்ந்து நான் மலைவேடன், நீங்கள் சிலை வேடர் என்று திருநாமஞ் சாற்றி ஆண்டு கொண்டு வருகிற காலத்திலே எங்களில் வால்மீகியென்றும், கண்ணப்பர் என்றும் * * * * * * *
* * * * * * *

End :

கிழக்கே துஷ்டனாகிய சிவகங்கை வெள்ளைமருதன் பேரில் கம்பெனி யார் அவர்கள் பாளையம் போகிறபோது என்ஜனம் அஞ்னூறு செனமும் கூடப்போய்த் தண்டு செலுத்தி உத்தரவாதம் பண்ணினேன். மான்யராஜஸ்ரீ ஷெ கம்பெனியார் அவர்களுடைய தயவும் அபிமானமும் மேன்மேலும் வரவேணும் என்று நான் பிரார்த்தித்துக்கொண்டு கம்பெனிக்குப் பெற்ற பிள்ளையாக நடந்துகொண்டு வருகிறேன்.

(கு.-பு.)—

இது ஆயக்குடி பாளையப்பட்டு இராம நாயகன் என்பவரது முன்னோர் களின் வரலாற்றினை யெடுத்துணர்த்துகின்றது. பெரிய அகோபில கொண் டம நாயகர் தொடக்கமாக உம் ஆம் பட்டம் ஆன தம் வரையில் உள்ள வர்களது சரிதத்தை யித்துளவர் கூறியிருக்கிறார். இராயர் ஸமஸ்தானத் தில் இருந்த கொட்டியம் நாகம நாயகர் என்பவரால் ஷெ கொண்டம நாயகர் 18 பிருதுகளையும் கட்டாலி சாளுவராயன் என்ற பிருதையும் பெற்று வராக கிரிச்சாரலிலே ஆயக்குடி, அம்பாபுரி யென்னுமிப்பாளையப் பட்டமைத்து அகோபிலப் பெருமாள் கோவிலுங்கட்டிவைத்த விச் செய்தியும், இக்குலத்துதித்த வால்மீகி, கண்ணப்பர் அங்கிலியன் இவர்க ளது செய்தியும் இது போன்ற வேறு சிலவையுமிதனுள் கூறப்பட்டுள்ளன.

No. 2835. சக்கரைக் கவுண்டன் வம்சாவளி.

ŚAKKARAIKKAVUṆḌAN VAMŚĀVAḶI.

Pages, 25. Lines, 17 to 22 on a page. Extent, 250 granthas.

Begins on Fol. 65 a of the manscript described under D. No. 2829.

Complete.

A genealogical account of Śakkaraikkavuṇḍan, a pāḷayagār of Paḷaya-kōṭṭai near Gāṅgēyam.

Beginning :

தாராபுரம் துக்கடி காங்கையம் தாலூக்காவுக்குச் சார்ந்த பழைய கோட்டை கிராமத்திலே இருக்கும் சக்கரை கவுண்டன் என்னப்பட்ட பட்டக் காரருடைய கைபீயத்து முதலானது.

தாராபுரம் துக்கடிக்குச் சேர்ந்த காங்கையம் தாலூக்காவுக்குச் சேர்ந்த பழைய கோட்டையிலே இருக்கும் சக்கரை கவுண்டன் என்னப்பட்ட பட்டக்

காரனுடைய வமிசாவளி முதலானதுக்கு மதுரையிலேயிருக்கும் திருஞான சம்பந்தமூர்த்தி யென்னப்பட்ட பண்டாரம் மடாதிபதியிடத்தில் இருக்கப்பட்ட மரபு அட்டவணை யென்னப்பெற்ற புத்தகத்தில் இருக்கப்பெற்ற கைபீதுக்கு நக்கல் * * * * * *

End :

மேலே எழுதப்பட்ட எங்கள் வமிச பாரம்பரையிலே பாண்டியராசா நாள் முதல் நடந்து வரப்பட்ட பிருதுகள், ஆயுதங்கள், வாகனங்கள் வகைராவுக்கு * * * * * *

(1) பல்லாக்கு.
(2) உபயசாமரம்.
(3) சூரியபான்.
(4) சதச்-சத்திரம்.
(5) கட்டியம்.
(6) டக்கா.
(7) கொம்பு.
(8) கனக தப்பட்டை.
(9) துத்தாரி.
(10) அலகோசா.
(11) வட்டப்பாவாடை.
(12) சங்கீத மேளம்.
(13) வாச்சியம்.
(14) சோடு தீப்பட்டி.
(15) காளாஞ்சி.

ஆக யிரு.

(1) பட்டத்துக் கத்தி.
(2) வெடி.
(3) சமுதாடு.
(4) வலயம்.

இவை முதலான ஆயுதங்கள் * * * என்னுடைய மானம் மரியாதை தெரிஞ்சு காப்பாற்றி இரட்சிக்கவேணும். என்று நான் மிகவும் வணக்கத்துடனே கோரிக்கொண்டிருக்கிறேன்.

ஸ்ரீமுக வரு, ஜூலை மீ் யிஉ உ

நல்லசேனாதிபதி

சக்கரை

உத்தமக்காமின்ற மன்றுடியார்.

* * * * * *

(கு.-பு.)—

இது பழையகோட்டை சக்கரை கவுண்டன் என்னும் உத்தமக்காமின்ற மன்றுடி யெனப்பட்ட நல்ல சேனாபதியினது முன்னோர்களின் வரலாற்றினை ஈஸ்டு இண்டியா கம்பெனிக்கு எடுத்துணர்த்தும் வகையிலமைந்துள்ளது. கரியான் சக்கரைக் கவுண்டர் என்பவரை உத்தமக்காச் சோழனார் தம் சத்துருவாகிய சத்துரு சாஸன பாண்டியனை வேரறுத்தற் பொருட்டு நல்ல சேனாபதியாக வாட்கொண்டு முடிசூட்டுவித்தாரென்றும், அவருக்குப்பின் 21 பட்டத்தினரிருந்தனரென்றும், இறுதிப்பட்டதாரியான நல்லதம்பி சக்கரை உத்தமக்காமன் மன்றுடியாரின் புதல்வரே தாம் என்றும் ஷெ தம் பிதா அயிதரலிகான் துரைத்தனத்தில் காலமானாரென்றும் இது போன்ற வேறு சிலவும் இத்துள் கூறப்பட்டுள்ளன.

No. 2836. முத்துரங்கப்ப நாயகன் வம்சாவளி.
MUTTURANGAPPANĀYAKAN VAMŚĀVAḶI.

Pages, 8. Lines, 20 on a page. Extent, 80 granthas.

Begins on Fol. 78*a* of the manuscript described under D. No. 2829.

Complete.

A genealogical account of Mutturaṅgappanāyakan, a pāḷayagār of Mēṭṭūrādipālam near Cakkiragiri.

Beginning :

தாராபுரம் துக்கடி சக்கிரகிரி தாலூக்கா மேட்டூராதிபாலம் முத்துரங் கப்ப நத்தமனூர் என்கிற பாளையக்காரர் வமிசாவளி என்னவென்றால்:—

ஆதி காலத்தில் 'யாதவ' குலமான 'கம்பலசாதி' யனைவரும் பாதுஷா வின் சீமையில் இருக்கிற நாளையிலே என் வம்சமான 'பாலம் நத்தமனூன்' என்கிறவ[ன்](ர்) சாக்கீர் செய்துகொண்டிருந்தார். அந்தச் சமயத்திலே அப்பாதுஷா எங்கள் கம்பள சாதியில் தமக்குப் பெண் கொடுக்கச் சொல்லிக் கேட்டபடியினாலே எங்கள் * * * * * * * * * * * * * * *

End :

ஆறு கிராமத்துக்கும் பிரதிவருடம் * * * * * * படிக்கு மூன்றில் ஒன்று தயவு செய்து இருக்கிறபடியினாலே வருஷா வருஷம் பற்றிக் கொள்ள அனுப்புவித்துக்கொண்டு நாற்பது ஜனம் சம்ஸாரத்துடனே மகாராஜ ஸ்ரீ கம்பெனி துரைகள் கடாச்சத்துக்குப் பாத்திரனாய்க் காத்துக் கொண்டு மேட்டூராதியில் ஆசரிலே காத்துக் கொண்டிருக்கிறேன்.

௲அ௱௪ ௵ ஜனவரி௴ ௨௨

முத்துரங்கப்ப நாயகர், ௫௬௪.

(கு.-பு.)—

இது மேட்டூராதிபாலம் பாளையக்காரர் 'முத்துரங்கப்ப நாயகர்' என்ப வரது முன்னோர்களின் வரலாற்றினை உணர்த்துகிறது.

No. 2837. சின்னம நாயகன் வம்சாவளி.
CINNAMANĀYAKAN VAMŚĀVAḶI.

Pages, 11. Lines, 20 on a page. Extent, 100 granthas.

Begins on fol. 82*a* of the manuscript described under D. No. 2829.

Complete.

A genealogical account of Cinnamanāyakan, a pāḷayagār of Mayilvāḍi, near Cakkiragiri.

Beginning :

சக்கிரகிரி தாலூக்கா மயில[வ]ாடி பாளையக்காரர் ' சின்னம நாயகன் ' வம்சாவளி முதலானது என்னவென்றால் :—

பூருவத்தில் பாதுஷாவின் சீமையில் * * * * * * * * * * இருக்கப்பட்ட ' கம்பள ' சாதியர் எல்லோரும் அங்கிருந்து புறப்பட்டு ' இராயர் ' ஸமஸ்தானத்தில் வந்த தருணத்தில் இராயர் ஸம்ஸ்தானத்தாரால் எங்களுடைய வம்ச சிரோமணியான ' பாலால சித்தம நாயகன் ' இராயர் ஸமஸ்தானத்தில் குமாரவர்க்கம் என்று பேர் பெற்றவர்களாயிருக்கிற நாளையிலே *

End :

பிரதி வருஷம் பத்தில் மூன்று கொடுக்கிறபடியினாலே அதையனுப்பு வித்துக்கொண்டு கடாட்ச பாத்திரனாகிக் காத்துக்கொண்டிருக்கிறேன்.

சின்னமனூர் ருசுவு.

(கு.-பு.)—

இது ' மயி[ல்வா]லாடி ' பாளையக்காரர் ' அழகப்பனயகர் ' குமாரர் ' சின்னம நாயகர் ' என்பவரது முன்னோரான ' பாலால் சித்தம நாயகர் ' என்பவர் பாதுஷா ராஜ்யத்தினின்றும், வெளியேறி ' இராயர் ' ஸமஸ்தானத்தில் அமர்ந்திருந்து பாளையஞ் செலுத்தியது முதற்கொண்டு அவருக்குப்பின் தம் வரையிலான 24 பட்டமுறையினையும் மற்ற செய்தியையும் ஈஸ்டு இண்டியா கம்பெனிக்கு எடுத்துணர்த்தும் முறையிலமைந்துள்ளது. முற்றுமிருக்கிறது.

No. 2838. திம்ம நாயகன் வம்சாவளி.
TIMMANĀYAKAN VAMŚĀVAḶI.

Pages, 2. Lines, 20 on a page. Extent, 20 granthas.

Begins on fol. 88 *a* of the manuscript described under D. No. 2829.

Complete.

A genealogical account of Timmanāyakan, a pāḷayagār of Vēdappaṭṭi, near Cakkiragiri.

Beginning :

சக்கிரகிரி தாலூகா ' வேடப்பட்டி ' பாளையக்காரர் ' திம்ம நாயகன் ' வம்சாவளி :—

பூருவத்தில் ' ஆனைகொந்தி ' ஸமஸ்தானத்தில் இருந்து ' கம்பள ' ஜாதியார் அனைவரும் அவரவர்களுக்குப் பாளையப்பட்டு நியதி செய்வித்துக்கொண்டு புறப்பட்டு தெற்கு நோக்கி வரும் நாளையில் ' அமராவதி ' (ஆம்ரவதி) ஆற்றுக்கு மேற்கு சதுரத்தைச் சேர்ந்த ஒரு நாழிகை வழிக்குக் காடு எனக்கு உம்பளிக்கையாக விட்டபடியினாலே எங்கள் வம்சத்திலே ' போடித்தலை கும்ம நாயகன் ' அந்தக் காடுகளையெல்லாம் வெட்டி ஊர்கள் உண்டு பண்ணினபடியினாலே எங்கள் ' கம்பள ' சாதியில் வேடக் கம்யளமானபடியினாலே அந்த ஊருக்கு ' வேடப்பட்டி ' யென்றும் பேர் பிரசித்தி பெற்று

பாளையக்காரர் என்று ‘ உம்பளியாக ’ அனுபவித்துக்கொண்டு இருக்கிற நாளையிலே வியாக்ரங்களை யெதிர்த்து வேட்டையாடலில் வல்லவனுனபடியினுலே ‘இராயர்’ ஸமஸ்தானத்தில் ‘ஹரி ஜீ’ பிரபுக்கள் கடாட்சம் செய்து ‘ புலி குத்தி கும்ம நாயகன் ’ என்று பேருங்கொடுத்து * * * * * * * *

End :

பத்துக்கு ஏழு அரண்மனைக்குப் பணம் செலுத்து வித்துக்கொண்டு ‘வேடப்பட்டி’ குடியிருப்புக்காரனுய்த் துரைகள் கடாட்சத்துக்குப் பாத்திரனுய்க் காத்துக்கொண்டிருக்கிறேன்.

இப்படி,

வேடப்பட்டி திம்மனுர் ருசுவு.

(கு.-பு.)—

இது ‘ வேடப்பட்டி திம்ம நாயகர் ’ என்றும் பாளையக்காரனது முன்னேரான ‘ புலிகுத்தி கும்ம நாயகர் ’ என்பவரது வரலாற்றை எடுத்துணர்த்துகின்றது.

No. 2839. சோத்தம நாயகன் வம்சாவளி.
SOTTAMANĀYAKAN VAMŚĀVAḶI.

Pages, 3. Lines, 21 on a page. Extent, 30 granthas.

Begins on fol. 89 *a* of the manuscript described under D. No. 2829.

Complete.

A genealogical account of Sōttamanāyakaṉ, a pāḷayagār of Sōttampaṭṭi, near Cakkiragiri.

Beginning :

சக்கரகிரி தாலூக்காவுக்குச் சேர்ந்த ‘ சோத்தம்பட்டி ’ பாளையக்காரர் சோத்தம நாயகனுர் வமிசாவளி முதலான கைபீது என்னவென்றல் :—

பூருவத்தில் ‘கம்பள’ ஜாதியில் அனைவரும் டில்லி பாதுஷா சீமையிலிருந்து பாதுஷா சாதிக்குப் பெண் கொடுக்கமாட்டோமென்று ஏக கூட்டமாய் ‘ இராயர் ’ சமஸ்தானத்தில் வந்து சேர்ந்து இந்தக் கம்பள ஜாதியார் அனைவர்களுக்குள் உள்ள அவரவர்கள் சூரபராக்கிரமங்களையெல்லாம் பராமரித்து அவரவரது சூரபராக்கிரமத்துக்குத் தக்கதாய் மன்னத் தளம் உம்ப(ளி)கை நிலங்களைக் கொடுத்துப் பட்டமும் கட்டுகிற சமயத்திலே அக்காலத்து எங்கள் வமிசத்தில் ‘சல்லிக்குச்சி பொம்மைய்ய நாயகன்’ என்கிறவர் வேட்டையாடுகிறதில் மிகச்சமர்த்தராகையால் இவரைத் தெற்கு தேசத்திலே அமராவதிக்கு மேற்கு, கனியூருக்கு மேற்கு, கிழக்கு மேற்கு இரண்டு நாழிகை வழி, தெற்கு வடக்கு நாலு நாழிகை வழி இந்தச் சதுர பூமிக்கு நீயே மன்னர்த்தனமாய் அனுபவித்துக்கொள்ளச் சொல்லிக் கட்டளையிட்டு * * * * * * * * * * * * * * * * *

End :

துரைகள் தயவுக்குப் பாத்திரனாய் இருவது சம்ஸாரத்துடனே நிரம்பவும் ஏழையாய்க் கட்டிக் கொள்ளத்துணியில்லாமல் ஆசரிலே காத்துக்கொண்டி ருக்கிறேன்.

இப்படி,
சோத்தநாயகன் ருசுவு.

(கு.-பு.)—

இது 'சோத்தம்பட்டி சோத்தம நாயகனது' முன்னோர்களின் வரலாற் றினை ஈஸ்டு இண்டியா கம்பெனிக்கு எடுத்துணர்த்தும் வகையிலமைந் துள்ளது. முற்றுமிருக்கிறது.

No. 2840. சீலம நாயகன் வம்சாவளி.
SĪLAMANĀYAKAN VAMŚĀVAḶI.

Pages, 17. Lines, 22 on a page. Extent, 200 granthas.

Begins on fol. 91*a* of the manuscript described under D. No. 2829.

Complete.

A genealogical account of Sīlamanāyakan, a pāḷayagār of Kāraittoḻuvam, near Cakkiragiri.

Beginning :

சக்கிரகிரி தாலூக்கா துங்காவதி பாளையக்காரன் சீலம் (செல்லம்) நாயகன் வம்சாவளி முதலான கைபீது என்னவென்றால் :—

பூருவத்தில் வட தேசத்தில் டில்லி பாதுஷாவின் சீமையிலிருக்கப் பட்ட யாதவகுலமான கம்பள ஜாதியரனைவரும் துலுக்கர்களுக்குப் பெண் கொடுக்கச் சம்மதியில்லை யென்று ஏகராத்திரியில் புறப்பட்டு 'ஆனைகொந்தி' ஸம்ஸ்தானத்துக்கு வந்து சேர்ந்த கூட்டத்தில் என் வம்சத்தில் 'பாலம் சித்தம நாயகன்' என்கிறவர் 'இராயர்' அவர்களது சமக்ஷத்திலே பேட்டி பண்ணிக்கொண்டு

End :

இதுக்குத் தகவலாய் இருக்கப்பட்ட 'பனை முறி' யாதரவுகள் முதலான வையும் காலாந்திரங்களிலே இராசீகங்களிலே கைதப்பிப் போய் விட்டன. என் வம்ச பரம்பரையிலே சொல்லப்பட்ட கேள்வியினாலும் என்னுடைய அனுபவத்தினாலேயும் தெரிந்து எழுதலாயிற்று. என் வம்ச பரம்பரை யாய்ப் பட்டம் ஆண்டு கொண்டு வருகிறவர்களுக்கு 'சீலி நாயகர்' என்றதும் பட்டப் பெயராய் வழங்கிக்கொண்டு வருகிறது.

சீல நாயகன் ருசுவு.

(கு.-பு.)—

இது 'காரைத் தொழுவம்' என்னுமூரிலிருந்து வந்த 15-ம் பட்டம் பாளை யக்காரன் 'மசையாண்டி சீலம நாயக்கனது' முன்னோர்களின் வரலாற்றினை யெடுத்து உணர்த்துகின்றது. 'இராயர்' ஸமஸ்தானத்தில் 'வீரநரஸிம்ம'

ராயரிடம் அமர்ந்திருந்த 'பாலம் சித்தம்' நாயகரது புதல்வர் எழுவருள் ஒருவரான நாலாம் புத்திரர் 'சீல முத்த' நாயகருக்கு ஷெ இராயரால் அமராவதிக்கு மேற்கேயுள்ள நிலப்பரப்பில் பாளையம் இடைக்கப்பெற்றும் துங்கவாவி, தாமரைப்பாடி, 'காரைத்தொழுவம்,' மஞ்சனப்பட்டி முதலிய ஊர்களைப் புதிதாக நிருமித்துக் 'காரைத்தொழுவங்' கிராமத்திலிருந்து பாளையம் செலுத்திவந்தார் என்றும், அப்பட்ட வரிசையில் தாம் 15-ஆம் பட்டதாரியென்றும் இன்னும் பலவும் இத்துள் கூறப்பட்டுள்ளன.

No. 2841. சிதம்பரவன்னியன் வம்சாவளி.
CIDAMBARAVANNIYAN VAMŚĀVAḶI.

Pages, 12. Lines, 22 on a page. Extent, 132 granthas.

Begins on fol. 100*a* of the manuscript described under D. No. 2829.

Complete.

A genealogical account of Cidambaravanniyan, a pāḷayagār of Ēḷāyiram paṇṇai.

Beginning :

ஏழாயிரம் பண்ணைப் பாளையக்காரன் சிதம்பர வன்னியன் வம்சவாளிக் கைபீது :—

ஆதிகாரணம் பூருவமாகிய தென்மதுராபுரிப் பட்டணத்திலே எழுந்தருளியிருக்கப்பட்ட சுவாமி சொக்கநாதரும் தேவி மீனாட்சியும் கடாட்சம் கூர்ந்து காரணம் விளைக்கவேண்டியக் கருணாலயம் சகத் பிரசித்தியாய் அறுபத்து நாலு திருவிளையாடற் கொண்டருளி அதில் ஒரு காரண விளையாட்டில் 'பன்றிக்குட்டிக்கு' அம்மன் திருமுலைப்பால் அமிருதம் கொடுத்ததில் அந்த வரப்பிரஸாத மகிமையினால் அப்பன்றிக் குட்டியின் சின்ன ஸ்வரூவம் நீங்கி மானிட வடிவாய் * * * *

End :

எங்கள் காலவசத்தால் கம்பெனியாரது மனதில் ஆயாசந் தோன்றிப் பூமியையும் சப்தி செய்து எலமும் போட்டு 'முத்துசாமி ஆண்டு கொண்டா(டி)னரையும் 'சென்னைப்பட்[டண]த்திலே' கொண்டு போய் வைத்திருந்து தீவாந்திரத்திற்கு அனுப்புவித்திருக்கிறார்கள். எங்களுக்குத் தாய் தகப்பனும் கம்பெனியே தாமே என்று நிரம்பவும் நம்பியிருக்கிறோம். ஆகையினாலே ஷெ முத்துஸ்வாமி ஆண்டுகொண்டாரையும் விட்டுப் பூமியையும் எங்கட்குச் சாரும்படிக்குத் தயைசெய்து காப்பாற்றி இரட்சிக்கவேண்டியது.

இந்தப்படிக்கு, முத்துஸ்வாமி ஆண்டுகொண்டார் தம்பி.

சிதம்பர வன்னியன்.

(கு-பு.)—

இது பாண்டி நாட்டு பாளையக்காரர்களுள் ஒருவனான, 'ஆண்டு கொண்டார்' என்னும் பட்டம் பெற்ற வன்னியர் மரபினிற்றோன்றிய 'சிதம்பர வன்னியன்' என்பவனது முன்னோர்களின் வரலாற்றினை ஈஸ்டு

இண்டியா கம்பெனிக்கு எடுத்துணர்த்தும் முறையிலமைந்துள்ளது. முதலிற் காணப்படும் எழாயிரம்பண்ணை என்பதற்கு ஆதாரம் ஒன்றும் இதுள் காணப்பெறவில்லை. முற்றுமிருக்கிறது.

No. 2842. குழையூர் கைபீயத்து.

KUḶAIYŪR KAIPĪDU.

Pages, 2. Lines, 21 on a page. Extent, 20 granthas.

Begins on fol. 106*a* of the manuscript described under D. No. 2829.

Complete.

A kaifieth giving an account of Kuḷaiyūr near Aravakkuricci.

Beginning :

தாராபுரம் துக்கடி அரவக்குறிச்சி தாலூகா 'குழையூர்' கிராமக் கைபீயத்து.

ஆதிகாலத்திலே பராபர வஸ்துவாகிய பரமேசுவரர் இந்த மாயா பிரபஞ்சத்தில் தேவர், அஸுரர், முனிவர், ரிஷிகள், ஸ்தாவர ஜங்கமங்களுக்கு முக்தி கொடுக்கும்படியாக ஆதி சக்தியாகிய பார்வதியைப் பத்திரக்காளியென்பதாக அவதரிக்கச் சொல்லி பிரம்மா, விஷ்ணு, சரஸ்வதி, தும்புரு நாரதர் முதலான பேரை மத்தள, தாள, வீணைகளை நாதிப்பிக்கச் சொல்லி

* * * * * * *

End :

மகாமேருவுக்கு நிகரான நாமதேயத்தையுடைய கனக கிரியின் மேலே எழுந்தருளிய வேலாயுதஸ்வாமி என்னும் பேர் வரலாயிற்று. இந்தத் தலமகாத்மியம் சைவபுராணத்திலும் ஸ்தல புராணத்திலும் சொல்லப் பெற்றிருக்கிறது.

(கு.-பு.)—

இது தாராபுரத்துக்கு அருகில் 'அரவக்குறிச்சி' தாலூகாவில் உள்ள 'குழையூர்' என்னும் சிவஸ்தலத்தின் மகிமையினை எடுத்துக்கூறுகின்றது. இந்தத் தலத்திற்கு 'குண்டலீபுரம்' எனவும் ஓர் பெயருண்டு. முற்றுமிருக்கிறது.

No. 2843. கூடலூர் தேவஸ்தானச் சிலாசாசனம்.

KŪḌALŪR DĒVASTHĀNACCILĀŚĀSANAM.

Pages, 2. Lines, 22 on a page. Extent, 25 grnthas.

Begins on fol. 107*a* of the manuscript described under D. No. 2829.

Complete.

Inscription on stone in the temple of God Śiva named Vikritīśvara at Kūḍalūr near Aravakkuricci.

Beginning :

தாராபுரம் துக்கடி அரவக்குறிச்சி தாலூகாவுக்குச்சேர்ந்த 'கூடலூர் விகிருதீச்வரஸ்வாமி' தேவஸ்தானத்தில் எழுதியிருக்கப்பட்ட சிலாசாஸனத்துக்கு நக்கல் :—

கோயில் உட்புறப் பிரகாரத்துத் தென்புறத்து நிருருதி மூலேயில் எழுதியிருக்கப்பட்ட சாஸனம் :—

சண்டேசுவர ஓலே * * * *

End :—ஸ்வஸ்தி ஸ்ரீ

கார்த்திகை மாதம் முதல் இக்காணி விழுக்காடு இவனுக்கு விலே ஒத்திகை சித்தத்துக்கு உரித்தாவதாகவும், இக்கரையால் வந்த சுவாதந்தரியங்களும் பெற்றுச் சந்திராதித்தர் வரையில் அனுபவிப்பாஞகை.

* * * * * * * * *

(ஒப்பம்) ஸ்ரீமகேசுவரப்பிரியன் கையெழுத்து.

(கு.-பு.)—

இது தாராபுரம் துக்கடி அரவக்குறிச்சி தாலூகாவில் இருக்கும் 'வெஞ்சமர்க் கூடலூர்' என்னும் ஊரிலுள்ள 'விகிருதீசுவரஸ்வாமி' கோவிலிற் காணும் சிலாசாஸனத்தின் பிரதியாகும். இத்துள் பாண்டியர் காலத்திய இரண்டு சாஸனங்கள் உள்ளன.

No. 2844. கூடலூர் தேவஸ்தான வரலாறு.

KŪḌALŪR DĒVASTHĀNA VARALĀṞU.

Pages, 6. Lines, 23 on a page. Extent, 72 granthas.

Begins on fol. 108*a* of the manuscript described under D. No. 2829.

Complete.

An account of the temple of God Śiva named Vikṛtīśvara at Kūḍalūr near Aravakkuricci by Periya Ayyan, one of the Kurukkaḷ of the temple.

Beginning :

தாராபுரம் துக்கடி அரவக்குறிச்சி தாலூகாவுக்குச் சேர்ந்த 'வெஞ்சமர்க் கூடலூர் விகிருதீசுவரஸ்வாமி' தேவஸ்தானம் குருக்கள் வேதாந்த பண்டிதன் ஸ்தானீக 'பெரிய அய்யன்' எழுதுவித்த ஸ்தல வரலாறு என்னவென்றல் :—

ஆதிகாலத்தில் பராத்பர தத்பர திகம்பர நிரந்தர சம்பூரண நிராலம்ப நிராதார நிர்மலமாகி அழிவின்றிப் புனிதமாகிக் களங்கமின்றி நித்தியமாய் * * * * * * * *

End :

இதைச் சோழராசா கேட்டுச் சலதாரையைக் கட்டிப்போட்டான். ஷ வெஞ்சமர் ராசா வெடிஞ்சு சோழராசா வெட்டிப்போட்டான். அப்போது

வெட்டுகிறபோது 'வெஞ்சமர் ராசா' என்பேர் என்றைக்கும் விளங்கத்தக்கதாக இவ்வூருக்குப் பெயர் கொடுக்கவேண்டுமென்ன 'அப்போது சோழராசா வெஞ்சமர்க்கூடலூர்' என்று பேர் கொடுத்தான். அதனாலே இவ்வூருக்கு 'வெஞ்சமர்க்கூடலூர்' என்று பேர் வரப்பெற்றது.

(கு.-பு.)—

இது கருவூருக்கு அருகில் அரவக்குறிச்சி தாலூகாவில் உள்ள 'வெஞ்சமர்க்கூடல்' என்று வழங்கப்பெறும் ஊரினது மகிமையினை எடுத்துணர்த்து கின்றது. இத்தலம் 'சுந்தரமூர்த்தி' நாயனாரால் பாடப்பெற்றது. 'கொங்கு' நாட்டுச் சிவத் திருப்பதிகள் ஏழனுள் இரண்டாவதாகும். இத்தலத்துக் கோயிலினது குருக்கள் வேதாந்த பண்டிதர் 'ஸ்தானீக பெரிய அய்யன்' என்பவரால் இவ்வரலாறு எழுதிவைக்கப்பெற்றதாகும். 'வெஞ்சமான் என்றுமொரு சமணவரசன்' இவ்வூரையாண்டிருந்து இறுதியில் சோழவரசனால் மாண்டுபோக நேரிட்டபொழுது அவன் தன் பெயரால் இவ்வூரை வழங்கல்வேண்டுமெனச் சோழனை வேண்டிக்கொள்ள அவனும் அவ்வாறே ஆகட்டுமென விட்ட பெயராகுமிது. இத்தலத்திலுள்ள சிவபிரானை வழிபட்டு நற்கதியடைந்தோர் பலராவர். முற்றுமிருக்கிறது.

No. 2845 தும்பிலாடிக் கிராமக் கணக்கு.
TUMBILĀḌI KKIRĀMAKKAṆAKKU.

Pages, 2. Lines, 20 on a page. Extent, 12 granthas.

Begins on fol. 111*a* of the manuscript described under D. No. 2829.

Complete.

Accounts of the Mirāś of Tumbilāḍi near Aravakkuricci in the possession of a Brahmin named Subbarāyan, son of Ardhanārīśvara Ayyar.

Beginning :

தாராபுரம் துக்கடி, அரவக்குறிச்சி தாலூகா 'வெங்கிளநாட்டுத்தும்பிலாடி'க் கிராமமிராசுக் கணக்கு. சிவப்பிராமண ஜாதியில் 'அர்த்தநாரீசுவர' அய்யன் குமாரன் 'சுப்பைய'னிடத்திலிருக்கப்பட்ட புராதனக் கணக்கு :—

மதுரை ஸமஸ்தானத்துக்குக் கர்த்தராகிய இராயரவர்கள் * *
* * * * *

மேற்படி 'வடகரை' நாட்டில் 'பிரம்மா' வினாலே சிருஷ்டிக்கப்பட்ட காரணூர்த் தமாய்ச் சிருஷ்ட்டிக்கப்பட்ட பிரம்மேசுவர தேவஸ்தானம் முதலான 'சரசுவதி நதீ' திரத்தில் இராயரவர்கள் தயைசெய்து 'சோமோபராக' புண்ணியகாலத்தில் அக்கிரகாரப் பிரதிஷ்டைபண்ணி * * * * * * *

End :

இதற்குப் பிற்காலம் ரத்தாக்ஷி வருஷம் முன்னாலே ஒரு பங்குக்குள்ள பணத்துக்குப் பூமியைப் பிறித்துச் சுத்தசாரியாய்ப் பிராமணர்களுக்கு விட்டுவிட்டார்கள். அது முதல் நூறு வருஷம் வரையிலும் பூமியை யனுபவித்துக்கொண்டு வருகிறது.

பிரம்ம தேசம் கணக்கு.

வேங்கடகிருஷ்ணய்யன் ருசுவு.
இராமசாமி அய்யர் ருசுவு.
பெரிய அவினாசி பட்டர் ருசுவு.
சங்கமேசுவர அய்யர் ருசுவு.
உமாபதி ருசுவு.

(தெலுங்கில்) நாரண பட்டர் ருசுவு.

(கு.-பு.)—

இது அந்தியூர் தாலூக்காவைச் சார்ந்த 'பிரம்மதேச' மென்னும் கிராமத்ினது பூருவவரலாற்றினை அக்கிராமத்து வித்துவன் மகா ஜனங்கள் கம்பெனியாருக்கு எடுத்துரைக்கும் வகையில் அமைந்துள்ளது. முற்றுமிருக்கிறது.

No. 2886. காவேரிபுரம் மிட்டா மணியக்காரர் கைபீது.
KĀVĒRIPURAM MIṬṬĀ MAṆIYAKKĀRAR KAIPĪDU.

Pages, 4. Lines, 18 on a page. Extent, 30 granthas.

Begins on fol. 18*a* of the manuscript described under D. No. 2876.

Complete.

An account of Kāvēripuram, given by a Maṇiyagār of that village. Andiyur taluk.

Beginning :

அந்தியூர் தாலூக்காவுக்குச் சேர்ந்த 'காவேரிபுரம் மிட்டா'வின் ரிமார்க்குகள் :—

கசுபா 'காவேரிபுரம்' செலகட்டேசுவரஸ்வாமி தேவஸ்தானம், அரங்கநாதசுவாமி தேவஸ்தானம், முக்கியப்பிராம்மண தேவஸ்தானம், அக்கிரகாரம் முதலான வர்தகர்கள் இருக்கப்பட்டது. ஷை இந்தப்பேட்டைக்கு வாயவிய மூலை கோட்டை. அந்தக் கோட்டைக்குள் 'பிரசன்ன வேங்கடரமண' சுவாமி கோவில். அந்தக் கோட்டையைக்கட்டுவித்ததும், வெளியில் கோட்டை கட்டுவித்ததும் 'மைசூர் தொட்டராசர்' கட்டிவைத்தது.

End :

க௲௮ள௲௵ ஏப்ரல்மீ˚ உ௰சஉ இல் 'காவேரிபுரம்' மிட்டா மணியக்காரர் எழுதிக்கொடுத்த கைபீது. ஷை மிட்டாவுக்குத் தாக்கலான மவுசே 'செங்கம்பாடி' என்கிற கிராமத்தில் காவேரி ஓரத்தில் ஒரு மலைக்கோட்டை இருக்கிறது. அதைக் கட்டிவைத்தது பூருவத்தில் பாளையப்பட்டார்கட்டுவித்தது *

காவேரிபுரம் மிட்டா மணியம்
வேங்கடேசய்யன் ருசுவு.

கணக்கு :—
காணய்யன் ருசுவு.

(கு.-பு.)—

இது அந்தியூர் தாலூக்காவைச் சார்ந்துள்ள காவேரிபுரம் மிட்டா மணியக்காரர் வேங்கடேசய்யன் என்னுமவர் ஷை ஊரினுடையவும், அதன் சுற்றுப்புறத்திலுள்ள நிலம், புலம், கோட்டை, மலை முதலானவற்றினுடையவும் பூருவோத்திரங்களை எடுத்துக் கூறும் முறையில் அமைந்துள்ளது. முற்றுமிருக்கின்றது.

NO. 2887. சிங்கம்பேட்டை மகா ஜனங்கள் கைபீது.
SIṄGAMPĒṬṬAI MĀHAJANAṄKAḶ KAIPĪDU.

Pages, 4. Lines, 18 on a page; Extent, 30 granthas.

Begins on fol. 19b of the manuscript described under D. No. 2876.

Complete.

An account of Śiṅgampēṭṭai given by the people of that village, Andiyūr taluk.

Beginning :

அந்தியூர் தாலூக்காவுக்குச் சேர்ந்த அக்கிரகாரம் ஒபளி குரிச்சி மிட்டாவுக்குத் தாக்கலான 'சிங்கம்பேட்டை' அக்கிரகாரம் மகாஜனங்கள் எழுதி வைத்துக் கொடுத்த கைபீயத்து என்னவென்றால் :—

பூருவத்தில் சாலிவாகன சகாப்தம் தனக்கு மேல்குரிச்சி கிராமத்துக்குச் சேர்ந்த 'சிங்கம்பேட்டை' என்று ஒரு பட்டி யிருந்தது. ஷை பட்டியில் தானே * * * * * * * * * * * * * * * * **

End :

இதற்குப் பிற்காலம் கம்பெனி சித்தார்த்தி வருஷம் சீமையானதுக்குப் பிற்பாடு சித்தார்த்தி ரௌத்திரி இரண்டு வருஷத்துக்கும் 'பேரீசு' பிரகாரம் மகா ஜனங்களே சர்க்காருக்குக் கொடுத்து வந்தோம். * * * *

இதற்குப் பிற்காலம் இரக்தாக்ஷி வருஷத்தில் பிராமணர்களுக்கு மூன்றில் ஒரு பங்கு பாகம் பூமியும் பிரித்துக்கொடுத்து இதுவரைக்கும் நடந்து வருகிறார்கள்.

கணக்கு வேங்கடரமணய்யர் ருசுவு.

(கு.-பு.)—

இது அந்தியூர் தாலூக்காவிலிருக்கும் குரிச்சி மிட்டாவுக்குத் தாக்கலான 'சிங்கம்பேட்டை' யென்னும் கிராமத்தின் வரலாற்றினை அவ்வூர் மகா ஜனங்கள் எடுத்துக் கூறும் வகையிலமைந்துள்ளது. இக்கிராமத்திற்குப் 'பிரௌடதேவமகாராயபுரம்' என மற்றொரு பெயருமுண்டு. 'பிரௌடதேவ மகாராயர்' என்பவரால் இக்கிராமம் அவ்வூர் மகா ஜனங்களுக்கு ஒரு புண்ணிய காலத்தில் தானமாகக் கொடுக்கப்பட்டதெனக் குறிக்கப்பட்டிருக்கிறது.

NO. 2888. ஆண்டிக்குளம் மகா ஜனங்கள் கைபீது.
ĀṆḌIKKUḶAM MAHĀJANAṄKAḶ KAIPĪDU.

Pages, 4, Lines, 18 on a page. Extent, 30 granthas.

Begins on fol. 21*a* of the manuscript described under D. No. 2876.

Complete.

An account of Āṇḍikkuḷam given by the people of that village, Andiyūr taluk. Coimbatore district.

Beginning :

௲௮௱௭௰௫ ஏப்ரல்மீ 25உ 'மேஜர் காலன் மெக்கன்ஸி' சாகெப்பு அவர்கள் சர்க்காருக்கு கோயமுத்தூர் ஜில்லா அந்தியூர் தாலூக்கா அக்கிரகாரம் ஒபளி பவானிக் கூடல் மிட்டா பயிகிமவுசே 'ஆண்டிக்குளம்' அக்கிரகாரம் மகா ஜனங்கள் எழுதிக்கொடுத்த கைபீயத்து என்னவென்றால் :—

பூருவத்தில் சகாப்தம் ௲௬௱௨௰-க்கு மேல் 'ஆண்டிக்குளம்' என்கிறது 'பவானிக்கூடல்' கிராமம் கசுபாவுக்கு உடம்படியாயிருந்தது. ஷெ ஆண்டிக் குளத்து ஏரியின்கீழே இருக்கிற நஞ்சை நிலம் யாவத்தும் சுப்பா சாஸ்திரிகள் சுப்பிரமணிய தீட்சிதர் முதலான மகாசனங்களுக்குச் சுரோத் திரியமாய் *

End :

அது முதல் அக்ஷய வருஷம் வரைக்கும் ஷெ சுவயம் இச்சா பூமி அனுபவித்துக்கொண்டு வருகிறோம். இது நடந்த பூருவோத்திரம்.

சுப்பிரமணிய சாஸ்திரி ருசுவு
இலக்ஷ்மண அய்யங்கார் ருசுவு.
அண்ணு தீட்சிதர் ருசுவு.
வெங்கடகிருஷ்ண வாத்தியார் ருசுவு.

(கு.-பு.)—

இது 'கோயமுத்தூர்' ஜில்லா 'அந்தியூர்' தாலூக்கா 'பவானிக்கூடல்' மிட்டாவைச் சார்ந்த 'ஆண்டிக்குளம்' என்னும் கிராமத்தின் பூருவோத் திரங்களை அவ்வூர் மகா ஜனங்கள் 'மெக்கன்ஸி' துரையவர்கட்கு எடுத்துக் கூறும்வகையிலமைந்துள்ளது. முற்றுமுளது.

No. 2889. மயில்ரங்கம் திரிஞான சம்பந்த வள்ளல்ப் பண்டாரம் கைபீது.

MAYILRAṄGAM TIRIÑĀNASAMBANDHA VAḶḶALPPAṆḌĀRAM KAIPĪDU.

Pages, 5. Lines, 17 on a page. Extent, 42 granthas.

Begins on fol. 22b of the manuscript described under D. No. 2876. Complete.

An account of Tiriñānasambandha vaḷḷalppaṇḍāram of Mayilraṅgam, Gāṅgēyam taluk, near Dhārāpuram.

Beginning :

தாராபுரம் துக்கடிக்குச் சார்ந்த காங்கையம் தாலூக்கா மவுசே வெள்ளைக்ககோவில் மிட்டா 'மயில்ரங்கத்திலே யிருக்கும் திரிஞான ஸம் பந்த வள்ளல்' என்னப்பட்ட பண்டாரத்தினுடைய கைபீயத்து என்ன வென்றால்—

பூருவத்திலே ஒரு காரணமாய்ச் 'சுப்பிரமணிய சுவாமி சீகாழிபுரம்' வாசமான கௌணிய 'கோத்திரமான' சிவபாதவிருதய ரானவர்க்குப் புத் திரனுகப்பிறந்து சீகாழிபுரத்தில் வாசமாயிருக்குங் காலத்தில் * * *

தனக்குப் பக்தனுயிருக்கப்பட்ட பூவைசிய சாதியாயிருக்கப்பட்ட 'திருநேரி தேசிகர்' என்னப்பட்டவருக்கு உபதேசம் பண்ணி * * * * * * * *

End :

சாலிவாகன சகாப்தம் ௲ ௵க்கு மேல் எங்கள் கூடஸ்தரான சட்டனுத பண்டாரம் என்னப்பட்டவர் சிவபணிவிடை பண்ணிக்கொண்டு இருக்குமிடத்தில் * * * * * * * * * * * * * * * * *

(கு.-பு.)—

இது 'மயில்ரங்கம்' 'திருஞானசம்பந்த வள்ளல்' என்னும் பண்டாரத்தினது மடத்தின் பூருவோத்தரங்களை எடுத்துணர்த்துகின்றது. முற்றுமுள்ளது.

No. 2890. மேட்டுப்புத்தூர் ஜைன தேவஸ்தானம் கைபீது.

MĒṬṬUPPUTTŪR JAINADĒVASTHĀNAK KAIPĪDU.

Pages, 4. Lines, 17 on a page. Extent, 35 granthas.

Begins on fol. 25*a* of the manuscript described under D. No. 2876.

Complete.

An account of Jaina temple at Meṭṭupputtūr, Peruntuṛai taluk, Coimbatore district.

Beginning :

கோயம்புத்தூர் ஜில்லா பெருந்துரை தாலூக்கா விஜயமங்கலம் மிட்டா மவுசே 'மேட்டுப்புத்தூர்' ஜைனமதம் பஸ்தி கோவில் தேவஸ்தானம் ஸ்தானீகம் 'மலையப்பன்' எழுதிக்கொடுத்த பைபீயத்து என்னவென்றால் :—

பூருவத்தில் 'சந்திரநாத' சுவாமிக்கு 'ஆதீசுவரன்' என்றும் பேருண்டு. கலியுகத்திற்குப் பூருவத்திலே உண்டான கோவில் கலியுக சகாப்தம் அறுநூறு வருடத்தில் மதுரை சமஸ்தானத்தில் பிரபுத்துவம் பண்ணப்பட்ட 'சாமுண்டராயர்' என்கிறவர் ஜீரணோத்தாரணம் பண்ணுவித்தார்.

End :

அபிநந்த நாய்ச்சியார் (க) சரசுவதி அம்மன் க. இப்படிப்பட்ட விக்கிரகங்கள் ராசயிஎ. கோவில் கோபுரத்தின்மேல் அநேகங்களாயிருக்கின்றன.

(கு.-பு.)—

இது கோயம்புத்தூர் ஜில்லா 'பெருந்துறை' தாலூக்கா 'விஜயமங்கலம்' மிட்டாவைச் சேர்ந்துள்ள 'மேட்டுப்புத்தூர்' என்னு மிடத்திலுள்ள ஜைனர் கோயில் 'சந்திரனத' சுவாமி தேவஸ்தானத்தைப்பற்றிய பூருவோத்தரவரலாறுகளையும், 'சாமுண்டராய' ராலான ஜீரணோத்தாரண திருப்பணிகளையும், மற்றுஞ் சில திருப்பணிகளையும் எடுத்துணர்த்துகின்றது. இது மு

கோவில் ஸ்தானீகம் மலையப்பன் என்பவரால் எழுதிக் கொடுக்கப்பட்ட தெனத் தெரிகின்றது. இதன் பின்னர் 'அதிசய மலையம்மன் விருத்தம்' என்ற தலைப்பெயருடன் ஒரு செய்யுள் மட்டும் காணக்கிடைக்கின்றது.

No. 2891. மசகூர் மாந்தீசுவர சுவாமி வரலாறு.
MAŚAKŪR MĀNDĪŚUVARASVĀMI VARALĀṚU.

Pages, 5. Lines, 16 to 17 on a page. Extent, 55 granthas.

Begins on fol. 27*a* of the manuscript described under D. No. 2876.

Complete.

An account of Māndiśvarasvāmi temple at Maśakūr, Gāṅgēyam taluk, near Dhārāpuram.

Beginning :

தாராபுரம் துக்கடி 'காங்கையம்' தாலூக்கா 'வள்ளியாசலம்' மிட்டா சுபா 'மசகூரிலிருக்கும்' 'மாந்தீசுவரசுவாமி' தேவஸ்தான வரலாறு :—

பூருவத்தில் ஈசுவரனுனவர் பராபரமாய் ஏகமாய் நிரஞ்சனமாய் நிர்மல மாய் *

End :

மேலே எழுதப்பட்டதுக்குத் தகவலாயிருக்கப்பட்ட சிலாசாஸனங்களும், தாம்பிர சாஸனங்களும், காலாந்தரங்களிலே ராஜீகங்களிலே கல்லுச்சாஸ ஞங்கள் * * * ஒன்றுக்கொன்று மாருட்டமாய்ப் போயிருக்கின்றன. மேலே யெழுதப்பட்ட விவரங்கள் எங்கள் பரம்பரையிலே எங்கள் பெரியவர்கள் சொல்லக்கேள்வியினுலேயும் புராணப்பிரசித்தியினுலேயும் எழுதப்பட்டது.

(கு.-பு.)—

இது 'மசகூர் மாந்தீசுவரசுவாமி' கோவில் தேவஸ்தானத்தினுடைய பூருவோத்தர வரலாறுகளை யெடுத்துக்கூறுகின்றது. இவ்வூருக்குச் சுவர்ண புரம் வள்ளியறச்சாலை, சௌந்தரியபுரம், சுகந்தவனம் என்ன வேறு பல பெயர்களு முண்டெனத் தெரிகின்றது.

No. 2892. வள்ளியறச்சாலை மாந்தீசுவரர் கோவில் சிலாசாஸனம்.
VAḶḶIYAṚACCĀLAI MĀNDĪŚUVARAR KŌIL ŚILĀŚASANAM.

Pages, 5. Lines, 14 on a page. Extent, 7 granthas.

Begins on fol. 29*b* of the manuscript described under D. No. 2876.

Incomplete.

Inscription on stone in the temple of God Śiva named Māndiśuvara svami at Vaḷḷiyaṛaccālai village (Maśakūr).

Beginning :

'வள்ளியறச்சாலே' இராமம் 'மாந்தீசுவர சுவாமியார்' சந்நிதியில் ஸ்ரீ 'சுப்பிரமணிய' சுவாமி சந்நிதி திருநிலேக்காலில் எழுதியிருக்கப்பட்ட சிலா சாஸனத்துக்கு நக்கல் :— * * * * * * * * * * * * * * *

End :

'மாந்தீசுவரம்' உடையாருக்கு அமுதுபடிக்கு 'மாந்தை' நகரில் மூன்று மாத்திரை பூமி கொடுத்தோம். (இதுக்குக் கீழே பத்து அட்சரம் போயிருக்கின்றன. தெரியவில்லே. மெத்தவும் போயிருக்கிறது. அதனுலே தெரியாத அட்சரம் எழுதவில்லே).

மகேசுவர ரகைஷ.

ஹுஅாஎ௵ ஜூலேமீ உ௰அ உ.

(கு.-பு.)—

இது 'வள்ளியறச்சாலே' இராமத்தில் உள்ள 'மாந்தீசுவரசுவாமி' கோயி லுக்குள் 'சுப்பிரமணியர்' சன்னிதியில் இருக்கும் ஒரு சிலா சாஸனத்தினது பகுதியை யெடுத்துணர்த்துகின்றது. 'இது வீரப்பிரதாப பாண்டிய'ரது காலத் தியதெனத் தெரிகின்றது. முழுதுமில்லே. இவ்வள்ளியறச்சாலே யென் னும் இராமம் முன் நம்பரில் குறிக்கப்பட்டுள்ள 'மசகூரே'யாகும் எனத் தோற்றுகின்றது. அதன் குறிப்பையும் காண்க.

No. 2893. இராம சந்திரபுரம் கைபீது.
IRĀMACANDIRAPURAM KAIPĪDU.

Pages, 4. Lines, 18 on a page. Extent, 20 granthas.

Begins on fol. 29*b* of the manuscript described under D. No. 2876.

Complete.

An account of Rāmacandirapuram (Ellaikkāḍu), Gāṅgēyam taluk, near Dhārāpuram.

Beginning :

தாராபுரம் துக்கடி 'காங்கையம்' தாலூகாவுக்குச் சேர்ந்த மவுசே வெள்ளேக் கோவில் தாக்கல் எல்லேக்காடு 'இராமசந்திரபுரம்' சுரோத்திரிய அக்கிரகாரம் 'யக்ஞ நாராயணதீட்சிதர்' 'சுந்திர சாஸ்திரி' முதலான நாங்கள் அனேவரும் எழுதிக்கொடுத்த கைபீயத்து என்ன வென்றால் :—

பூருவத்தில் சாலிவாகன சகாப்தம் ஙாஅ௵க்கு மேல் நொய்யலாற் றுக்குத் தெற்கு, கோடாத்துக்கு வடக்கு, வெள்ளேக்கோவிலுக்குக் கிழக்கு, காட்டு முன்னூறுக்கு மேற்கு: இந்த நாற்பாங்கு எல்லேக்கு உட்பட்ட நிலம் காடு கொண்டிருக்கும் காலத்தில் அப்படி அரணியமாய் இருக்கப் பட்ட நிலம் சாலிவாகன சகாப்தம் ஹுசுாகூ௰ரு-க்கு மேல் விஜய வருஷம் பங்குனிமீ உ௰எ உயில் 'வத்ஸகோத்திர'மான 'யக்ஞ நாராயண தீட்சிதர்' முதலான மகாஜனங்களுக்கு ஷ நிலம் முழுமைக்கும் சுரோத்திரிய அக்கிரஹாரமாக 'அசரத்து-அயிதர் அலிகான் பகதூர்' அவர்கள் 'எல்லேக் காடு' 'இராமச்சந்திரபுரம்' என்கிற பேரும் வைத்துப் பரமானுய் எழுதிக் கொடுத்தார்கள்.

End :

மேலெழுதிய காலங்களிலே வியத்தியாசமில்லை. அப்படிக்கு ஏதா கிலும் வியத்தியாசம் வந்தால் கம்பெனிக்கு [நெ] (நி)ரஸ்தனுய்ப் போவேன் ஆகவும் ஆனந்த வருஷம் ஜூலை மீ ௩௨ தமிழ் அக்ஷய வருஷம் ஆனி மீ உ௰௩௨.

யஜ்ஞ நாராயண தீக்ஷிதர் ஒப்பிதம்.

(கு.-பு.)—

இது தாராபுரத்துக்கு அருகிலுள்ள 'காங்கேயம்' தாலூக்காவிற்கு சேர்ந்த 'எல்லைக்காடு' 'இராமச்சந்திரபுரம்' என்னும் சுரோத்திரியக் கிராமத்தின் பூருவோத்தரங்களை அவ்வூர் மகா ஜனங்களான 'யஜ்ஞ நாரா யண தீட்சிதர்,' 'சுந்தர சாஸ்திரி' உள்ளிட்டார் எடுத்துணர்த்தும் முறை யில் அமைந்துள்ளது. முற்றுமுளது.

No. 2894. மயில்ரங்கம் தசதிக்கு தேவஸ்தானம் வைத்தியநாதசுவாமி ஸ்தல வரலாறு.

MAYILRAṄGAM DAŚADIKKU DĒVASTHĀNAM VAIDDIYA-NĀTHASUVĀMI TALAVARALĀṞU.

Pages, 4. Lines, 17 on a page. Extent, 30 granthas.

Begins on fol. 31*a* of the manuscript described under D. No. 2876 .

Complete.

A legendary account of God Vaidyanāthasvami of Daśadikku dēvasthanam at Mayilraṅgam, Gāṅgēyam taluk, near Dhārāpuram.

Beginning :

தாராபுரம் துக்கடி 'காங்கையம்' தாலூக்கா மவசே 'வெள்ளைக்கோவில்' கிராமம் தாக்கல் 'மயில்ரங்கம் தசதிக்கு தேவஸ்தானம் வைத்தியநாத சுவாமியார் கோவில் தலபுராணக் கைபீத்து நக்கல் :—

பூருவத்தில் 'சுப்பிரமணிய' சுவாமியானவர் 'சூர' சங்காரம் பண்ணிக் கொண்டு வருகிறபோது 'அம்மிரவதீ' தீரத்தில் சகலமான தேவதை களுடனே கூட உத்தர பாகத்தில் வருகிறபோது சிவ பூசை காலத்தில் கதம்பவனத்தில் சிவபூசை பண்ணலாமென்று தேவதைகளெல்லாம் சொன்னதினலே 'சுப்பிரமணிய' ரானவர் மனதிலே சிவத்தியானம் பண் ணிக்கொண்டு தேவதைகளுடனே நாமம் 'மயில் ரங்கர் ஓம் என்று' சொன்னமாத்திரத்தில் * * * * * * * * * * * * * *

End :

இப்படிப்பட்ட மகா ஸ்தலத்துக்குச் சக்கிரவர்த்திகள் முதலான ராஜாக்கள் பரம்பரையாய்த் திருப்பணி முதலானதும் செய்வித்து நித்தியப்படி பூசை முதலானவைகளும் உச்சவங்களும் வையாசி மீ விசாக நட்சத்திரம் இரதோத்ஸவமும் பிரதி வருடம் நடக்கும்படியாய்ப் பூமிகளும் விட்டு

நடப்புவித்துக்கொண்டு வந்தார்கள் என்று எங்கள் வமிச பரம்பரை யாய்ச் சொல்லக்கேள்வியினாலே எழுதப்பட்டது. இவைகட்குத் தாக்க லான ஆதரவுகள் காலாந்தரத்திலே ராஜீகங்களிலே கை சோர்ந்து போய் விட்டன. ௲௮௱௭௰௯ ஜூன்மீ ௩௰௳.

(கு.-பு.)—

இது 'காங்கேயம்' தாலூக்காவில் 'மயில் ரங்கம்' தசதிக்கு தேவஸ் தானம் வைத்தியநாத சுவாமி கோயில் தலத்தினது பூருவோத்தரங் களை யெடுத்துணர்த்துகின்றது. இவ்வூருக்குத் தேவர் கோன்புரம், தேவ புரம், அகஸ்தியபுரம், முசுகுந்தபுரம் என் வேறு பெயர்களும் உண் டெனத் தெரிகின்றது. முற்று மிருக்கின்றது.

No. 2895. காடையூர் காடையீசுவரர் தேவஸ்தானக் கைபீயத்து.

KĀḌAIYŪR KĀḌAIYĪŚUVARAR DĒVASTHĀNAK KAIPĪDU.

Pages, 4. Lines, 17 on a page. Extent, 30 granthas.

Begins on fol. 32*b* of the manuscript described under D. No. 2876.

Complete.

A legendary account of Kāḍaiyīśvarasuvami of Kāḍaiyūr dēvasthānam, Gāṅgēyam taluk, near Dhārāpuram.

Beginning :

தாராபுரம் துக்கடி காங்கையம் தாலூகாவுக்குச் சேர்ந்த 'காடையூர்' கிராமம் காடையீசுவரசுவாமி தேவஸ்தானக் குருக்கள் ஸ்தானீகன் எழுது வித்த கைபீயத்து :—

பூருவத்தில் ஆதிகாலத்தில் 'துவாதசாந்த' ஸ்தலமான 'மதுரை'யில் மாறியாடின சம்பிரதாயம் நூற்றெட்டுத் தானமார்க்கத்தையே ஆம்பிர வதி காஞ்சிமா நதியில் சுந்தரமான 'இதழி வன' க்ஷேத்திரத்தில் பக்க சாக்ஷியாயிருக்கப்பட்ட * * * * * * * * * * * * * * * *

End :

இவைகட்குத் தக்ஷணாயிருக்கப்பட்ட 'தாம்மிர சாஸனங்கள்' முதலான ஆதரவுகள் எல்லாம் காலாந்தரங்களிலேயும் ராஜீகங்களிலேயும் கை சோர்ந்து போய்விட்டன. ௲௮௱௭௰௯ ஜூலைமீ ௩௰௳.

இந்தப்படிக்குச்
சொக்கையன் ஒப்பிதம்.
குழந்தையன் ஒப்பிதம்.
சின்னக்காடையூர் சிதம்பரய்யன்.

(கு.-பு.)—

இது காங்கேயம் தாலூக்காவைச்சார்ந்த 'காடையூர்' என்னும் கிராமத் திலுள்ள 'காடையீசுவர' தேவஸ்தானத்தினது பூருவோத்தரங்களையெடுத் துணர்த்துகின்றது. மதுரைக்கொப்பான வித்தலத்தில், சிவபெருமான் அநவரத தாண்டவம் செய்ததுபற்றி இதற்கு 'நடனபுரி' என்றும் 'பாண்டிய'

ன்ஒருவனுக்காக போர்க்களத்தில் 'காடை'யுருக்கொண்டு பகைவனது யானையின் காதினுட் சென்று படையை முறியடித்த காரணமாய்க் 'காடையூர்' என்றும் வேறு பெயர்களுமுண்டு. முற்றுமுளது.

No 2896. காங்கேயம் அகத்தீசுவரர்கோயில் கைபீது.
GĀṄGĒYAM AKATTĪŚUVARAR KŌYIL KAIPĪDU.

Pages, 8. Lines, 18 on a page. Extent, 70 granthas.

Begins on fol. 34*a* of the manuscript described under D. No. 2876.

Complete.

A legendary account of God Śiva named Akattiśvara at Gāṅgēyam near Dhārāpuram. Given by a Kurukkaḷ Sthānikar named Ālālasundaram.

Beginning :

தாராபுரம் துக்கடி காங்கையம் தாலூக்காவுக்குச் சேர்ந்த கசுபா 'காங்கேயம் அகத்தீசுவரஸ்வாமி' தேவஸ்தானம் குருக்கள் ஸ்தானீகம் எழுதுவித்த வரலாறு கைபீயத்து :—

பூருவத்தில் ஆதிகாலத்திலே ஸ்ரீ 'கைலாச' பருவதத்திலே பராத்பரராய் பராசக்தியாய் சிவசுத்தியாய் * * * * * * * * * * * * * *

End :

என்று எங்கள் பரம்பரையிலே அறியப்பட்டது. மேலே எழுதிய கலங்களுக்குத் தகவலாயிருக்கப்பட்ட 'தாம்ர சாஸனம்' முதலான ஆதாவுகளெல்லாம் காலாந்தரங்களிலே இராசரிகங்களிலே கை சோர்ந்து போய் விட்டன.

குருக்கள்—

ஆலால சுந்தர பண்டிதர் ஒப்பிதம்.

இந்தப்படிக்கு ஸ்தானீகம்—

நாகய்யன் ஒப்பிதம்.

(கு.பு.)—

இது தாராபுரத்தருகிலுள்ள காங்கேயம் தாலூக்கா கசுபா 'காங்கேயம்' என்னுமிடத்துள்ள 'அகத்தீசுவர'ஸ்வாமி கோயிலின் பூருவோத்தரங்களை விரிவாயெடுத்துணர்த்துகின்றது. இத்தலத்துக்கு ஆறுதொழு, பாகீரதி தீர்த்தம், செண்பகவனம், சம்பகபுரம், அகத்தீசுவரம், கதம்பவனம், சுவர்ணமுக தடாகம், சிங்கபுரம் என வேறு பல பெயர்களுமுண்டெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நான்கு யுகங்களிலும் இன்னின்னார் இந்த க்ஷேத்திரத்தில் கடவுளை வழிப்பட்டு இன்னின்ன வரங்கள் பெற்றார்களென்றும் கூறப்பட்டிருக்கிறது. முற்றுமுள்ளது.

No. 2897. திருவியங்கூர்மலை மேலைக்கோபுர வாசற் சிலாசாஸனம்.

TIRUVIYAṄKŪRMALAI MĒLAIKKŌPURAVĀŚAṞ CILĀŚĀSANAM.

Pages, 5. Lines, 18 on a page. Extent, 36 granthas.

Begins on fol. 37*b* of the manuscript described under D. No. 2876.

Complete.

Inscription of stone in the temple of Tiruviyaṅkūrmalai.

Beginning :

'திருவியங்கூர்மலை' மேலைக் கோபுரவாசற் கீழ்ப்புறத்து மதிலில் இருக்கப்பட்ட வரி உயிசல் எழுதப்பட்ட சிலாசாஸனத்துக்கு நக்கல் :—

ஸ்வஸ்தி ஶ்ரீ

நமஸ்துங்க ஶிரஶ்சும்பி சந்த்ர சாமர சாரவே |
த்ரைலோக்ய நகராரம்ப மூலஸ்தம்பாய ஶம்பவே ||

ஸ்வஸ்திஶ்ரீ விஜயாப்யுதய சாலிவாகன சகாப்தம் ௲சாஙடுசுஹு இதன்மேற் செல்லாநின்ற ஈசுவர ஸம்வத்ஸரம் ஶ்ரீமந் மகா மண்ட லெசுவர அரிஅரராய விபாடன் பாஷைக்குத் தப்பு வராத கண்டன் கண்ட நாடுகொண்டு கொண்டநாடு கொடாதான் தக்ஷிண சமுத்திராதி பதி வீரப்ரதாப ஶ்ரீ 'வீரகிருஷ்ண தேவ' மகாராயர் 'சோழமண்டலம்' விஷ்ணுஸ்தானம் சிவஸ்தானம் முதலான தேவஸ்தானங்களில் சோம சூரவரி புறவரி * * * * * * * * * * * * * * * *

End :

குழித்தண்டல் சீமை உட்பட்ட விஷ்ணுஸ்தானம், சிவஸ்தானம், தேவஸ் தானங்களில் பூருவம் முதலாக அரண்மனைக்கு இருந்துவருகிற சோம சூலவரி ஆயகம் ஸ்தனயாதிக்கம் பதிணுயிரம் பொன்னிலே உண்டவல்லி அநந்தசாயி கெசவாடை ? 'மல்லிகார்சுன தேவர்' சந்நிதியிலே தாராபூரு வகமாகச் சருவ மானியமாக விட்டுச் 'சிலாசாஸனம்' எழுதுவித்துப் பூசை புரஸ்காரமும் அங்கரங்க வைபவமும் திருப்பணி சாங்கோபாங்கமாய் நடத் திக்கொண்டு சுகத்திலே இருக்கவும். இந்தத் தருமத்துக்கு * * * *

(கு.பு.)—

இது 'திருவியங்கூர்' மலை மேலைக்கோபுறவாசற் கீழ்ப்புறத்திற் காணப் பெறும் சிலாசாஸனம் ஒன்றையெடுத்து உணர்த்துகின்றது.

No. 2898. சிதம்பரம் கோவிந்தராஜ சுவாமி கோவில் சிலாசாஸனம்.

CIDAMBARAM GŌVINDARĀJASUVĀMI KŌVIL ŚILĀŚĀSANAM.

Pages, 6. Lines, 16 on a page. Extent, 57 granthas.

Begins on fol. 39*b* of the manuscript described under D. No. 2876.

Complete.

Inscriptions on stone in the temple of God Viṣṇu named Gōvinda-rājasvami at Cidambaram.

Beginning :

சிதம்பரம் 'கோவிந்தராஜ' சுவாமி கோவிற் கோபுரத்துக்குத் தென் புறச் சாஸனம் :—

ஸ்ரீமந் 'மஹா மண்டலேசுவரன் ஸ்ரீரங்கராயர் ராஜ்யம் பண்ணியருளா நின்ற சகாப்தம் கூருாகூரு இதற்குமேற் செல்லாநின்ற பாநு ஸம்வத்சரம் பங்குனிமீ௳ எ வ பஞ்சமி சுக்கிர வாரம் பெற்ற இரேவதீநட்சத்திரநாள் 'திருச்சித்திரகூட' மதில் 'தில்லை கோவிந்தராஜ'ஸ்வாமிக்கு 'ஸ்ரீரங்கராயர்' * * * * * * * * * * அர்தத்தின்படி பெருமாள் கோவில் சீரணோத்தாரணம் பண்ணின கைங் கர்யம் :—

கோவிந்தராஜஸ்வாமி சந்நிதி முன் சந்நிதி முன் பெரிய திருமண்டபம் சந்நிதி திருக்கோபுரம் 'புண்டரீகவல்லி' நாய்ச்சியார் அம்மன், திவ்ய விமானம், 'சூடிக்கொடுத்த நாய்ச்சியார்' அம்மன் திவ்விய விமானம் திருவாழியாழ்வான் சந்நிதி முன் மண்டபம் * * * * * * * * *

End :

மற்றும் திருக்கோவிலுக்கு வேண்டின ஊழியம் நம்பிமார் முதல் குப்பையெடுப்பான் கடை கடைத்து கட்டளைக்குக் கட்டளையிட்ட உத்தரவுப் படி ஊழியம் உண்டானதெல்லாம் அவரவர்கள் காணிய ட்சியாகக் கொண்டு அந்தவந்தப்படிக்குச் சந்திர சூரியர்கள் பர்யந்தம் ரம்பரை யாக ஊழியம் பண்ணி விநியோகங்கள் உண்டானது பெற்றுவரக்கடவ தாகவும்.

(கு.பு.)—

இது 'தில்லை, திருச்சித்திரகூடம்' என வழங்கப்பெறும் 'சிதம்பரம்' என்னுமிடத்துள்ள 'கோவிந்தராஜ' சுவாமி கோயில் சந்நிதி கோபுரத் துக்குத் தெற்கிலே காணப்பெறும் சிலாசாஸனத்தை யெடுத்துணர்த்துகின் றது. மற்றும், 'அச்சுத தேவராயர்' சுவாமியைப்பிரதிஷ்டை பண்ணச்செய் வித்ததும் துவஜஸ்தம்ப மண்டபத்துக்குக் கிழக்கில் காணப்பெறுவதுமான ஒரு சாஸனத்தையும் எடுத்துக்கூறுகின்றது. அதில் இக்கோயிலுக்காக அவர் விட்ட சருவ மானியங்களைப்பற்றி விளக்கப்பட்டிருக்கிறது. மூற்று மிருக்கின்றது.

No. 2899. திருவெள்ளரைக் கைபீயத்து.

TIRUVEḶḶAṚAIKKAIPĪDU.

Pages, 4. Lines, 18 on a page. Extent, 35 granthas.

Begins on fol. 42*a* of the manuscript described under D. No. 2876.

Complete.

An account of the temple of God Śri Puṇḍarīkākṣa at Tiruveḷḷarai, Trichinopoly district.

Beginning :

திருவெள்ளரைக்கைபீது.

ஸ்ரீ 'புண்டரீகாக்ஷப்' பெருமாள் எழுந்தருளி அறுபத்துநாலு சதுர்யுக மாயிற்று. 'சிபி' சக்கிரவர்த்திக்கும், பூமிப்பிராட்டிக்கும், மார்க்கண்டேயருக்

கும் பிரத்தியக்ஷம். * * * * * * * * * * * * * * * * *
'சிபி சக்கிரவர்த்தி' மகாராஜா கோபுரங்களும் பிராகாரங்களும் கட்டுவித்து அந்தர்வேதியிலிருந்து மூவாயிரத்தெழுபத்தொருவர் பிராமணர்களை வரவழைத்து அக்கிரஹாரப் பிரதிஷ்டையும் பண்ணுவித்து * * * * * * நூறு கிராமம் கோவிலுக்குச் சருவமானியமாய் நடந்துவந்தது. * * *

End :

இது ஆதி முதல் நாளதுவரைக்கும் நடந்த வரலாறு எழுதிவித்தோம். இதுக்குமேல் நாங்கள் அறிந்ததில்லை. இதுக்குமேல் முன் தொரைகளிடத்தில் தாக்கல் பண்ணியிருந்தாலும் இனிமேல் விசாரணைமேல் விசாரணையிலே தாக்கல் பண்ணினாலும் கம்பெனிக்கு உட்பட்டு நடந்து கொள்ளுவோமாகவும்.

(கு.பு.)—

இது திருச்சிராப்பள்ளிக்கு அடுத்துள்ள 'திருவெள்ளரை'யென்னும் விஷ்ணுஸ்தலம் தோன்றி அதில் விஷ்ணு புண்டரீகாக்ஷர் அவதரித்த வரலாறு முதலாயினவற்றை எடுத்துணர்த்துகின்றது. முற்றுமுளது.

No. 2900 திருவெள்ளரை ஸ்தலக்கைபீயத்து
TIRUVEḶḶARAISTHALAKKAIPĪDU.

Pages, 5. Lines, 18 on a page. Extent, 50 granthas.

Begins on fol. 44*a* of the manuscript described under D. No. 2876.

Complete.

A legendary account of the local sacred importance of the temple of God Viṣṇu named Puṇḍarīkākṣa at Tiruveḷḷarai, Lalkudi taluk, Trichinopoly district.

Beginning :

திருச்சினாப்பள்ளி கசுபா 'லாலுகுடி' தாலூக்கா 'திருவெள்ளரை' ஸ்தலக் கைபீயத்து :—

பூருவம் க்ஷீராப்தியில் ஸ்ரீ மாகவிஷ்ணுவானவர் போகிசயனராய் இருந்த காலத்திலே ஒரு காரணார்த்தமாய் இந்தக் 'கேதகீ' வனத்திலே சஞ்சாரம் பண்ணவேணுமென்று வந்தார். அப்போது 'வால்மீகி'யானவர் ஒரு வேடராய் இந்தக் காட்டிலே சஞ்சாரம் பண்ணிக்கொண்டிருந்தார்.

அப்போது அந்த 'வேடன்' ஸ்ரீ மகாவிஷ்ணுவைப்பார்த்து மந்த புத்தியினாலே, அம்பினாலே எய்யப்போகிற சமயத்திலே அவனிடத்திலே கடாக்ஷம் தோன்றி அவனுக்கு ஞானம் வரப்பண்ணினார். அப்போது அந்த வேடன் ஞானத்தினாலே தெரிந்துகொண்டு சுவாமியைப் பிரதக்ஷணம் பண்ணி நமஸ்காரம் பண்ணினான். அந்த வேடனுக்குப் போகிசயனராய்ச் சுந்தரராஜப் பெருமாள் பிரத்தியக்ஷமானார். அதி சௌந்தர்யமாய்ப் பிரத்தியக்ஷமானபடியினால் அப்பெயர் வந்தது. வடிவழகிய நம்பி, ரூபநாராயணசுவாமி அந்த வேடன் பேரிலே பிரேமையாய்ப் பிரத்தியக்ஷமானபடியினால் 'பிரேமபுரி' க்ஷேத்திரம் என்று பேரும் ஆயிற்று. இந்தத் தலமகிமை 'விஷ்ணு புராண'த்திலே பூருவ பாகத்திலே எட்டு அத்தியாயங்களில் சொல்லப்படுகிறது.

End:

உத்ஸவம் மகாராஜ மானியராஜ ஸ்ரீ 'ஆந்திராஸ்' (Andres) துரையவர்கள் நாளையிலே ஒரு வருஷகாலம் ரதோத்ஸவம் நடந்து வந்தது. அதுக்குப் பிற்பாடு உத்ஸவமில்லை. சுற்றுப்பிராகார மண்டபம் சீரணமாயிருக்கிறது. இந்தத் தலத்து ஆதீனபரர்கள் சுந்தரராம அய்யர், அய்யாத்துரை அய்யர் மற்று அநந்த கொத்துப் பரிஜனகுலத்தார் எழுதி வைத்த ஊழியம். உ௯௫உ.

(கு.பு.)—

இது திருச்சினுப்பள்ளி ஜில்லா, 'லால்குடி' தாலூக்காவுக்குச் சேர்ந்த 'வெள்ளரை'யென்னும் விஷ்ணுஸ்தலத்தினது பூருவோத்திர வரலாறுகளை எடுத்துணர்த்துகின்றது. முன் பிரதிக்கு இது வேறானது. முற்றும் இருக்கின்றது.

No. 2901. சிதம்பர தேவஸ்தானச் சிலா சாஸனம். CIDAMBARA DĒVASTHĀNACCILĀŚĀSANAM.

Pages, 14. Lines, 17 on a page. Extent, 100 granthas.

Begins on fol. 46*a* of the manuscript described under D. No. 2876.

Complete.

Inscriptions on stone in the temple of God Śiva named Tillai Naṭarājasvāmi at Cidambaram, South Arcot district.

Beginning:

சிதம்பர தேவஸ்தானச் சிலாசாஸனம் 'சனீசுவர' பகவானுக்கு வடக்குக் கீழ்வரி பெரியப்பட்டயம் :—

ஸ்ரீ சகல புவன சக்கிரவர்த்திகள் அவனியாளப்பிறந்தான். ஸ்ரீ கோப்பெரு நெடுங்கை தேவருக்கு யாண்டு எட்டாவது, சோழ சேரன் ஓலை சொன்னவன் பிரம ராயரும் ஜயதுங்க பல்லவராயரும் தில்லையம்பல பல்லவராயரும் உடையார் திருச்சிற்றம்பலமுடையார் கோவில் ஸ்ரீ மகேசுவரருக்குக் கண்காணி செய்வார்க்கும் தரும ஸ்ரீ காரியஞ் செய்வாருக்கும், சமுதாயஞ் செய்வாருக்கும், கோவில் நாயகம் செய்வார்களும், திருமாளிகை கூறு செய்வார்களும், கணக்கர் கண்டு விடுத்ததாவது * * * * * * * * * * * * * * * * * * *

End:

'கொண்டப்ப நாயக்கர்' அவர்களுக்குப் புண்ணியமாகக் கட்டளையிட்டபடியினாலே இந்தக் கிராமம் எழும் சந்திர, சூரியர்கள் உள்ளவரைக்கும் நம்முடைய கட்டளையை அனுபவித்துக்கொள்ளக் கடவார்களாகவும் * * * * * * (இந்தச் சிதம்பர சாஸனம் இவ்விடத்தில் நின்றிருக்கிறது. இதற்கு மேல் சில கடிதாசு போயிருக்கின்றன.)

(கு. பு.)—

இது சிதம்பரத்து எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ 'நடராஜப் பெருமா'னினது கோயிலிலே ஆங்காங்குக் காணப்பெறும் சிலாசாஸனங்களைப் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். நான்கு சாஸனங்கள் இதுளுள்ளன. முற்றுமிருக்கின்றது.

No. 2902. கொழுமு சோழீசுவர சுவாமி கோயில் சாஸனம்.
KOLUMU ŚŌLĪŚUVARASUVĀMI KŌIL ŚĀSANAM.

Pages, 9. Lines, 18 on a page. Extent, 75 granthas.

Begins on fol. 53a of the manuscript described under D. No. 2876.

Complete.

Inscriptions on stone in the temple of God Śiva named Śōlīśvarasvami at Kolumu, Cakragiri taluk, near Dhārāpuram.

Beginning :

தாராபுரம் துக்கடி 'சக்கிரகிரி' தாலூக்கா 'கொழுமு சோழீசுவரசுவாமி' கோவிலிலே யிருக்கப்பட்ட சாஸனத்துக்கு நக்கல் :—

விமானத்துக்குப் பின்புறத்தில் எழுதியிருக்கப்பட்ட சாஸனம் :—

ஸ்ரீ மேலாகிய ராஜ சிங்கமாய் இருக்கப்பட்டவன் இராஜாக் களுக்கெல்லாம் மேலானவன் மூன்று லோகத்தையும் ஆளப்பட்ட சக்கிர வர்த்தி 'கொங்கு' தேசத்தையும் தன் தேசத்தையும் ஒன்றாக ஆளப்பட்ட வன் ஸ்ரீ 'வீர சோழ' தேவர்க்கு யாண்டு இருபத்தொன்றாவது இந்தச் 'சதுர்வேதி மங்கல'த்திலே வாசம் பண்ணப்பட்ட 'தலைக்கண்டார்' செட்டியும் ராஜகண்டிய தேவனும் செய்யப்பட்ட தருமம். ஆளுடையார் 'வீர சோழீ சுவர'முடையாருக்கு அமுதுபடிக்கு * * * * * * * * * * *

End :

இறையிலியாக உதகபூர்வமாகக் கொடுத்தோம். இப்படிக் கொடுத்த இவ்வகரத்துக்கு உட்பட்ட நிதி நிக்ஷேப தரு பாபஷாண சித்த சாத்திய அஷ்டபோக தேச சுவாமியங்களும் இவ்வகரங்களில் மகா ஜனங் களுக்குச் சந்திராதித்தர்வரை செல்லுவதாகச் சருவ மானியமாகக் கொடுத்தோம். இப்பத்திர சாஸனப்படியே செம்பிலும், சிலையிலும் வெட் டிக்கொண்டு அனுபவித்துக்கொள்ளுவாரகவும்.

(கு.-பு.)—

இது தாராபுரம் துக்கடி சக்கரகிரி தாலூக்காவைச் சார்ந்த 'கொழுமு' என்னும் கிராமத்துக்குரிய சாஸனங்களை யெடுத்துணர்த்துகின்றது. மூன்று சாஸனங்கள் இதுள்ளிருக்கின்றன. முற்றுமுள்ளன.

No. 2903. கடத்தூர் அர்ச்சுனேசுவர ஸ்வாமி கோயிற் சிலாசாஸனம்.
KAḌATTŪR ARJUNĒŚVARASVĀMI KŌYIṞ CILĀŚĀSANAM.

Pages, 10. Lines, 17 on a page. Extent, 85 granthas.

Begins on fol. 57a of the manuscript described under D. No. 2876.

Complete.

Inscriptions on stone in the temple of God Śiva named Arjunēśvarasvāmi at Kaḍattūr, Cakragiri taluk, near Dhārāpuram.

Beginning :

தாராபுரம் துக்குடி சக்கிரகிரி தாலூக்காவைச் சேர்ந்த 'கடத்தூர்' சுரோத்திரிய அக்கிரஹாரத்தில் 'அர்ச்சுனேசுவர'ஸ்வாமி கோவில் சன்னிதி வாசல் தென்புறம் எழுதியிருக்கப்பட்ட சிலாசாஸனத்துக்கு நக்கல் :—

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன 'விக்கிரம சோழ' தேவருக்கு யாண்டு உயக ஆவது 'பரசோழ சிங்க தேவன்' செய்யப்பட்ட தருமம் :—'கடத்தூர்' ஆளு டையார் 'திருமருதுடையார்' எனக்கு (நோய்) தீர்த்தமையில் இந்

நான்ஞருக்கு 'திரு அர்த்த சாமத்'துக்கு நாள் ஒன்றுக்கு 'அரிசி' குருணிக்கு நாய நீர் வார்த்துவிட்ட நிலமாவது கரை வழி நாட்டுக் 'கண்ணுடிப்புத்தூர்' வடபாரிசத்தில் இருக்கப்பட்ட நிலம். * * * * * * * * *

End :

தென் மதுரை 'சதுர்வேதிமங்கலத்து' மகா ஜனங்களுக்கு உதக பூருவக தரும தானமாக இறையிலியாகக் கொடுத்தோம்.* * * * * * * நாநா கோத்திர பிராமணர்களுக்கு அக்கிரஹாரம் வைக்கக் கொடுத்தோம். இப்பிரிவு அரைக்கும் ? சாஸனப் பிரமாணம் பண்ணிக்கொடுத்து இதுக்குப் 'புத்தூர்' என்றும் பேர் வைக்கப்பட்டது. கீழ்க் கல்லில். . . . இந்த மட்டும் எழுதி அப்பால் விட்டு இருக்கிறது.

(கு.-பு.)—

இது தாராபுரம் துக்கடி சக்கிரகிரி தாலூக்காவைச் சேர்ந்த சுரோத்திரிய வக்கிரஹாரமான 'கடத்தூர்' என்னுமிடத்துள்ள அர்சுனேசுவரசுவாமி கோயிலிற் காணப்பெறும் சாஸனங்களையெடுத்துணர்த்துகின்றது. நான்கு சாஸனங்கள் இதுளுள்ளன. முற்றுமிருக்கின்றது. கடையில் சிறு பகுதி மட்டுமே விட்டிருக்கிறது.

No. 2904. வயலூர் சிலா சாஸனம்,

VAYALŪR ŚILĀŚĀSANAM.

Pages, 4. Lines, 17 on a page. Extent, 28 granthas.

Begins on fol. 61*b* of the manuscript described under D. No. 2876. Complete.

Inscriptions on stone in the temple of Nāyanār at Vayalūr near Uṟaiyūr.

Beginning :

(வயலூர்க் கோயில்) அர்த்த மண்டபத்தில் நிரம்பவும் ஜீரணமாயிருக்கப்பட்ட சிலாசாஸனத்துக்கு நக்கல் :—

ஸ்வஸ்தி ஸ்ரீ சோழ 'ராஜாக்கள் குலோத்துங்க சோழ' தேவர்க்கு யாண்டு ௫௰௮ ஆவது 'உறையூர்' கூற்றத்து 'வயலூர்' . . . . . 'செயங்கொண்ட சோழ' . . . . . உட்பட்ட நிபந்தம் செய்து * * * * . . . .* * * * * * * இப்படி 'உறையூர்' கூற்றத்து 'வயலூர்' உடையாருக்கு நிபந்தநஞ் செய்துவிட்டோம்.

End :

இந் நிலத்தில் வன தரு பாஷாணம் எப்பேர்ப்பட்டதும் 'இருநூறு' செய்யும் தாமே சருவமானியமாகக் அனுபவித்து வருவதாகவும், ஊரை நீக்கித் தேவதானமாகச் சந்திராதித்தர் வரையில் நீங்களே சருவமானியமாக அனுபவிக்கக் கொடுத்தோம். வயலூர் ஊர (இருநூறு) நஞ்சை ஊர கிராமமும் இது பண்ணினது. ஸ்வஹஸ்தம் ஒப்பம் கூ கோடி.

(சு.-பு.)—

இது 'உறையூர்' கூற்றத்து 'வயலூ'ரிலுள்ள நாயனார் கோயிலுக்குள் ளிருக்கும் சாஸனங்களை யெடுத்துக்கூறுகின்றது. இதிலுள்ள சாஸ னங்கள் மூன்று. முதலிரண்டில் கிரந்த பாதமும், மூன்றாவது முழுவது மாகவிருக்கின்றன. அவைகளுளும் முதலாவது, 'குலோத்துங்க' சோழன் காலத்தியது. மற்றவை, 'கோபிராஜ கேசரி பாண்டியதேவர்?' காலத் தன.

No. 2905. வல்லங்கோட்டை சோழீசுவரன் கோவில் சிலா சாஸனம்.

VALLAṄKŌṬṬAI SŌḺĪŚUVARAN KŌVIL ŚILĀŚĀSANAM.

Pages, 19. Lines, 18 on a page. Extent, 150 granthas.

Begins on fol. 63*a* of the manuscript described under D. No. 2876.

Inscriptions on stone in the temple of God Śiva named Sōḷiśvara-svāmi at Vallaṅkōṭṭai.

Beginning :

'வல்லங்கோட்டை சோழீசுவரன்' கோவிலில் எழுதப்பட்ட சிலாசாஸனத் தைப்பார்த்து எழுதின வயணம். க-ஆவது கல்லில் எழுதியிருக்கப் பட்டது.

ஸ்வஸ்தி ஸ்ரீ கோ சடையப்பன் மாறன் திரிபுவன சக்கிரவர்த்திகள் 'பரதர்' பாண்டிய தேவராண்டு ௰உ-ஆவது மார்கழிமீ ஆதி நாள் பாண்டிய குலபதி வளநாட்டு எரியூர் நாட்டுக் கருவு குலவல்லித் துடையார் 'கரிகால் சோழீசுவர'முடைய நாயனார் கோயில் ஆதி சண்டே சுவரசுவாமி தேவகன்மிகளுக்கு ஸ்ரீ ருத்ர ஸ்ரீ ம[கா](கே)சுவரர் கண்காணி செய்வார்களுக்கும் இவ்வூர் நால்வரோம் இந் நாயனருக்கு முன் சாமங்கள் பூசைக்கும், திருப்பணிக்கும் கல் வெட்டிக்கொடுத்து * * * * * * * உப்புப் பொதி ஒன்றுக்கு நாலாக வந்த காசும் * * * * * * * *

End :

தஞ்சாவூர் இராச்சியத்தில் * * * * * * * * ௰உ-ஆவது:

இராசாவும் கொடுத்தவரும்.	உள்ளவிடம்.	பாஷை.	எழுத்து.	சகம்.	தருமம்.	இன்னருக்கு
வல்லத்து வாணிய நகரத் தோர்.	வல்லத்துக்கோட்டை தெய்வ னாயகப் பெருமாள் நாய னூர் கோவில் நிலை.	தமிழ்.	தமிழ்.	சோழதேவர்க்கு யாண்டு.	திருவிளக்கெண்[ணெ]ணெய்.	தெய்வநாயகப் பெருமாள் நாய னூர்.

(கு.-பு.)—

இது 'வல்லங்கோட்டை'யிலிருக்கும் 'சோழீசுவரன்' கோயில் 'தெய்வ நாயகப் பெருமாள்' நாயனுருக்கு உரிய கல் வெட்டுகளையெடுத்து உணர்த்து கின்றது. இதுள்ளிருக்கின்ற கல் வெட்டுகள் பன்னிரண்டாம். (௰உ) அவைகட்கு உரிய அட்டவணையொன்றும் இறுதியேட்டில் எழுதப்பெற் றுள்ளது.

No. 2906. திண்டுக்கல் ஜமீன்தார் வம்சாவளி. DINDUKKAL JAMĪNDĀR VAMŚĀVAḶI.

Pages, 27. Lines, 18 on a page. Extent, 245 granthas.

Begins on fol. 72 *b* of the manuscript described under D. No. 2876.

Complete.

A genealogical account of the jamindars of Dinḍukkal given by Āraṇi Guruvappa.

Beginning :

மகாராஜ ராஜ ஸ்ரீ 'கர்ணல் மெக்கன்ஸி' சாயபு சர்வேயர் ஜெனரல் ஆப் இண்டியா துரையவர்களுக்கு, ஆஜருக்கு 1816-ம் ஞு (௲அ௱௰௬) செப்டம்பர்மீ ௫ உ தரியாபத்து நிட்டல நாயகன் அய்யன். திண்டுக்கல் பட்டணத்துக்கு இராசாவாகிய வெகுமான பட்டம் கம்பெனியார் பட்டங் கட்டிவைத்த ஆ. 'வெங்கடசாமி நாயகர்' அவர்கள் குமாரனுகிய 'குருவப்ப நாயகர்' மிகவும் வணக்கத்துடனே எழுதிக்கொடுத்த எங்களுடைய வமிசாவளி வரலாறு என்னவென்றல் :—

சாலிவாகன சகாப்தம் ௲௩௱௯௰௩-ஞுக்கு மேல் ஆனந்த ஞு ஆரணியிலிருக்கும் எங்கள் பாட்டனுருக்குத் தம்பியராகிய 'ஆரணி இராம நாயகர்' அவர்கள் சகோதரர்களுடனே இரகச்சித்திரப்பட்டுத் தெற்கு நோக்கி புறப்பட்டுவரும் வழியில் கசுபா 'திண்டுக்கல்'லுக்குச் சேர்ந்த 'சீலைப்பாடி' இராமத்தில் வந்து சேர்ந்தார். * * * * * *

அக்காலத்தில் திண்டுக்கல்லுக்கு அதிகாரிகளாகிய 'மதுரை' சமஸ் தானத்துக்குக் கர்த்தராகிய 'மீனுட்சியம்மாள்' இராணிப் பட்டத்தில் அக்கா ரெட்டி, ரங்கா ரெட்டியார் நாளையில் ஷெயாரது பேட்டி கண்டுகொண்டு இருக்கும் நாளையில் கர்னுடக ஜனம் ௫௱ பேருக்குச் சர்தாராய் நியமித்து இருந்தார்கள்.* * * * * * * * * * * * * கோட்டையின் பேரி லேறிச் சண்டையானதிலே ஷெ யாருக்கு நெஞ்சில் அம்புக் காயம்பட்டு வீர சுவர்க்கமடைந்தார். ஷெ 'ராமண்ண நாயக'ருக்கு ஆண்டு ஞு அக்காலத்துக்குச் சாலிவாகன சகம் ௲௬௱௫௰அ ஞு விளம்பி ஸம்வத் ஸரம் என்று சொல்லப்படுகிறது. * * * * * * * * * *

End :

மேலெழுதிய வரலாற்றைக் கொண்டு எங்களது மானம் மரியாதை களையறிந்து மகாராஜ ஸ்ரீ கம்பெனியார் அவர்கள் எங்களை மானமாக ஸம் ரக்ஷணை பண்ணுவார்களென்று தங்களுடைய கவனத்தை மிகவும் கோரு கிறேன்.

தாது ஷூ ஆவணிமீ உயிந உ (தெலுங்கெழுத்தில்).

ஆரணி குருவப்ப நாயனி சேவராலு.

(கு.-பு.)—

இது 'திண்டுக்கல்' ஜமீன்தாரிகளுள் ஒருவரான 'ஆறணி' இராமண்ண நாயகரது பேரராகிய 'குருவப்ப நாயகர்' என்பவரால் தனது முன்னோர்களி னுடைய வரலாறுகள் 'மெக்கன்ஸி' துரைக்கு எடுத்துணர்த்தப்படும் வகை யில் அமைந்துள்ளது. மற்றும் அநேக ராசாக்கள் ஸேனாபதிகள் முதலானவர்களுடைய பெயர்களும் சரித்திரங்களும், இதுள் விளக்கப் பட்டிருக்கின்றன. முற்றுமிருக்கின்றது.

No. 2907. சிதம்பர சிலா சாஸனம்.

CIDAMBARA ŚILĀŚĀSANAM.

Pages, 8. Lines, 17 on a page. Extent, 60 granthas.

Begins on fol. 86*a* of the manuscript described under D. No. 2876. Complete.

Inscription on stone in the temple of God Śiva named Naṭarājasvami at Cidambaram, South Arcot district.

Beginning :

சிதம்பர சிலாசாஸனம் மூன்றும் பத்தியிலிருக்கும் சிலா சாஸனம் :—

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கிரவர்த்திகள் 'குலோத்துங்க சோழ தேவ' ருக்கு யாண்டு ச. எட்டாவது கும்பநாயத்து * * * * * * * * *

மூன்றும் மதில் சாஸனம்.

End :

பெரு வழிக்குத் தெற்கும் நடுவும் பட்ட நிலம் ஒன்றே இரண்டு மாவினால் வந்த கடமைகள். ஊரிலே யேற்றியிருக்கச் சந்திராதித்தர் வரையிலுமாக ஆதி சண்டேசுவர தேவர் திருநாமத்துக்காணி யெழுதித் தந்த மகா சபா நியோகம்.

இந்த 'மகாதேவ பட்டன்' இந்நாள் விழுக்காட்டிலே திருமடப்பள்ளிப் பண்டாரத்தே 'பலாப்பழம்' நாற் சாண் சுற்றிலே இரு நூறும் (200) மூன்றரைச் சாண் சுற்றிலே நூற்றைம்பதும் (150) முச்சாண் சுற்றிலே நூற்றைம்பதும் (150) ஆக ஐந்நூறும் (500) அமுதுபடிகாந்தரத்திலே (5,000) ஐயாயிரம் மாம்பழமும் மட்டிமாவுக்கு ஐயாயிரம் (5,000) வாழைப் பழமும் எண்ணித்தரக் கொள்ளவும். இட்ட திட்டம் ஒடுக்கிக் கல் வெட்டியது.

(கு.-பு.)—

இது 'சிதம்பரம்' கோயிற் சுவர்களில் ஆங்காங்குக் காணப்பெறும் சாஸனங்களை யெடுத்துணர்த்துகின்றது. இரந்த பாதங்கள் காணப்படு கின்றன. மூன்றாவது சாஸனத்தில் 'காஷிங்கராயன்' இப்படிக்குத் திருமாளிகையிலே கல் வெட்டவும் வேணும் என்று நமக்குச் சொன்னமை யில் இப்படிச் செய்யக்கடவதாகச் சொன்னோம் என்ற தொடர்மொழியும் காணகிறது.

No. 2908. திண்டுக்கல் ஆரணி விஜயவேங்கடபதி சாஸனப்பட்டயம்.

DINDUKKAL ĀṚAṆI VIJAYAVĒṄKAṬAPATI ŚĀSANAP-PATTAYAM.

Pages, 5. Lines, 17 on a page. Extent, 40 granthas.

Begins on fol. 89*b* of the manuscript described under D. No. 2876.

Complete.

A copy of the Śāsanappaṭṭayam of Vijayavēṅkaṭapati of Āṛaṇi, Dindukkal taluk.

Beginning :

திண்டுக்கல் ஆறணி 'விஜயவேங்கடபதி' ராஜா அவர்களுக்கு எழுதிக் கொடுத்த சாஸனப் பட்டயம் :—

அசலுக்குச் சரியான நகல் என்று சொல்லப்பட்ட நகல் கண்டு எழுதிய நகல்.

தரியாபத்து. நிட்டல் நாயன் அய்யன்.

சுபகிருது ௵ கார்த்திகை மீ" கூ௳ மகாராஜ ஸ்ரீ ஜர்னல் 'லாங் துரை' அவர்கள் திண்டுக்கல் ஆறணி விஜயவேங்கடபதி ராஜா பகதூர் அவர்களுக்கு எழுதிக்கொடுத்த சாஸனப்பட்டயம் என்னவென்றால் :—

தாங்கள் கர்னல் 'லிகுசீன்' துரை அவர்கள் உத்திரவின்பேரில் 'கம்பெனியார்' நிமித்தியமாய் பழனி 'பாலசமுத்திரம்' கோட்டையிலிருந்து 'அயிதர் அல்லிகான்' பேரிலே நாலாறுமாதம் சண்டைபண்ணி 'லிகுசீன்' துரைக்கு மக்குப்பண்ணுததினாலே * * * * * * * * * * * * ஷியார் மனசுவர நடந்துகொண்டதின்மேல் கர்னல் 'புல்ட்டன்' உங்க ளுடைய ஒத்தாசைபற்றி யெனக்கு நிரம்பவும் எழுதிக்கொண்டார். அது பார்த்து நான் உத்தரவு கொடுத்த முறைக்கு * * * * * * * * * * திண்டுக்கல்லுக்கு அனுப்புவித்து உங்களுகுத் திண்டுக்கல் பட்டங் கட்டு வித்து *

End :

என் சயினுடனே கம்பெனி பாவுடா சமுத்திரக்கரையில் இருக்கிற வரைக்கும் இந்த முறைக்கு நடப்பித்துக்கொண்டு வருவோம். ஆகவும் * * * * * * * * * * * * * * * * எழுதிக்கொடுக்கிறதில் நமக்கு வஞ்சனையாய் நடந்தால் பாரம்பரிய வஸ்துவுக்கு வஞ்சனை செய்தாப் போலே போகக்கடவதாகவும், இந்தப்படி எழுதிக்கொடுத்த சாஸனப் பட்டயம்.

(கு.-பு.)—

இது ஈஸ்ட் இண்டியா கம்பெனியாரது காலத்தில் அவர்களுக்குதவியாய் 'அமிதர் அல்லீகான்'பேரில் தண்டெடுத்து போர்செய்து உதவியதற்காக கர்னல் 'புல்லட்டன்' என்னு மொரு துரை 'விஜயவேங்கடபதி' என்னும் ஒருவருக்குச் சிறப்பாகத் திண்டுக்கல் பிராந்தியத்தில் பட்டங்கட்டுவித்துச் சாஸனமும் எழுதிக் கையொப்பமிட்டுக் கொடுத்த இச் செய்தியை எடுத்துணர்த்துகின்றது. ஆறணி யென்பது அவரது தலை நகர்போலும். 'அமிதர் அல்லீகான்' இருந்தது 'பழனி' 'பாலசமுத்திரம் கோட்டை' யெனத் தெரிகின்றது. முற்று மிருக்கின்றது.

No. 2909. பார்வதிபுரம் ஆருத்ர கபாலேசுவர சுவாமி தேவஸ்தானக் கைபீயத்து.

PĀRVATĪPURAM ĀRUDRAKAPĀLĒŚUVARASUVĀMI DĒVASTHANAKKAIPĪDU.

Pages, 6. Lines, 17 on a page. Extent, 45 granthas.

Begins on fol. 91*b* of the manuscript described under D. No. 2876.

Complete.

An account of the temple of God Śrī Ārudrakapālēśvarasvāmi at Pārvatīpuram village, Gāṅgēyam taluk, near Dhārāpuram.

Beginning :

தாராபுரம் துக்கடி காங்கேயம் தாலூக்காவைச் சார்ந்த 'பார்வதீபுர'க் கிராமம் மடவிளாகம் 'ஆருத்திர கபாலேசுவர'ஸ்வாமி தேவஸ்தானம் குருக்கள் ஸ்தானீகர்கள் எழுதிக்கொடுத்த கைபீயத்து என்னவென்றால் :—

பூருவத்தில் திரேதாயுகத்தில் 'பிரும்மதேவன்' பூசை பண்ணுகையால் இதழீபுரமும், வில்வவனமும், கர புஷ்க்கரிணீ தீர்த்தமும், பிரம்ம கபால நாதரும், விசாலாக்ஷி அம்மனும், வீரநாராயணப்பெருமானும் ஆனவர். * கலியுகத்தில் பூருவம் பார்வதி தபசுசெய்கையால் பார்வதீபுரம் என்றும் மடவளாகமும் காயாத கொன்றையும் சடைவன்னியும் நாக புஷ்கரணீ தீர்த்தமும் பச்சொட ஈசுவரரும் பெரிய நாயகியம்மனும் இரகுபதி நாராயணப் பெருமாளும் ஆனவர். * * * * * * * * * * * * * * * * *

End :

தாம்மிர சாஸனங்கள் முதலான ஆதரவுகள் காலாந்தரங்களில் கைசோர்ந்துவிட்டன க௲௭௱௭௰௨ ஜுலை௴ ௨௰௨௳.

'கூர்ம புராண'த்தில் 'வயிரவன் பலிகொண்ட அத்தியாய'த்தில் இத் தல புராண வரலாறு இருக்கிறது.

இப்படிக்கு,
குருக்கள்
வேதாந்த பண்டிதர் ஒப்பிதம்,
* * * * * * * * * * * * பச்சையன் ஒப்பிதம்.

(கு.-பு.)—

இது தாராபுரம் துக்கடி காங்கேயம் தாலூக்காவைத் சேர்ந்த 'பார்வதி புரம்' என்னும் கிராமத்திலுள்ள 'மடவளாகம் ஆருத்திர கபாலேசுவர' சுவாமியினது தேவஸ்தானத்தின் பூருவோத்திர வாலாறுகளை யெடுத் துணர்த்தும் இதைப்பற்றிய விபரங்களுக்கு 'கூருமபுராணம்' வயிரவன் பலிகொள் சருக்கத்தைச் காண்க. முற்றுமிருக்கின்றது.

No. 2910. ஊதியக்கிராமம் அப்ரமேயேசுவர சுவாமி தேவஸ்தான வரலாறு.

ŪDIYAGGIRĀMAM APRAMĒYĒSUVARASUVĀMI DĒVASTHĀNA VARALĀṞU.

Pages, 8. Lines, 17 on a page. Extent, 55 granthas.

Begins on fol. 94*a* of the manuscript described under D. No. 2876.

Complete.

An account of the temple of God Śrī Apramēyēsvarasvāmi at Udiyagramam village, Gāṅgēyam taluk, near Dharapuram.

Beginning :

தாராபுரம் துக்கடி 'காங்கேயம்' தாலூக்காவுக்குச் சேர்ந்த 'ஊதியக் கிராமம்' 'மஞ்சருமறவபாளையம்' தேவஸ்தானம் 'அப்ரமேயேசுவர ஸ்வாமி' தேவஸ்தானம் குருக்கள் ஸ்தானீகர் எழுதிவைத்த கைபீயத்து.

பூருவத்தில் * * * * * * * * * * * * * * * * * ஆதி காலத்திலே பராபரராகிய பரமேசுவரன் ஒரு காரணத்தினாலே 'தாருகா' வனத்தில் இரிஷிகள் செய்கிற யாகத்தை அழிக்கும்படியாய் பலிக் கெழுந் தருளி இரிஷி பத்தினிகள் கற்பையும் குலத்தையும் ? (அழித்து) யாகமும் முடியாதபடியினாலே * * * * * * * * * * * * * * * * *
'கன்னியா குமரி'த் தீவில் 'கொங்கு' மண்டலத்தில் திராவிட தேசத்தில் 'வராக கிரி'ச்சாரலில் 'சீதவனே'த்பவையாய் பார்வதி ஆம்ரவதீ (அமராவதி) யென்று பச்சிமவாகினியாய் * * * * * * * * * * * * *
'கொங்கண லிங்கம்' என்னும் பேர்வரப்பெற்றது என்று 'அப்ரமேயேசுவர புராணம்' என்றதில் 'கொங்கணச் சருக்கம்' என்றதில் சொல்லப்பட்டிருக் கிறது *

End :

தாம்மிர சாஸனங்கள் முதலானவை காலந்தரங்களில் கைசோர்ந்து போயின. சூஅாளஞூ ஜூலைமீ ௩௰கஉ.

மறவபாளையம் * * * * * * * * * * * * * தானீகம்.

நஞ்சையன் ஒப்பிதம்.
குட்டியன் ஒப்பிதம்.

(கு.-பு.)—

இது தாராபுரம் துக்கடி 'காங்கேயம்' தாலூக்காவைச் சார்ந்த 'மஞ்சரு மறவபாளையம்' எனப்படும் 'ஊதியக் கிராம'த்திலுள்ள 'அப்ரமேயேச்வர' ஸ்வாமியினது தேவஸ்தானத்தின் பூருவோத்தரங்களை அத் தேவஸ்தானத்துக் குருக்கள் ஸ்தானீகர்கள் எடுத்துக் கூறும்வகையிலமைந்துள்ளது. 'கொங்கணர்' 'இடை ஞானி' முதலானோர். இத்தலத்தில் சிவபிரானது காட்சி கண்டு ஞானோபதேசமும் பெற்றார்களெனத் தெரிகின்றது. இக் கடவுளினது பெருமைகளைக் கூறுவதாக அமைந்த 'அப்ரமேயேசுவர புராணம்' என ஒரு நூலிருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது. தொடக்கத்தில் காணப்பெறும் இரு செய்யுட்களும் எங்கிருந்து எழுதப்பட்டனவோ. முற்று மிருக்கின்றது.

No. 2911. கண்ணபுரம் விக்கிரம சோழேசுவர சுவாமி தேவஸ்தான வரலாறு.

KAṆṆAPURAM VIKKIRAMAŚŌḶĒŚUVARASUVĀMI DĒVASTHĀNA VARALĀṞU.

Pages, 6. Lines, 17 on a page. Extent, 40 granthas.

Begins on fol. 97*b* of the manuscript described under D. No. 2876.

Complete.

An account of the temple of God Śrī Vikramasōḷēśvarasvāmi at Kaṇṇapuram village, Gāṅgēyam taluk, near Dhārāpuram.

Beginning :

தாராபுரம் துக்கடி காங்கேயம் தாலூக்காவுக்குச் சேர்ந்த 'கண்ணபுரம்' கிராமம் 'விக்கிரமசோழேசுவர' தேவஸ்தானம் குருக்கள் ஸ்தானீகர் எழுதிக்கொடுத்த தலபுராணக் கைபீயத்து என்னவென்றால் :—

ஆதி காலத்திலே 'ஜலந்திரன்' என்கிற . . . . . என்னப்பட்ட தேவதைகளை அநேகமாய் யுகாதிபண்ணி 'பிரம்மதேவ'னுடனே சபதம் பண்ணிப் பிரம்மதேவன் நிர்வாகமில்லாதபடியினாலே பிரம்ம தேவரும் 'க்ஷீர சமுத்திர' வாஸராயிருக்கப்பட்ட 'மகா விஷ்ணு'வினிடத்திலே வந்து அபயஞ்செய்ய வேண்ட 'ஜலந்தரன்' என்னப்பட்ட அசுரனும் பிரும்மாவை என்வசம் ஒப்புவிக்கிறாயா இல்லையா வென வியவஹரித்து யுத்தம் பண்ணி 'விஷ்ணு' நிர்வாஹமில்லாமல் ஸ்ரீ'கைலாஸ'த்துக்கு வந்து பராபர பரமேசுவரனிடத்தில் அறிக்கை செய்ய * * * * * * * * * * * * * * *

End :

'சோழ ராசா' தன்னுடைய பிருமஹத்தி நிவாரணமாகும்படிக்கு இந்த க்ஷேத்திரம் யோக்கியமான ஸ்தலம் என்று சிவப் பிரதிஷ்டையும் பண்ணிப் பூஜை பண்ணினபடியாலே 'விக்கிரம சோழேசுவரன்' என்றும், 'வித்தகச் செல்வியம்மன்' என்றும், 'விக்கிரம சோழபுரம்' என்றும் பேர் வரப்பெற்றது * * * * * * * * * * * * * * * * *

ஆதாரமாயிருக்கப்பெற்ற தாம்ர சாஸனம் முதலான ஆதாரவுகள் ராஜீகங்களிலே கைசோர்ந்து போய்விட்டன.

ஆறுமுகம் ஜலேலமீர் உடிகூட எழுதியதற்கும்.
குருக்கள் கனகசபாபதி பண்டிதர் ஒப்பிதம்.
ஸ்தானீகம் வைத்யன் நல்லசாமி அய்யன் ஒப்பிதம்.

(கு.-பு.)—

இது தாராபுரம் துக்கடி காங்கேயம் தாலூக்காவைச் சார்ந்த 'கண்ண புரம்' என்னும் கிராமத்திலுள்ள 'விக்கிரம சோழேசுவர' ஸ்வாமியினது தேவஸ்தானத்தின் பூருவ வரலாறுகளை அத் தேவஸ்தானத்துக் குருக்கள் ஸ்தானீகர் இவர்கள் எடுத்துக் கூறும் வகையிலமைந்துள்ளது. இக் கிரா மத்திற்கு விக்கிரமசோழபுரம், கர்ணபுரம், சக்ரதானேசுவரம் என வேறு பெயர்களுமுண்டு. ஜலந்தரன், கர்ணன், விக்கிரம சோழன், விஷ்ணு முதலானோர் இத்தலத்தில் இக்கடவுளை வழிப்பட்டு வரம்பெற்றனர் எனவும் கூறப்பட்டிருக்கின்றது. முற்றுமுளது.

No. 2912. முந்தூர் மிட்டா சோழேசுவரஸ்வாமி தேவஸ்தானச் சிலா சாஸனம்.

MUNDŪRMIṬṬĀ SŌḺĒSUVARASUVĀMI DĒVASTHĀNAC CILĀ SĀSANAM.

Pages, 2. Lines, 17 on a page. Extent, 15 granthas.

Begins on fol. 100*a* of the manuscript described under D. No. 2876. Complete.

Inscription on stone in the temple of god Śrī Sōḷēśvarasvāmi at Mundūrmiṭṭā, Gāṅgēyam taluk, near Dhārāpuram.

Beginning :

தாராபுரம் துக்கடி காங்கேயம் தாலூக்கா மவுசே 'முந்தூர் மிட்டா' கசுபாவிலே இருக்கும் 'சோழேசுவர' சுவாமி தேவஸ்தானத்திலே இருக்கப்பட்ட சிலாசாஸனத்துக்கு நக்கல் :—

ஸ்ரீமன் ராஜமண்டலேசுவரன் * * * * * * * * * * * *
இம்மண்டலமும் எம்மண்டலமும் கொண்டருளி இராச்சிய பரிபாலனம் பண்ணின 'அநந்தராயர்' 'ஸ்ரீவீரமகாராயர்' 'தேவராய உடையா'ருக்கு * * * * * *

End :

'குலோத்துங்கசோழ' நாயனுருக்கு உதகங்கொடுத்த ஊராவது—கோவில் பள்ளி, 'சோமையநல்லூர்' நஞ்சை புஞ்சை தோட்டம் மேல் நோக்கிய மரமும் கீழ் நோக்கிய கிணறும் இதற்கு எப்பேர்பட்ட பாட்டங்களும் ஸ்ரீ 'குலோத் துங்கசோழேசுவர' முடையாருக்கு 'ஷட்கால' நிபந்தனங்களுக்கும் திருவாராதனம், அமுதுபடி, சாத்துப்படி, முதலானவை கட்டும் உண்டாவதாகக் கொடுத்து இப்படிக் கல்லிலேயும் வெட்டிக் கொள்ளவும்.

(கு.-பு.)—

இது தாராபுரம் துக்கடி காங்கேயம் தாலூகாவைச் சார்ந்ததான 'முந் தூர் மிட்டா'விலுள்ள 'குலோத்துங்க சோழேசுவரசுவாமி' தேவஸ்தானத்தினது வரலாறுகளையெடுத்துணர்த்துகின்றது. முற்றுமிருக்கிறது.

No. 2913. மசகூர் ஜைனபஸ்தி கோயில் சிலா சாஸனம். MAŚAKŪR JAINABASTI KŌYIL ŚILĀŚĀSANAM.

Pages, 4. Lines, 17 on page. Extent, 32 granthas.

Begins on fol. 101 of the manuscript described under D. No. 2876. Complete.

A copy of the stone inscription at the Jainabastikōyil of Maśakūr village, Vijayamaṅgalam Miṭṭa, Perunduṟai taluk, Coimbatore district.

Beginning :

கோயபுத்தூர் ஜில்லா, பெருந்துறை தாலூகா, விஜயமங்கலம் மிட்டா, மசகூர் ஜைனபஸ்தி கோவிலிலே எழுதியிருக்கப்பட்ட சிலா சாஸனத்துக்கு நக்கல் :—

ஸ்வஸ்திஸ்ரீமன் மகா மண்டலேசுவரன் * * * * * * * * * சதுஸ்ஸமுத்திராதிபதி ஸ்ரீ' சிக்கதேவராய உடையார்' குமாரன் ஸ்ரீ ' வீர ஹரிஹரராய உடையா'ருக்குச் செல்லா நின்ற தாரண ஷூ த்து ஐப்பசிமீ˚ உடுரு௳ சகர் சொர்க்கமாக் கோட்டைக்கும் * * * * * * * * * * * வெங்கரை நாடு, பேரூர்நாடு, குறுப்ப நாடு, மச்சநாடு, காழ நாடு, இப்படிக் கொத்த நாட்டில் நாட்டவரோம் குறும்பர் நாட்டகத்தில் ' விஜயமங்கல'த்து நாட்டார் அனைவருக்கும் நம்ம . . . . சாஸனம் பண்ணிக் கொடுத்த பரிசாவது. * * * * * * * * * * * * * * * * *

End :

குறும்ப நாட்டில் விஜயமங்கலத்தில் வெள்ளாளன் பட்டத்திலே திறலானைக் கௌடய்யன் சொக்கன் தீரன் திரக்கால் செய்தேன். (இன்னும் எட்டுவரிக்கு) அக்ஷரம் தெரியவில்லை. ஒன்பதாம் வரியில் அமுதுபடிக்கு.

(கு.-பு.)—

இது கோயமுத்தூர் ஜில்லா, பெருந் துறை தாலூகா, ' விஜயமங்கல மிட்டா,' ' மசகூர் ' ' ஜைன பஸ்தி'யிலெழுதியிருக்கப்பட்ட சிலாசாஸனங்களை யெடுத்து உணர்த்துகின்றது. இதன் மூன்று சாஸனங்கள் உள்ளன.

No. 2914. ஈரோடு தொண்டீசுவரசுவாமி கோயில் சிலா சாஸனம். ĪRŌḌ TOṆḌĪŚUVARASUVĀMI KŌYIL ŚILĀŚĀSANAM.

Pages, 5. Lines, 17 on a page. Extent, 42 granthas.

Begins on fol. 102*b* of the manuscript described under D. No. 2876. Complete.

Inscription on stone in the temple of god Śrī Toṇḍīśvara, Īrōḍ.

Beginning :

' ஈரோடு தொண்டீசுவரஸ்வாமி ' கோவிலில் இருக்கிற சிலாசாஸனம் :— நாயனூர் தெம்பயப் பிள்ளை சின்ன மந்திரியனுக்கும் ஆக இருவரும் வசம் ஆண்டாண்டு விளங்கும் குடி நலப்புன் வீரராயன் பொன் அன்பது பொன் (பதினஞ்சுக்கும்) இம்மாத முதல் ம நில- மாதமும் ? ஒன்றுக்குப்

பத்துப்பணமும் விபகம்—நாள் ஒன்றுக்கு ஒரு நேரத்துப் பூசைக்கு அமுது படி பத்து. பயத்தம்பருப்பு படி 2. கறி மூன்றுக்கு உப்பு. நெய் படி முக்கால். பழம் நாற்பது. வெற்றிலை ஆகத் தருமம் நடத்தக்கடவீராக வும்.

பெருமாள் கோவில் கருப்ப கிரகத்தில் கிழக்குப்பட்டிக் கவிறியில் எழுதியிருக்கப்பட்ட சிலாசாஸனம்.

